விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 தை 26 வியாழக்கிழமை (08.02.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 051

**கல்யாண மாலை**
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## ஒரே நாளில் மூடப்பட்ட பொன்னாலை வீதி

பாதுகாப்பு காரணம் என தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தரவின் பேரில் திறந்துவிடப்பட்ட பருத்தித்துறை - பொன்னாலை பிரதான வீதியை இராணுவம் மீண்டும் மூடியுள்ளது.

நேற்று முன்தினம் காலை இவ் வீதி மக்கள் பாவனைக்காக திறந்து விடப்பட்ட நிலையில் 23

## காங்கேசன்துறை கடற்பரப்பில் 22 மில்லியன் பெறுமதியான தங்கக் கட்டியுடன் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் காங்கேசன் துறை கடற்பரப்பினூடாக கடத்தி செல்லப்பட்ட 22 மில்லியன் ரூபாய் பெறுமதியான தங்க கட்டிகளானது காங்கேசன் துறை கடற்படையின 23



## 16 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஐஸ்கிறீம் விற்பனையில் ஈடுபடும் வாகனம் இனந்தெரியாத நபர்களால் தீக்கிரை

(கோப்பாய்)

ஐஸ்கீறிம் விற்பனையில் ஈடுபடும் வாகனம் ஒன்று இனந்தெரியாத நபர்களால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 3.10 மணியளவில் நீர்வேலி அரசகேசரி பிள்ளையார் ஆலய வீதியில் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவம் தொடர்பில் மேலும் 24



## சர்வதேச போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்தாததன் மூலம்

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழருக்கு துரோகமிழைத்துவிட்டது

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றச்சாட்டு

*(யாழ்ப்பாணம்)*

தமிழின அழிப்புக்கான சர்வதேச விசாரணையை தமிழர்கள் கோரி நின்றபோதும் அது உள்ளக விசாரணையுடன் நின்றுவிட்டது. இதனால் மகிந்த ராஜபக்ஷவும் இலங்கை இராணுவமும் காப்பாற்றப்பட்டு விட்டனர். இதனைச் செய்ததன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர்களுக்கு துரோகமிழைத்து விட்டது என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றஞ்சாட்டியுள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)



## இலங்கைக்கு வருகிறார் பிரித்தானிய எம்.பி

(கொழும்பு)

உத்தியோகப்பூர்வ விஜயம் மேற்கொண்டு பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் ரணில் ஜயவர்த்தன எதிர்வரும் 15 ஆம் திகதி இலங்கைக்கு வருகைதரவுள்ளார் என இலங்கையிலுள்ள பிரித்தானிய தூதரகம் தெரிவித்துள்ளது.

பிரித்தானிய பிரதமர் தெரேசா மேயின், இலங்கைக்கான 23

## த.தே.கூட்டமைப்பினர் நாட்டை பிளவு படுத்துகின்றனர்

உதய கம்மன் பில தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இன்றும் நாட்டை பிளவு படுத்தும் கொள்கையுடனேயே இருக்கின்றார்கள் என்ற விடயம் மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது என மகிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். 23

## தேர்தல் தினத்தன்று தமிழ் மாணவர்களுக்கு விடுமுறையில்லை

(யாழ்ப்பாணம்)

தென்பகுதியில் உள்ள பல்கலைக் கழகங்களில் கல்வி கற்கும் புதுமுக தமிழ் மாணவர்களை தேர்தல் கால விடுமுறையில் செல்வதற்கு அனுமதி வழங்கப்படாதது தொடர்பில் தேர்தல் திணைக் 23

## புலிகளின் தலைவர் பிரபாகரன் நாமத்தால் கிட்டுப்பூங்கா கரகோசத்தால் அதிர்ந்தது



(யாழ்ப்பாணம்)

ஆண்ட பரம்பரை மீண்டும் ஒரு முறை ஆள நினைப்பது என்ன தவறு? என்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் வசனத்தையும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடைய நாமத்தினாலும் நல்லூர் கிட்டு பூங்கா கரகோசத்தால் அதிர்ந்தது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரசார கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகர் கனகரட்ணம் சுகாஸ் உரையாற்றும்போதே இந் நிகழ்வு நடைபெற்றது. (ம-4)

## வாக்கு சாவடியின் 400 மீற்றர் பரப்பில் விசேட தடை உத்தரவு

(கொழும்பு)

வாக்கெடுப்பு நிலையமொன்றிலிருந்து 400 மீற்றர் பரப்பினுள் தடை செய்யப்பட்டுள்ள செயல்கள் பற்றி தேர்தல்கள் ஆணைக்குழு பொது மக்களுக்கு அறிவித்துள்ளது. 23

## கர்ப்பிணி படுகொலை விசாரணை அறிக்கை சென்றடையவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை பிரதேசத்தில் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டிருந்த கர்ப்பிணி பெண்ணான ஹம்சிகா கொலை தொடர்பான விசாரணையை குற்றப் புலனாய்வு பிரிவுக்கு மாற்றியமை தொடர்பான அறிக்கை 23

## எம்முடன் இணைந்தால் மட்டுமே உறுதியான தீர்வு

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களை பலப்படுத்தும் ஒரே தலைமைத்துவம் எம்மிடமே உள்ளது. தமிழ் மக்கள் எம்முடன் இணைந்து செயற்படுவதால் மட்டுமே உறுதியான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என எதிர்க்கட்சித் தலைவரும் 02

## மன்னார் சிலாபத்துறை பகுதியில் ஒரு கோடியே 54 இலட்சம் பெறுமதியான 154 கிலோ கஞ்சா பொலிஸாரால் கைப்பற்றல்



23

## காணாமல் ஆக்கப்பட்டோரை கொன்றே விட்டீர்களா?



மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் கேள்வி

(யாழ்ப்பாணம்)

காணாமல் ஆக்கப்பட்டோரை தேடிப் பார்த்தோம் காணவில்லை என்று ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார் என்றால் உங்கள் கைகளில் ஒப்படைக்கப்பட்டவர்களைக் கொன்று 23

## ஊழல் அரசியல்வாதிகளுடன் ஆட்சியமைக்கப் போவதில்லை

இறுதிப் பிரசாரத்தில் ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

ஊழல் நிறைந்த இடத்திலிருந்து நாட்டினை மாற்ற முடியாததாலேயே புதிய அணியில் இணைந்தேன். புதிய அணியும் ஊழல் நிறைந்த அணியாகவுள்ளது. இந்த நிலையில் புதிய பயணமே தேவைப்படுகின்றது. ஊழல்வாதி 23



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# உள்ளூராட்சி தேர்தலை புறக்கணிக்கும் வட மாகாண தொண்டராசிரியர்கள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண தொண்டராசிரியர்கள் தமக்கான நிரந்தர நியமனம் தொடர்பாக உரிய தீர்வு கிடைக்கப்பெறாவிட்டால் எதிர்வரும் உள்ளூராட்சிமன்ற தேர்தலை தாம் புறக்கணிப்பதுடன் தற்கொலை செய்துகொள்வதை விட வேறு வழியேதும் இல்லை என தெரிவித்துள்ளார்கள்.

நிரந்தர நியமனம் வழங்கக்கோரி நேற்றைய தினம் காலை வடமாகாண ஆளுநர அலுவலகம் முன்பாக மேற்கொண்ட கவனயீர்ப்பு போராட்டத்தின் போதே அவர்கள் இதனை தெரிவித்தார்கள்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

தாம் நீண்ட காலமாக தொண்டராசி ரியர்களாக கடமையாற்றிவரும் நிலையில் தமக்கு நிரந்தர நியமனம் இன்னமும் வழங்கப்படவில்லை. ஏற்கெனவே 860 தொண்டராசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க சட்டசபை பத்திரம் அனுமதி வழங்கியிருந்தது.

இவ்வாறான நிலையில் தற்போது அதில் 180 பேருக்கு எதிர்வரும் 15ஆம் திகதி நிரந்தர நியமனம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது இதில் வடமாகாணத்தில் நீண்ட காலமாக தொண்டராசிரியர்களாக கடமையாற்றியவர்கள் புறக்கணிக்கப்பட்டு புதியவர்கள் பலர் இணைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நியமனத்தை நிறுத்துவதுடன் ஏற்கெனவே வாக்குறுதி வழங்கியதற்கமைவாக வடக்கிலுள்ள சகல தொண்டராசிரியர்களுக்கும் ஒரே தடவையில் நிரந்தர நியமனம் வழங்க வடமாகாண ஆளுநர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதற்கான நடவடிக்கைகள் எடுக்க தவறும் பட்சத்தில் தாம் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளதுடன் முதற்கட்டமாக எதிர்வரும் உள்ளூராட்சி சபை தேர்தலை தாமும் தமது குடும்பங்களும் புறக்கணிக்க முடிவு செய்திருப்பதாவும் இவர்கள் தெரிவித்துள்ளனர். (ம-4)


SB TRAVELS &TOURS PVT LTD

IATA ACCREDITED AGENT

சகல நாடுகளுக்குமான விமானப்பயண டிக்கட்டுக்களை மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள



Hotline:0771083480/481

Our Services:

-Visa Arrangement for INDIA, MALAYSIA, BANGKOK போன்ற நாடுகளுக்கு செய்து தரப்படும்.

அத்துடன் Travel Insurance செய்து தரப்படும்

Colombo-15, Hotline:0112540280/ 0112540111

Colombo-13, Hotline:0112333222/ 0112334470

Colombo-06, Hotline:0112058625/ 0112361711

Jaffna –Hotline:0212229555/ 0212228555

Jaffna-Hotline:0212227666/ 0771083480/81

CHENNAI-19800/- (SL Airlines)

CHENNAI-18400/- (Onwards)

BANGALORE-23500/- (SL Airlines)

KOCHI-36500/-

TRICHI-34800/-

BOMBAI-36600/-

DELHI-46800/-

DOHA-34800/-(O/W)

LONDON-107000/-

MALAYSIA-31800/-(SL Airlines)

SINGAPORE-34500/-

BANGKOK-38800/-

TORONTO-154000/-(RT)

NARITA-83000/.-

PARIS-98800/-

CHAINA-75000/-

MELBOURN-109000/-

AUCKLAND-164000/-

Condition Apply




VISA/MASTER AMERICAN EXPRESS CARD ACCEPTED



(C-1522)

E-mail:Sbtravels99@yahoo.com Contact for Travel Insurance


# எம்முடன் இணைந்தால்...

தமிழ்க் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரிக்கும் தேர்தல் பிரசாரக் கூட்டம் நேற்று முன்தினம் சாவகச்சேரியில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இம்முறை தேர்தல் சாதாரண தேர்தலையும் விட விசேட முக்கியத்துவம் பெற்றுள்ள தேர்தலாக கருதப்படுகின்றது.

இதில் மும்முனைப் போட்டி இடம்பெற்று வருகின்றது. குறிப்பாக மகிந்த ராஜபக்ஷ மீண்டும் ஆட்சியினை கைப்பற்றும் நோக்கத்தில் செயற்பட்டு வருகின்றார். இந்த தேர்தலில் ஆட்சியை கைப்பற்ற முடியாது. என்றாலும் அதற்கான ஆரம்பமாக இது அமையும். ஆகவே இதில் தமிழ் மக்களின் நிலைப்பாடு என்ன என்பதே முக்கியமானதாக அமையவுள்ளது.

இந்த தேர்தல் முடிவடைந்த பின்னர் அரசியல் அமைப்பு விடயங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். அதற்கான நகர்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆகவே இவை அனைத்தையும் ஏற்படுத்த உந்துதலாக அமையப்போவது தமிழ் மக்களின் தீர்ப்புத்தான். எனவே, உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் ஏற்பட்டுள்ள நிலைமைகளை அறிந்து தமிழ் மக்கள் தமது கடமைகளை சரியாக செய்ய வேண்டும்என்றார்.(ம)

## தவறிவிட்டது

பலாலி வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகக் கொண்ட லோகேஸ்வரன் சிந்துஜா ஆகிய எனது மோட்டார் வாகன அனுமதிப் பத்திரமும் லோகேஸ்வரன் தனேஸ்வரி எனும் பெயரில் உள்ள (Insurance, Tax) கைப்பையுடன் 06.02.2018 அன்று இராமநாதன் வீதி, குமாரசாமி வீதிக்கிடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**0212220053, 0774168991** (269)

## மாற்றுவலுவுடையோருக்கான தொழிற்பயிற்சி பாடசாலை அனுமதி

சிவபூமி தொழிற்பயிற்சி பாடசாலை-கோண்டாவில்

மாற்றுவலுவுடையோருக்கான தொழிற்பயிற்சி பாடசாலையில் 18 வயதிற்கு மேற்பட்ட காதுகேட்புதிறன், வாய் பேச்சு திறன் குறைந்த இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

- அச்சுகூட பயிற்சி
- ஸ்கிறின் பிறிண்டிங் பயிற்சி
- கற்பூர உற்பத்தி
- விவசாய உற்பத்தி பயிற்சி *(ஒட்டு, நாற்று உற்பத்தி*

மேற்குறித்த மாற்றுவலுவுடையோருக்கு பயிற்சிகள் யாவும் இலவசமாக வழங்கப்படும்.

பயிற்சி முடிவில் சான்றிதழ்களுடன் கூடிய வேலை வாய்ப்பு ஏற்பாடு செய்து கொடுக்கப்படும்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

**சிவபூமி தொழிற்பயிற்சிப் பாடசாலை**
**கோண்டாவில், யாழ்ப்பாணம்**
**தொலைபேசி:021 222 7938** (2688)

## 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர்

**வள்ளியம்மை இராமநாதன்**



*அன்னையின் மடியில்*
*1934.09.17*

*இறைவன் மடியில்*
*2018.01.09*

*எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் அமைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் மறைவு செய்தி அறிந்து எமது துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் பதாகைகள் வெளியிட்டவர்களுக்கும் தொலைபேசி வாயிலாக பல வழிகளிலும் ஆறுதல் கூறி உதவி புரிந்தோருக்கும் எமது உள்ளம் நிறைந்த நன்றியை தெரிவித்துகொள்வதுடன் இன்று முற்பகல்10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.*

சிவன்கோயில் வீதி, சித்தன்கேணி. (சி-1524)

தகவல்:-பேரன் சஞ்தன் (பொலிஸ் அலுவலர், தலைமைப் பொலிஸ் நிலையம்-யாழ்ப்பாணம்)
பாசமிகு பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

**தர்மராசா வள்ளிப்பிள்ளை (அன்னமுத்து)**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 19 - 07 - 1945 | 19 - 01 - 2017 |



தாய்க்கொரு வார்த்தை தேடுகையிலே
தாய்மொழியில் எத்தனை பஞ்சம் வார்த்தைகளுக்கு
பசிபட்டினியை நீ சுமந்து
தனிமரமாக எமை ஆளாக்க அனைத்து
துன்பங்களையும் சுமந்து ஒளி தந்தவளே
உன் ஆவலின் எல்லை எமைக் கடந்து
ஒரு நாளும் விரிந்ததில்லை
எனினும் நாம் புரிந்து கொண்டோம்
நாம் பெற்ற பட்டமும் ஒவ்வொருவரது
சிறப்பான வாழ்க்கையும் நீங்கள் மறைத்த
ஆசைகளில் ஒன்றென...

இவரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையும் மதிய போசனமும் 08.02.2018 இன்று வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் என்பதையும் அனைவரும் இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறோம். (சி-1521)

இல.112, விவேகானந்த நகர், கிளிநொச்சி

அன்புடன் அழைக்கும் உங்கள் பிள்ளைகள்

# "கழுத்தை அறுத்துக் கொல்வேன்" தமிழர்களை பகிரங்கமாக அச்சுறுத்திய பிரிகேடியருக்கு மீண்டும் பதவி!

## ஜனாதிபதி மைத்திரி உத்தரவு

(கொழும்பு)

பிரித்தானியாவில் போராட்டத்தில் ஈடுபட்ட புலம் பெயர் தமிழர்களை "கழுத்தை அறுத்துக் கொல்வேன் என்று சைகை மூலம் பகிரங்கமாக அச்சுறுத்திய குற்றச்சாட்டில் பதவி நீக்கம் செய்யப்பட்ட பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்டுள்ளார்.






ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தரவின் பிரகாரம் அவர் மீண்டும் லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகராக தமது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டதாக ராணுவ ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் 70ஆவது சுதந்திர தினத்தை புறக் கணித்தும், இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தீர்வு வழங்கப்பட வேண்டு மென வலியுறுத்தியும் பிரித்தானியாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. இதன் போது கழுத்தில் கையை வைத்து அச்சுறுத்தும் பாணியில் செயற்பட்ட பிரிகேடியருக்கு எதிராக உலக நாடுகளின் பல்வேறு அமைப்புக்கள் கண்டனம் வெளியிட்டன. அதனைத் தொடர்ந்து அவர் பணியிலிருந்து விலக்கப்படுவதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு நேற்று முன்தினம் மாலை அறிக்கை விடுத்திருந்தது.

இந்நிலையில், அவரை மீளவும் பதவியில் அமர்த்து மாறு ஜனாதிபதி மைத்திரி நேற்று உத்தரவிட்டுள்ளாரென இராணுவ ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (இ-7)

# 'ஒரு காணொலியை வைத்து அதிகாரிகளை நீக்கமுடியாது' இராணுவத் தளபதி கூறுகிறார்



(கொழும்பு)

வெறுமனே ஒரு காணொலியை வைத்துக் கொண்டு, பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவை பதவியில் இருந்து நீக்கமுடியாது என்று இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஷ் சேன நாயக்க தெரிவித்துள்ளார்.

லண்டனில் புலம்பெயர் தமிழர்களுக்கு அச்சுறு த்தல் விடுத்த பிரிகேடியர் பிரியங்க பெர்னாண் டோவை, பாதுகாப்பு ஆலோசகர் பணியில் இருந்து இடை நிறுத்துமாறு வெளிவிவகார அமைச்சு, லண்டனிலுள்ள தூதரகத்துக்கு இலங்கை உத்தரவிட்டிருந்தது.

இந்த உத்தரவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று இரத்துச் செய்துள்ளதுடன், பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவை மீண்டும் பணியில் இணைந்துகொள்ளவும் அறிவுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்க, "வெறுமனே சமூக வலைத்தள காணொலி ஒன்றின் அடிப்படையில் அவர்கள், அதிகாரிகளை நீக்க முடியாது. விசாரணைகள் மட்டுமே முடிவு செய்யும்.

வெளிவிவகார அமைச்சும் இலங்கை தூதரகமும் விசாரணைகளை நடத்தும்.

பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ, கேணலாக இருந்த போது, மனிதாபிமானப் போர் நடவடிக்கையில் 11 ஆவது கெமுனு காவற்படையின் கட்டளை அதிகாரியாக, முல்லைத்தீவின் பல கிராமங்களை மீட்டு, மகத்தான சேவை ஆற்றியுள்ளார் என்று தெரிவித்துள்ளார். (இ-7)

## பண்டாரநாயக்கவைப் பற்றி மகிந்த சிலாகித்து பேசுவது விசித்திரமானது-மைத்திரி

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவின் குடும்பத்துக்கும் பண்டாரநாயக்கவின் குடும்பத்துக்கும் இடையே பரம்பரை பகையொன்று நிலவி வருவதை தனது அனுபவத்தில் காண்பதாகவும், இது இவ்வாறிருக்கையில், மகிந்த ராஜபக்ஷ பண்டாரநாயக்க கொள்கையைப் பற்றி சிலாகித்துப் பேசுவது விசித்திரமானது எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

தனியார் தொலைக் காட்சியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற நேரடி கலந்துரையாடல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

பண்டாரநாயக்கவும், டீ.ஏ. ராஜபக்ஷவும் ஆரம்ப காலத்தில் மிகவும் நெருக்கமானவர்கள். கட்சிக்காக ஒன்றிணைந்து செயற் பட்டவர்கள். இருப்பினும், அவர்களிடையே ஏற்பட்ட மனவிரிசலின் தாக்கம் அண்மைக் காலம் வரை அவரது குடும்பத்தில் இருந்து வருவதைக் கண்டதாகவும் ஜனாதிபதி வரலாற்று நிகழ்வுகளை ஆதாரம் காட்டி விளக்கினார்.

இப்போது, புதிய கட்சி உருவாக்கிக் கொண்டு பண்டாரநாயக்க கொள்கை பற்றி பேசி வரும் மகிந்த ராஜபக்ஷ அவரது ஆட்சிக் காலத்தில், பண்டாரநாயக்க எதிர்ப்புக் கொள்கையையே வெளிப்படுத்தினார்.

பண்டார நாயக் கவின் பெயரைக் கூட பயன்படுத்துவதை அவர் தவிர்த்துக் கொண்டார். இது ஸ்ரீல.சு.கவின் செயலாளராக இருந்த நீண்டகால அனுபவத்தில் நான் கண்ட உண்மைகள் எனவும் ஜனாதிபதி மேலும தெரிவித்தார். (இ-7)

## தாயும் மகளும் படுகொலை! மருமகனைத்தேடும் பொலிஸ்

(கொழும்பு)

பொத்தல, கிபி-எல பகுதியிலுள்ள வீடொன்றில் இருந்து, இரு பெண்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

கூரிய ஆயுதத்தால் வெட்டிக் கொல்லை செய்யப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட இந்தச் சடலங்கள் தாய் மற்றும் அவரது மகளுடையது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் வசித்து வந்த வீட்டில் நேற்று முன்தினம் இரவு சுமார் பத்தரை மணியளவில் இக்கொலைச் சம்பவம் இடம்பெற்றிருக் கலாம் எனத் தெரிவிக்கப்ப டுகிறது.

மேலும் குடும்பப் பிரச்சினையொன்றின் பேரில், மகளின் கணவரே இந்தக் கொலைகளை செய்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

தலை மறைவாகியிருக்கும் மருமகனை பொலிஸார்தேடி வருகின்றனர். (இ-7)

## தனியார் கல்வி நிறுவனங்களிடம் தேர்தல் ஆணைக்குழு வேண்டுகோள்

(கொழும்பு)

தனியார் கல்வி நிறுவனங்களில் கல்வி கற்கும் மாண வர்களுக்கு வாக்கெடுப்பில் கலந்துகொள்ளும் விதத்தில் தேர் தல் தினத்தில் பாட வகுப்புக்களை அமைத்துக் கொள்ளுமாறு தேர்தல்கள் ஆணையகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தனியார் கல்வி நிலையங்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு தேர்தல் தினத்தில் நடைபெறும் பாட வகுப்புக்கள் மற்றும் பரீட்சைகள் காரணமாக வாக்களிப்பதற்கான வாய்ப்பு இல்லாமல் போவதாக தகவல்கள் கிடைத்திருப்பதாக தேர்தல்கள் ஆணையகம்தெரிவித்துள்ளது.

குறித்த விடயங்களை கருத்திற்கொண்டு தேர்தல் தினத்தில் மாணவர்களின் வாக்களிப்பு நடவடிக்கைகளுக்கு பாதகமில்லாத வகையில் பாட வகுப்புக்கள் மற்றும் பரீட்சைகளை நடத்துமாறு தேர்தல்கள் ஆணையகம் தனியார் கல்வி நிறுவன உரிமையாளர்கள் மற்றும் ஆசிரியர்களை கேட்டுக் கொண்டுள்ளது. (இ-7)

## நாட்டை அழிக்கும் மேற்குலக முகவர் வேலையை மைத்திரி சிறப்பாக செய்கிறார்-அமரசேகர விசனம்

(கொழும்பு)

நாட்டை அழிக்கும் மேற் குலகின் முகவர் வேலையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிறப்பாக செய்து வருவதாக தேசப்பற்றுள்ள தேசிய அமைப்பின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடை பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியி டும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

மேற்குலக சக்திகள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை இலங்கையின் மரபுரிமைக்கு எதிரான கட்சியாக மாற் றியுள்ளதாகவும் மேற்குலக சக்திகள் இதற்காக முதலில் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவைத் தெரிவு செய் தனர். சந்திரிகா வந்து ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியில் இருந்த சிங்கள உரிமை களை முற்றாக அழித்தார் என்றும் அவர் தெரிவித்தார்.

ஆனால் தற்போது மேற் குலக நாடுகள் சந்திரிகாவை விட சிறந்த கதாநாயகனை தேடிப்பிடித்துள்ளன. அவர் தான் மைத்திரிபால சிறிசேன.

மேற்குலக முகவர்கள் நாட்டை அழிக்க மேற்கொள்ளும் நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுக்கும் வேலையையே மைத்திரிபால சிறிசேன செய்து வருகிறார்.

இன்னும் ஒரு வருடம் இந்த நாட்டை சிறிசேன, விக்கிரமசிங்க ஆகியோருக்கு ஆட்சி செய்ய இடமளித்தால், அது இந்த நாட்டின் முடிவுக்கு வழிவகுக்கும் என்பதில் எந்தசந்தேகமும்இல்லை.

இதேவேளை, எதிர்வரும் தேர்தலில் இவர்கள் வெற்றி பெற்றால், இந்த வருடத்திற்குள் கட்டாயம் நாட்டைப் பிளவுபடுத்தி விடுவார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


வாத நோய்களுக்கு சிறப்புச் சிகிச்சை

Special Treatment for Rheumatism

கழுத்துப்பிடிப்பு (Cervical spondylosis), தோள் மூட்டு வாதம் (Frozen shoulder), கீழ்முதுகு வலி (Law back pain), நாரிப்பிடிப்பு (Lumbago), முள்ளெலும்பு இடைத்தட்டு நருவல் (Nerve root compressed by the Disc Hernia), இடுப்பு, தொடை, பாதம் வரை தாக்கும் தீவிர நரம்பு வலி (Sciatica) மற்றும் மூட்டுகளைப் பாதிக்கும் முடக்கு வாதம் (Rheumatic arthritis), முழந்தாள் மூட்டுத்தேய்மான வாதம் (Destrutcion of knee cartilage; Synovial fluid damage & Ligament loosening), குதிவாதம், நரம்பு, தசை, மூட்டுக்களின் (Neuro-mascular problems), பிரச்சனைகள், பிரசவத்தின் பின்பும், மாதவிலக்கு ஓய்வு காலத்தில் பின்பும் (Post caesarean & menopause) ஏற்படும் தசை - மூட்டு வலிகள் (Mascular & joint pain), சிறுவர் வாதம் (Juvenile arthritis), பாரிசவாதம் (Paralysis), எலும்பு முறிவின்பின் சீரமைப்பு போன்ற நோய்களுக்கு விசேட சித்த-ஆயுள்வேத சிகிச்சைகள் பெறலாம்.

சிகிச்சைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதியின் உள்ளே)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251

## சதமடித்து தூள்கிளப்பினார் மக்ஸ்வெல்

# இங்கிலாந்தை வீழ்த்தியது அவுஸ்திரேலியா



ரிவர்ஸ் ஸ்வீப் கில்லாடி கிளென் மக்ஸ்வெல்லின் புயல்வேக சதம் கைகொடுக்க, இங்கிலாந்தை 9 பந்துகள் மீதமிருக்க, 4 விக்கெட்டுக்களால் வெற்றி கொண்டது. அவுஸ்திரேலியா.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து, இங்கிலாந்து அணிகள், அங்கு முத்தரப்பு 'ரி20' தொடரில் பங்கேற்கின்றன.

ஹோபர்ட் நகரில் நேற்று நடந்த 2ஆவது லீக் போட்டியில் அவுஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணியின் பொறுப்புத் தலைவர் டேவிட் வோர்னர், முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

**மலான் அரைச்சதம்**

இதன்படி முதலில் துடுப்பாட்டம் செய்த இங்கிலாந்து அணிக்கு ஜேசன் ரோய் (9) ஏமாற்றினார். அலெக்ஸ் ஹேல்ஸ் (22), அணித் தலைவர் ஒய்ன் மோர்கன் (22) ஓரளவு கைகொடுத்தனர். பட்லர் (5), பில்லிங்ஸ் (10) நிலைக்கவில்லை. பொறுப்பாக ஆடிய மலான் (50) அரைசதமடித்தார். அடுத்து வந்த டேவிட் வில்லே (3), அடில் ரஷித் (1), ரொம் கரான் (6) சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

20 ஓவர்கள் நிறைவில் இங்கிலாந்து 9 விக்கெட்டுக்களை இழந்து, 155 ஓட்டங்களை எடுத்தது. ஜோர்டன் (16) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் அஸ்திரேலிய அணி சார்பில் மக்ஸ்வெல் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

**மக்ஸ்வெல் அபாரம்**

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய அவுஸ்திரேலிய அணிக்கு, டேவிட் வில்லே தொல்லை கொடுத்தார். இவர் வீசிய ஆட்டத்தின் முதல் ஓவரில் அணித் தலைவர் வோர்னர் (4), கிறிஸ் லின் (0) ஆட்டமிழந்தனர். ஷோர்ட் (30) ஓரளவு நம்பிக்கை கொடுத்தார். ஸ்டாய்னிஸ் (6), டிராவிஸ் ஹெட் (6) நிலைக்கவில்லை. மறுமுனையில் அதிரடி காட்டிய மக்ஸ்வெல், சிக்ஸர், பவுண்டரிகளாக விளாசினார்.

ஜோர்டன் வீசிய 6ஆவது ஓவரில், 2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடித்த இவர், ரஷித் வீசிய 7ஆவது ஓவரில் தொடர்ச்சியாக 2 சிக்ஸர் பறக்கவிட்டார். மார்க் வூட் பந்தை சிக்ஸருக்கு அனுப்பி சதமடித்த மக்ஸ்வெல், வெற்றியை உறுதி செய்தார்.

அவுஸ்திரேலிய அணி 18.3 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை (161) 5 விக்கெட்டுக்களால் அடைந்தது.

துடுப்பாட்டத்தில் மக்ஸ்வெல் (103 ஓட்., 58 பந்து, 4 சிக்ஸர், 10 பவுண்டரி) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பில் வில்லே 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

போட்டியின் ஆட்டநாயகன் விருதை மக்ஸ்வெல் வென்றார்.

ஏற்கனவே நியூசிலாந்தை வீழ்த்திய அவுஸ்திரேலிய அணி, தொடர்ந்து 2ஆவது வெற்றியை பதிவு செய்தது.


நாளை மறுதினம் 10 ஆம் திகதி மெல்போர்னில் நடக்கவுள்ள 3ஆவது லீக் போட்டியில், அவுஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகள் மீண்டும் மோதுகின்றன.

## விராட் ஹோலி சாதனைச் சதம்

# இந்தியா ஹட்ரிக் வெற்றி

அணித்தலைவர் ஹோலி மீண்டும் ஒருமுறை தனி ஒருவனாக அசத்தினார். 160 ஓட்டங்கள் விளாசிய இவர், ஒருநாள் அரங்கில் 34ஆவது சதம் அடித்தார். இவரது கலக்கல் ஆட்டம் கைகொடுக்க, இந்திய அணி 124 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன்மூலம் தென்னாபிரிக்க மண்ணில் முதல் முறையாக ஒருநாள்தொடரை குறைந்தபட்சம் சமன் செய்து வரலாறு படைத்தது.



தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி, அங்கு மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்கிறது. முதல் இரு போட்டியில் வென்ற இந்திய அணி, 2-0 என, தொடரில் முன்னிலையில் இருந்தது.

இந்நிலையில் இரு அணிகள் மோதிய 3ஆவது போட்டி, நேற்று கேப்டவுனில் நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணியின் பொறுப்புத் தலைவர் மார்க்ரம், இம்முறை களத்தடுப்பை தேர்வு செய்தார். இந்திய அணியில் மாற்றம் எதுவுமில்லை. தென்னாபிரிக்க அணியில் நிகிடி, ஹெய்ன்ரிச் கிளாசன் அறிமுக வாய்ப்புப் பெற்றனர்.

**தவான் அரைசதம்**

இந்திய அணிக்கு ரோகித் சர்மா, ஷிகர் தவான் ஜோடி மோசமான ஆரம்பம் கொடுத்தது. ரபாடா வீசிய முதல் ஓவரின் கடைசி பந்தில், ரோகித் சர்மா 'டக்' அவுட்டானார். அடுத்து ஹோலி, தவான் இணைந்தனர். மழை இல்லாமல் திணறும் கேப் டவுனில். இருவரும் பவுண்டரி மழை பொழிந்து ரசிகர்களை மகிழ்வித்தனர். முதல் 10 ஓவரில் 10 பவுண்டரிகள் அடித்தனர்.

தவான், ஒருநாள் அரங்கில் 25ஆவது அரைசதம் அடிக்க, இந்திய அணி 17.2 ஓவர்களில், 100 ஓட்டங்களை எட்டியது. இரண்டாவது விக்கெட்டுக்காக 140 ஓட்டங்கள் சேர்த்த நிலையில், டுமினி 'சுழலில்' தவான், 76 ஓட்டங்களுடன் (63 பந்து) ஆட்டமிழந்தார்.

**மீண்டும் அபாரம்**

அடுத்து வந்த ரகானே (11), பாண்ட்யா (14) பொறுப்பற்ற முறையில் ஆட்டமிழந்தார். பின் வந்த தோனி, பந்துகளை வீணடிக்க, பொறுப்பான ஆட்டத்தை தொடர்ந்த ஹோலி, ஒருநாள் அரங்கில் 34ஆவது சதம் அடித்தார். தென்னாபிரிக்க அணிக்கு எதிராக இவர் அடித்த 3ஆவது சதம் இது. தோனி (10 ஓட்., 22 பந்து), கேதர் ஜாதவ் (1) அடுத்தடுத்து ஆட்டமிழக்க, இந்திய அணியின் ஓட்ட வேகம் குறைந்தது.

**'ஹீரோ' போல**

ஒருபுறம் விக்கெட் சரிந்தாலும் மறுபுறம் பாகுபலி பட 'ஹீரோ' போல தனி நபராக போராடிய ஹோலி, ஒட்டுமொத்த இந்திய அணியை தூக்கி நிறுத்தினார். ஒருநாள் அரங்கில் 3ஆவது முறையாக 150 ஓட்டங்கள் எடுத்தார்.

50 ஓவர்களில் இந்திய அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 303 ஓட்டங்கள் குவித்தது. ஹோலி (160), புவனேஷ்வர் (16) ஆட்டமிழக்காமல் இருந்தனர். பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பில் டுமினி 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

**சபாஷ் சகால்**

கடின இலக்கைத் விரட்டிய தென்னாபிரிக்க அணிக்கு இம்முறை அம்லா, மார்க்ரம் ஜோடி ஆரம்பம் கொடுத்தது. போட்டியின் 2ஆவது ஓவரை வீசிய பும்ராவின், முதல் பந்தில் அம்லா (1) ஆட்டமிழந்தார். மார்க்ரம், டுமினி இணைந்து அணியை மீட்க போராடினர். இந்நிலையில் மார்க்ரம் (32), குல்தீப் 'சுழலில்' சரிந்தார். தன் பங்கிற்கு மிரட்டிய சகால், முதலில் கிளாசனை (6) அவுட்டாக்கினார். மறுமுனையில் 25வது அரைசதம் அடித்தார் டுமினி. 2016 ஒக்ரோபருக்கு பின், அடித்த அரைசதம் இது. இவர், 51 ஓட்டங்களில் சகால் 'வலையில்' சிக்கினார்.

**புதிய வரலாறு**

சற்று தாக்குப் பிடித்த மில்லர் (25), பும்ரா 'வேகத்தில்' வீழ்ந்தார். மோரிஸ் (14), ஜோண்டோ (17) நிலைக்கவில்லை. இம்ரான் (8), நிகிடி (6) ஆட்டமிழக்க, தென்னாபிரிக்க அணி 40 ஓவர்களில் 179 ஓட்டங்களுக்கு சுருண்டது. ரபாடா (12) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இந்தியா 124 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

பந்துவீச்சில் இந்தியாவின் குல்தீப், சகால் தலா 4 விக்கெட்டுக்களைச் சாய்த்தனர். ஆட்டநாயகன் விருதை கோஹ்லி வென்றார். நான்காவது ஒருநாள் போட்டி நாளை மறுதினம் 10ஆம் திகதி ஜொகனஸ்பேர்க்கில் நடக்கிறது.

**முதல் முறை**

ஆறு போட்டிகள் கொண்ட தொடரில், தற்போது 'ஹட்ரிக்' வெற்றியுடன், இந்தியா, 3-0 என முன்னிலை பெற்றது. தென்னாபிரிக்க மண்ணில் தொடரை, முதன் முறையாக சமன் செய்வதை உறுதி செய்து, புதிய வரலாறு படைத்தது.


**கங்குலியை முந்தினார்**

ஒருநாள் போட்டிகளில் அதிக சதம் அடித்த இந்திய அணி தலைவர்கள் வரிசையில் கங்குலியை (11 சதம், 142 இன்னிங்ஸ்) முந்திய ஹோலி (12 சதம், 43 இன்னிங்ஸில்), 'நம்பர்-1' இடம்பிடித்தார். தலா 6 சதம் அடித்த சச்சின் (70), தோனி (71), 3ஆவது இடத்தில் உள்ளனர். அசார் (4, 162ல்) அடுத்த இடத்தில் உள்ளார்.

**சச்சினை விட குறைவு**

ஹோலி, 34ஆவது சதத்தை 197வது இன்னிங்ஸில் எட்டினார். இது சச்சினுடன் ஒப்பிடுகையில், 101 இன்னிங்ஸ் குறைவு. சச்சின் தனது 34வது சதத்தை (எதிர் - நமீபியா, 2003) 298வது இன்னிங்ஸில்தான் எடுத்தார்.

# சிம்பாப்வேக்கு வெள்ளையடிப்பு



சிம்பாப்வே அணிக்கு எதிரான இரண்டாவது 'ரி20' போட்டியில் 17 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்ற ஆப்கானிஸ்தான் தொடரை கைப்பற்றியது.

ஆப்கானிஸ்தான், சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட 'ரி20' தொடர் ஐக்கிய அரபு எமிரேட்சில் நடந்தது.

முதல் போட்டியில் ஆப்கானிஸ்தான் வென்றது. இந்நிலையில் இரண்டாவது போட்டி நேற்றுமுன்தினம் சார்ஜாவில் நடந்தது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற சிம்பாப்வே' அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

ஆப்கானிஸ்தான் அணிக்கு ஷாஜத் (17), கரீம் (28) ஓரளவு கைகொடுத்தனர். கிரீமர் பந்துவீச்சில் அணித் தலைவர் ஸ்டானிஸ்கய் (27) சிக்கினார். மொஹமட் நபி 45 ஓட்டங்கள் விளாசினார்.

20 ஓவர்கள் நிறைவில் ஆப்கானிஸ்தான் அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 158 ஓட்டங்களை எடுத்தது.

**கைகொடுத்த ரஷித்**

பின், களமிறங்கிய சிம்பாப்வே அணிக்கு சொலமன் (2) ஏமாற்றினார். மசகட்சா 29, பிரண்டன் ரெய்லர் 15 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். ரஷித் கான் 'சுழலில்' சிக்கந்தர் (4.0), ரியான் புரி (30) ஆட்டமிழந்தனர்.

20 ஓவர்கள் வரையும் தாக்குப்பிடித்த சிம்பாப்வே அணியால் 5 விக்கெட்டுக்களை இழந்து 141 ஓட்டங்கள் மட்டுமே எடுக்க முடிந்தது.

துடுப்பாட்டத்தில் வோலர் (6), பீற்றர் மூர் (12) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இதன்மூலம், இரண்டு போட்டிகள் கொண்ட 'ரி20' தொடரை ஆப்கானிஸ்தான் முழுவதுமாக வென்றது.

போட்டியின் ஆட்டநாயகனாக ஆப்கானிஸ்தானின் மொஹமட் நபி தெரிவானார்.

# INVITATION FOR BID

## Valikamam South Pradeshiya Sabha

1.The Secretary, Pradeshiya Sabha Procurement Committee on behalf of the Valikamam South Pradeshiya Sabha invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below.

2.Bidding will be conducted through National Competitive Bidding Procedure.how ever limit to the bidder who registered within the administrative boundary of the northern province as per the public finance circular no 04/2016(1)dated 30th September 2016.

3.To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and as per the public finance circular no 04/2016(1)dated 30th September 2016, this IFB is limited for the bidders who have been registered in the field of building construction for grade mentioned in the table below with the Construction Industry Development Authority (CIDA) within the administrative boundary of the northern province.

4.Qualifications requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section V).

5.Interested bidders may obtain further information from **Secretary, Valikamam South Pradeshiya Sabha, Chunnakam ( T.No: 021 320 2277 Fax: 021 224 0327 )** and inspect the bidding documents at the same place on any working days from 9.00 hrs to 15.00 hrs from 08-02-2018 to 28-02-2018.

6.A complete set of Bidding Documents in English language may be purchase by interested bidders on the submission of a written application to the **Secretary, Valikamam South Pradeshiya Sabha (T.No: 021 320 2277 Fax: 021 224 0327 ) from 08.02.2018 until 28.02.2018 from 9.00 hrs to 14.00 hrs working days upon payment of a non – refundable fees of Rs. 5,000.00.** The method of payment should be by cash.

7.Bids (original & Duplicate) shall be delivered to the **Secretary, Valikamam South Pradeshiya Sabha, Chunnakam on or before 14.30 Hrs on 28.02.2018.** Late Bids will be rejected. Bidders must write Bid ID on left hand upper corner of envelop for each. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.

8.Pre bid meeting will be held at the **Office of Valiakamam South Pradeshiya Sabha, Chunnakam. Commencing at 10.00 Hrs on 22-02-2018.**

9.Bids shall be accompanied by a Bid Security as per the information given in the Table.

| Bid ID | Description of Work | Contract Period | Required Grade | Estimate cost (Rs.Mn) | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | Security Amount (Rs.) | Validity |
| Contract Package No.: NP/ VSPS/MM/2018/01 | Construction of Vegetable Market at Maruthanarmadam | 06 Months | C5 or above (Buildings) | 38.02 | 750,000.00 | Till 27-06-2018 |

Secretary,
Valikamam South Pradeshiya Sabha.
Chunnakam.


# JAFFNA COLLEGE

UNDERGRADUATE DEPARTMENT

No.464, Hospital Road, Jaffna.

யாழ்ப்பாணத்தில் 120 வருடங்களுக்கு மேலாக ஆங்கிலக்கல்விக்கு ஒரே ஒரு ஸ்தாபனமாக விளங்கும் Jaffna College இந்த ஆண்டில் புதிதாக நான்கு பாடநெறிகளை ஆரம்பிக்கின்றது.

Advanced

## SPOKEN ENGLISH

With Grammar

Speciality of this Course : பூரணமான Grammar, Vocabulary development, Role Play- Conversation Practice, Presentation, Group work மொத்தம் 2 1/2 மாதங்கள் திங்கள் தொடக்கம் வெள்ளி வரை தினசரி காலை 8.00 மணி தொடக்கம் 12.00 மணிவரை வகுப்புக்கள் நடைபெறும்.

## DIPLOMA IN ENGLISH

Reading | Writing | Speaking | & | Listening

"Diploma in English" இது ஓர் அதி உயர்தரம் வாய்ந்த இந்தப் பாடநெறி Cambridge, Pearson, Macmillan போன்ற நிறுவனங்கள் சிபார்சு செய்யும் அண்மைக் காலத்து அணுகுமுறைகளை அடிப்படையாகக் கொண்டதாகும்.

Course முடிவில் கல்லூரியினால் Certificate வழங்கப்படும். இந்தச் சான்றிதழ்கள் இலங்கையில் மட்டுமல்ல உலகின் பல பாகங்களிலும் நன்கு அறிமுகமானவை.

## IELTS

இந்த ஆண்டில் BRITISH COUNCIL லில் IELTS பரீட்சை எழுதி அதிக பட்ச Band எடுப்பவர்களுக்கு ஆறு Scholarship ஒவ்வொன்றிற்கும் 3000 பவுண்ட்ஸ், இலங்கைப்பண மதிப்பில் ரூபா ஆறு இலட்சம் வரை கொடுக்க உத்தேசித்துள்ளது. நீங்கள் எமது கல்லூரியில் IELTSற்கு ஆயத்தப்படுத்தி ஓர் Scholarship வெற்றி பெறும் வாய்ப்பினைப் பெறுங்கள்.

**Course Schedule**

Full Time : Monday to Friday 1.00p.m. to 3.00p.m.
Part-time : Saturday and Sunday 9.00a.m. to 1.00p.m.

## IELTS LIFE SKILLS A1 B1

IELTS - Registration Centre for British Council

மேலதிக விபரங்களுக்கு:

JAFFNA COLLEGE UNDERGRADUATE DEPARTMENT
No.464, Hospital Road, Jaffna.
Tel: 021 222 0384, 021 222 3382, 077 880 3887


# இராசி பலன்

**மீனம்:** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், ஆன்றோர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றமுண்டு.

**மேடம்:** மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**இடபம்:** ஆடம்பரப் பொருட்களை வாங்குதில் ஆர்வம் காட்டுவீர்கள், மகிழ்ச்சிதரும் செய்திகள் வந்து சேரலாம், அடுத்தவர் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**மிதுனம்:** வீட்டை பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கும்பம்:** செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், தூர தேசச் செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், போசன நன்மையுண்டு, நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| சுக் | இராசி பலன் | | ராகு |
| சூரி, கேது, புத | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>அச்சுவினி, பரணி<br>பகல் 11.35 மணிக்கு<br>விரு-சந் | | |
| சனி | செவ் | குரு, சந் | |

**08.02.2018**

தை 26, வியாழக்கிழமை
சூரிய உதயம் காலை 6.36 மணிக்கு
அட்டமி பிற்பகல் 2.36 மணிவரை
விசாகம் மாலை 6.18 மணிவரை
சுபநேரம் 8.05-9.35 மணிவரை
இராகுகாலம் 2.05-3.35 மணிவரை
அட்டமி-நவமி

வளவன்

**கடகம்:** வியாபார விருத்தியுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.

**மகரம்:** எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி பெறுவீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**சிம்மம்:** சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், வாகன சுகமுண்டு, தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், சுப செலவுகள் கூடும் நாள்.

**தனுசு:** சுபகாரியச் செலவுகள் கூடும் நாள், எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், சயன சுகக் குறைவான நாள்.

**விருச்சிகம்:** குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, நினைத்த காரியங்களில் முன்னேற்றமுண்டு, கற்பனை மிகுதியான நாள்.

**துலாம்:** பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம்.

**கன்னி:** சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், உடன்பிறப்புக்கள் மூலம் உதவிகள் கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு, வருமானம் திருப்தி தரும்.

# வடக்கு-கிழக்கில் பௌத்த விகாரைகள் பெருகுவதற்கு பேசாமடந்தைகளான தமிழ்த் தலைமைகளே பொறுப்பு

## -ஐங்கரநேசன் குற்றச்சாட்டு-

(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் ஆயிரம் பௌத்த விகாரைகளை அமைக்கப்போவதாக ஐ.தே.க. தெரிவித்திருக்கிறது. தமிழ் இன அழிப்புப் போரை நடத்திய அரசாங்கம் இப்போது தமிழ்ப் பண்பாட்டுப் போரில் ஈடுபட்டுள்ளது. அதன் ஒரு கட்டமாகவே பௌத்த விகாரைகளைப் பெரும் எண்ணிக்கையில் அமைக்கும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. வடகிழக்கில் பௌத்த விகாரைகள் பெருகுவதற்கான பொறுப்பைப் பாராளுமன்றத்தில் பேசாமடந்தைகளாக உள்ள நமது தமிழ்த் தலைமைகளே ஏற்க வேண்டும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் மாகாண சபை உறுப்பினருமாகிய பொ. ஐங்கரநேசன் குற்றம் சாட்டியுள்ளார்.


ஒரு இனத்தை அழிக்க வேண்டுமாயின் அந்த இனத்தைக்கொலைசெய்யவேண்டிய அவசியம் இல்லை. அந்த இனம் பேசுகின்ற மொழியையும், அந்த இனத்தின் உயிர் நாடியாக உள்ள பண்பாட்டையும் மெல்லமெல்லக் கருவறுத்தாலே போதும் அந்த இனம் கடைசியில் பெரும்பான்மை இனத்தில் கரைந்து அழிந்துபோய் விடும். எமது மதம், எமது பண்பாட்டின் பிரிக்க முடியாத ஒரு அங்கம். இதனால்தான் அரசாங்கம் பௌத்த மதத்தை எம்மீது திணிக்கும் பண்பாட்டுப் போரை ஆரம்பித்துள்ளது.



புதிய அரசியல் அமைப்புக்கான முன்மொழிவில் அரசாங்கம் இலங்கையில் பௌத்த மதத்துக்கே முன்னுரிமை என்று மிகத்தெளிவாகக் தெரிவித்திருக்கிறது. இதற்கு, பாராளுமன்றத்துக்கு நாம் அனுப்பி வைத்திருக்கும் தமிழ்த் தலைவர்கள் எந்த வித எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை. மாறாக, புதிய அரசியல் அமைப்பை ஆதரித்தே பேசி வருகிறார்கள். உள்ளூராட்சித் தேர்தலில் தங்கள் கட்சிகள் தோற்றால் பௌத்த மதத்துக்கே முன்னுரிமை என்று கூறப்பட்டுள்ள புதிய அரசியல் அமைப்பை நிறைவேற்ற முடியாமல் போய்விடும் என்று கவலைப்படுகிறார்கள்.

பௌத்த மதம் பெரும்பான்மையாக உள்ள தென்னிலங்கையில், அங்கு வாழ்கின்ற மக்கள் விரும்பினால் அரசாங்கம் பௌத்த மதத்துக்கு முன்னுரிமையையும், சிறப்புரிமைகளையும் வழங்கலாம். ஆனால்,தமிழ் பேசும் மக்களின் தாயகமான வடகிழக்கில் பௌத்தம் பெரும் பான்மையாக இல்லை. எமது தாயகம் மதச்சார்பற்ற ஒரு பிரதேசமாகவே விளங்க வேண்டும்.

எந்த மதத்துக்கென்றும் தனியான முன்னுரிமை இல்லாமல் இந்து சமயம், கத்தோலிக்கம், இஸ்லாம், பௌத்தம் என்று எல்லா மதங்களும் ஒரேவிதமாகவே கருதப்பட வேண்டும். இதனைப்பாராளுமன்றத்தில் உள்ள தமிழ்த்தலைவர்கள் கேட்காத காரணத்தால் தான் எமது முதலமைச்சர் விக்னேஸ்வரன் இவற்றையெல்லாம் இடித்துரைத்துக் கேட்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)



யாழ்.வரணி மத்திய கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டியின் போது பாண்ட் வாத்திய அணி வகுப்பையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட சிறீபாத கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாபளர் கா.கமலநாதன் ஆகியோர் உரையாற்றுவதையும் பிரதம விருந்தினரின் பாரியார் திருமதி நந்தினி உதயகுமார் வெற்றிக்கிண்ணத்தை வழங்குவதையும் பாடசாலையின் அதிபர் ப.செல்வவிநாயகம் அருகில் நிற்பதையும் படங்களில் காணலாம்.

## இல்லமெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோப்பாய் தெற்கு கந்தவேள் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் வித்தியாலய அதிபர் சு.விவேகானந்தன் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தரும் பழைய மாணவியுமான இ.பிரியதர்சினி, சிறப்பு விருந்தினராக தீவக வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ உதவியாளரும், பழைய மாணவனுமான பா.வித்தியானந், கௌரவ விருந்தினர்களாக பழைய மாணவன்( கனடா) உ.ஆனந்தகுமார், பழைய மாணவி (கனடா) உ.உதயரூபி ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7)

✦✦✦✦✦✦✦✦✦✦

யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் ஆயர் பி.தியோகுப்பிள்ளை விளையாட்டரங்கில் இடம்பெறும். இதில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி வலயக்கல்வி பணிப்பாளர் ரி.ஜோன்குயின்ரஸ், கௌரவ விருந்தினராக தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரி கிளை முகாமையாளர் ஏ.செங்காதரன் ஆகியோர் கலந்துகொள்வர். (இ-7)

✦✦✦✦✦✦✦✦✦✦

யாழ்.உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெறும். பாடசாலை அதிபர் ஆ.பிரான்சிஸ் சேவியர் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் கோட்டக்கல்வி அலுவலர் த.மாதவன், சிறப்பு விருந்தினராக க.விக்னேஸ்வரன் (விக்னேஸ்வரா ஹாட் வெயார் உடுவில்), கௌரவ விருந்தினராக பழைய மாணவி திருமதி. மல்லிகாதேவி சதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

## இளமாணி பட்டக் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் முகாமைத்துவ இளமாணி பட்டக் கற்கை நெறிக்குரிய (Bachelor of Management Studies) 2018/2019 ஆம் ஆண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பிக்க விரும்புவோர் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஏதாவது ஒரு துறையில் ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

இக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் www.ou.ac.lk என்ற இணையத்தள முகவரி ஊடாக 21.02.2018 இற்கு முன்னராக விண்ணப்பிக்க முடியுமென யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். மேலதிக விபரங்களை யாழ்ப்பாண பிராந்திய நிலையத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ)

## நிர்வாகத் தெரிவு

(கரணவாய்)

புலோலி தென்மேற்கு கந்த முருகேசனார் மாதிரி முன்பள்ளியின் புதிய நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

இதில் தலைவராக மு.ஜெகதேவனும் செயலாளராக திருமதி நே.நாகேஸ்வரி, பொருளாளராக திருமதி ட.வேந்தினி, உபதலைவராக திருமதி ஜெ.அமுதினி, குழு அங்கத்தவர்களாக திருமதி யே.மேரி டோறா, திருமதி அ.ஞானசீலி, ஆலோசகர், பா.இரகுநாதன், கணக்காளர் திருமதி பா.யசோதா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (இ-60)




## உறங்கச் சென்ற இளைஞன் மரணம்!

(கரணவாய்)

இரவு உறக்கத்திற்கு சென்ற இளைஞர் ஒருவர் காலை சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் கெருடாவில் தெற்கு தொண்டை மானாறு பகுதில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த தவராசசிங்கம் அனுசாந்தன் (வயது-30) என்ற இளைஞனே மரணமடைந்தவராவார்.

முதல்நாள் இரவு உறங்கச் சென்றவரை மறுநாள் எழுப்பிய போது மரணமடைந்த நிலையில் காணப்பட்டார். சம்பவ இடத்திற்கு சென்ற பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டார். விசாரணையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (இ-60)

## உள்ளூராட்சி தேர்தலை முன்னிட்டு பதிவகப் பணிகள் இடை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல் பணிகளை முன்னிட்டு நாளை வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் வடக்குக்கான உதவி பதிவாளர் நாயகம் அலுவலகம் மற்றும் காணி மாவட்டப் பதிவகத்தின் கருமபீடங்களில் விண்ணப்பங்கள் எவையும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

எனினும் 12.02.2018 தொடக்கம் வழமைபோல் அனைத்து சேவைகளும் இடம்பெறும் என வடக்கு வலய உதவிப் பதிவாளர் நாயகம் ப.பிரபாகர் அறிவித்துள்ளார். (இ-7)



யாழ். அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகக் கல்லூரி அனுமதிக்கான

UNIVOTEC

## விண்ணப்ப முடிவுத் திகதி நீடிப்பு

மாணவர்கள் மற்றும் பெற்றோர்களது வேண்டுகோளிற்கிணங்க யாழ்ப்பாண பல்கலைக் கழகக் கல்லூரியின் அனுமதிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி 09.02.2018 இல் இருந்து 19.02.2018 ஆக நீடிக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத் தருகின்றோம்.

-உதவிப் பதிவாளர்-



வலம்புரி

விளம்பரதி தொடர்புகளுக்கு:

021 221 7603, 021 567 1532


## தேர்தல் ஆணைக்குழுவின் பத்திரிகை அறிவித்தல்

2018 பெப்ரவரி 10 ஆம் திகதி நடைபெறவிருக்கின்ற உள்ளூர் அதிகார சபைத் தேர்தலின் பிரசார நடவடிக்கைகள் 2018 பெப்ரவரி 07 ஆம் திகதி நள்ளிரவுடன் முடிவுக்குக் கொண்டு வரப்படுதல் வேண்டும்.

2. தேர்தலோடு தொடர்புடைய பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்கின்றபோது அரசாங்க ஆதனங்களின் துஷ்பிரயோகம், அரச அல்லது தனியார் ஆதனங்களைப் பயன்படுத்தி நிதியுதவி, பொருளுதவி மற்றும் மானிய உதவிகளைப் பகிர்ந்தளித்தல், பல்வேறு அரச வைபவங்களூடாக கட்சிகள்/ குழுக்கள், வேட்பாளர் ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற் கொள்ளல், அனுமதியற்ற பிரசார அறிவித்தல்களைக் காட்சிப் படுத்தல், பொதுமக்கள் மற்றும் வாகன ஊர்வலங்களை நடத்து தல், வீடுவீடாகச் செல்வதற்காக பெருந்தொகையான ஆட்களை ஈடுபடுத்துதல், சட்டவிரோத துண்டுப் பிரசுரங்களைப் பகிர்ந்த ளித்தல் மற்றும் சமயத் தலங்களில் கட்சி/ குழு/ வேட்பாளர் ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்ற தேர்தல் சட்டங்கள் மற்றும் பொதுச் சட்டங்களை மீறியமை தொடர்பாக தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள நீதிமன்றச் செயன்முறைகளுக்கு மேலதிகமாக தேர்தலின் பின்னரும்கூட சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது.

3. இத்தகைய சட்டவிரோத செயன்முறைகள் தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு விடய முன்வைப்புக்களை மேற் கொண்ட சட்டத்தை மதிக்கின்ற அனைத்து பிரசைகளுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் ஊடக நிறுவனங்களின் சிவில் அமைப்புக்களுக்கும் மற்றும் தத்தம் அரசியல் பிரசார நடவடிக்கைகளின் போது சட்ட விதிமுறைகளுக்கேற்ப செயற்பட்ட அனைத்து அரசியல்வாதிகளுக்கும் வேட்பாளர்களுக்கும், பிரஜைகளுக்கும், தேர்தல் ஆணைக்குழுவின் நன்றியறிதலை தெரிவித்துக் கொள்வதோடு, எதிர்வரும் நாட்களிலும் இத்தகைய சட்டரீதியற்ற செயல்முறைகளை மேற்கொள்வதைத் தவிர்த்து அனைத்து அரசியல் கட்சித் தலைவர்கள், வேட்பாளர்கள், கட்சி செயற்பாட்டாளர்கள், பிரஜைகள் ஆகியோரிடம் தயவன்புடன் கோரப்படுகின்றது.

04. அதே போன்று சட்ட மீறல்கள் தொடர்பாக உடனடியாக மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களுக்கும், தேர்தல் ஆணைக்குழுவிற்கும் பூரண விளக்கத்துடன் அறிவிக்குமாறும் சட்டத்தை மதிக்கின்ற அனைத்துப் பிரஜைகள், ஊடக நிறுவனங்கள், சிவில் அமைப்புக்கள், அரசியல் கட்சிகளிடமும் கோரப்படுகின்றது.

05. சமயத் தலங்களில் அல்லது சமய அனுஷ்டானங்களை நிறைவேற்றுவதனூடாக தேர்தலோடு, தொடர்புடைய கட்சிகள்/ குழுக்களின் வேட்பாளர்களின் ஊக்குவிப்புக்கு ஏதுவாகின்ற அரசியல் செயன்முறைகளை மேற்கொள்ளலும் மேலே குறிப்பிடப்பட்ட ஏனைய சட்ட மீறல்களும் தடுக்கப்பட் டிருக்கின்றமை உள்ளூர் அதிகார சபைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமையவென மேலும் தயவன்புடன் அறிவிக்கப்படுகின்றது.

**உரிய தகவல்களை கீழ்குறிப்பிடப்பட்டுள்ள வழிகளில் தேர்தல் ஆணைக்குழுவிற்கு அறிவிக்க முடியும்.**

Tel: 011-2864416, 011-286 2999, 011-286 8441,42,43
Fax: 011-286 4308, 011-286 6758, 011-286 8445, 011 286 8426
Web: www.elections.gov.lk
Email: ecsl2018@gmail.com
F.B: Tell Commission - Election Commission of Srilanka

மஹிந்த தேசப்பிரிய,
தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு
(தேர்தல் ஆணைக்குழு சார்பாக)

(ஏ-1755)


உ

சிவமயம்

## நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்



### கட்டுமான வேலையாளர்களிடம்

### விண்ணப்பம் கோரல்

மேற்படி ஆலயத்தில் சில கட்டுமான வேலைகள் செய்யப்பட வேண்டியுள்ளதால் இவ்வேலைகளை செய்து தரக்கூடிய கட்டுமான வேலையாட்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கட்டுமானப் பொருட்கள் யாவும் ஆலய நிர்வாகத்தால் வழங்கப்படும். கூலிக் கொடுப்பனவு அடிப்படையிலேயே இவ் விண்ணப்பம் கோரப்படுகின்றது.

எனவே நேரடியாக வருகை தந்து செய்யப்பட இருக்கும் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு தங்களின் கூலி மதிப்பீட்டை உள்ளடக்கிய விண்ணப்பத்தை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.
**"கட்டுமான பணிக்கான விண்ணப்பம்"** என்ற தலைப்பிட்டு தங்கள் விண்ணப்பம் **செயலாளர், அறங்காவலர் சபை, நயினாதீவு -ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு** என்ற முகவரியிடப்பட்டு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

வேலைத்திட்டங்களை நேரில் வருகை தந்து பார்வையிட்டுக் கொள்ளலாம்.

### செய்ய வேண்டிய வேலைத்திட்டங்கள் பற்றிய விபரம்

1. மதில் வேலை.
2. கொமட் கழிப்பறை (12)
3. நாகசாந்தி மடத்தடி அணைக்கட்டும், குளிப்பதற்கான தடாகமும்.
4. தண்ணீர்த் தொட்டி.
5. ஆலய முகப்பு முற்றத்திற்கு கொங்கிறீற் இடல்.
6. மாலை கட்டும் கட்டடம்.
7. இரு வீடுகளின் குறை வேலைகள்.
8. மகோற்சவ குருக்களின் வீடு புனரமைப்பு.
9. மற்றும் சில சிறு வேலைகள்.

**விண்ணப்ப முடிவுக் காலம் 15.02.2018 மாலை 5.00 மணி ஆகும்.**

அன்னையின் பணியில்
நா.யோகநாதன்
செயலாளர் அறங்காவலர் சபை,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு.

(ஏ-1517)



## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

#### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: ரேவதி
தகைமை/தொழில்: O/L/தனியார் தொழில்
தொ.இ: B/7502

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 29
உயரம்: 175cm
தகைமை/தொழில்: O/L/சுவிஸ் PR
தொ.இ: B/7503

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா:24 சூரிசெவ் 12 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: A/L/சொந்த தொழில்
தொ.இ: B/7504

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
உயரம்: 156cm
தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்
தொ.இ: B/7505

#### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 16 செவ் 1 இல்
தகைமை/தொழில்: O/L
எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்
தொ.இ: G/7511

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 35 செவ் 8 இல்
உயரம்: 165cm
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/7513

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 13 சூரிசெவ் 11 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: HNDIT/ தனியார் தொழில்
தொ.இ: G/7514

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 35 செவ் 4 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BIT, MHRM/ தனியார் தொழில்
தொ.இ: G/7516

கல்யாணமாலை
இல. 144, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# நாம் விரும்பி வீதியில் இருக்கவில்லை அரசு எம்மை இருக்க நிர்ப்பந்தித்துள்ளது

## 344 ஆவது நாளாக கேப்பாபிலவு மக்கள் போராட்டம்

(பனிக்கன்குளம்)

கேப்பாபிலவு பூர்வீக கிராமத்தை மீட்பதற்காக கடந்த வருடம் மார்ச் மாதம் முதலாம் திகதி ஆரம்பித்த நிலமீட்பு போராட்டம் நேற்று 344 ஆவது நாளாகவும் தொடர்கிறது.

கேப்பாபிலவு மக்களுக்குச் சொந்தமான காணிகளில் படையினர் அபகரித்துள்ள காணிகளில் இருந்து 133.4 ஏக்கர் காணிகள் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 28 ஆம் திகதி மக்கள் முன்னிலையில் படைத்தரப்பில் இருந்து முல்லை. மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த காணிகளுக்குள் கடந்த மாதம் முதலாம் திகதி மக்கள் சென்றனர். இந்நிலையில் இன்னும் தமது காணிகளில் விடுவிக்க வேண்டியுள்ள 104 குடும்பங்களுக்கு சொந்தமான 181 ஏக்கர் காணிகளை விடுவிக்கும் வரை தமது போராட்டம் தொடருமென தெரிவித்து காணி உரிமையாளர்களினால் போராட்டம் தொடர்கிறது.

இந்நிலையில் நேற்று முன்தினம் கேப்பாபிலவு மக்கள் சிலர் வடமாகாண சபை முதலமைச்சருடைய அலுவலகத்திற்குச் சென்று முதலமைச்சர், மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர், பிரதேச செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இதன்போது மிகுதி காணிகள் விரைவில் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென உறுதி அளிக்கப்பட்டுள்ளதாகவும் கால எல்லைகள் எதுவும் குறிப்பிடவில்லை எனவும் தெரிவித்த மக்கள் விரைவில் தம்மை குடியேற்றுமாறும் அதுவரை போராட்டம் தொடருமெனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை சுதந்திர தினத்தில் தாம் போராட்டம் செய்தபோது தம்மை பொலிஸார் நடத்திய விதம் மற்றும் தம்மை கெட்ட வார்த்தைகளால் திட்டியமைக்கு கடும் விசனம் வெளியிட்டதோடு சிறுவர்களை போராட்டத்தில் ஈடுபடுத்தியமை தொடர்பில் தம்மை விமர்சித்ததாகவும் தாம் போராடும் போது தமது பிள்ளைகள் எங்கே போவது? நாம் விரும்பி வந்து வீதியில் இருக்கவில்லை. அரசு எம்மை வீதியில் இருக்க நிர்ப்பந்தித்துள்ளது. எனவே எமது காணிகளை தந்தால் நாமும் சந்தோசமாக வாழ்வோம். எமக்கு வீதியில் இருக்க ஆசை இல்லை எனவும் புலம்பெயர் வாழ் தமிழர்கள் எமக்காக குரல் கொடுக்க வேண்டும் எனவும் கோரியுள்ளனர். (2-281)

## வவுனியாவில் கைக்குண்டு மீட்பு



(குருமன்காடு)

வவுனியாவில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் 15 இற்கும் மேற்பட்ட கைக்குண்டுகளை பூவரசங்குளம் பொலிஸார் மீட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

வவுனியா பம்பைமடுப்பகுதியில் முன்னர் இராணுவத்தினரின் சோதனை நிலையமாக பயன்படுத்தப்பட்ட தனியார் காணி ஒன்றிலிருந்தே குறித்த கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். காணியின் உரிமையாளரால் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

தகவலையடுத்து அங்கு சென்ற பூவரசங்குளம் பொலிஸார் அதனை மீட்டெடுத்துச் சென்றுள்ளதாக தெரிவித்துள்ளனர். (2-250-281)

# அறுவடை பெரும்போகச் செய்கை அழிவு

## திணைக்கள அதிகாரிகள் விபரங்கள் திரட்டல்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலவுகின்ற கடுமையான வரட்சி காரணமாக பெருமளவான பெரும்போகச்செய்கை அழிவடைந்திருப்பதாக தெரிவிக்கப்படுவதுடன், இது தொடர்பான புள்ளிவிபரங்கள் திரட்டப்பட்டு வருவதாக துறைசார் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலவிவருகின்ற கடுமையான வரட்சி காரணமாக இவ்வாண்டு அறுவடை செய்யவேண்டிய பெருமளவான பெரும்போகப் பயிர்ச்செய்கைகள் அழிவடைந்துள்ளன.

குறிப்பாக, பாண்டியன்குளம் கமநல சேவை நிலையம், துணுக்காய் கமநல சேவை நிலையம், ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையம், புதுக்குடியிருப்பு கமநல சேவை நிலையம், உடையார்கட்டு கமநல சேவை நிலையம், முள்ளியவளை கமநல சேவை நிலையம் உள்ளிட்ட கமநலசேவை நிலையங்களுக்குட்பட்ட சிறிய நீர்ப்பாசனக் குளங்கள் மற்றும் பாரிய நீர்ப்பாசனக் குளங்கள், மானாவாரிப் பயிர்ச்செய்கை நிலங்கள் என்பவற்றில் மேற்கொள்ளப்பட்ட பல ஆயிரம் ஏக்கர் வரையான பெரும்போகச்செய்கை அழிவடைந்துள்ளது.

குறிப்பாக, சிறிய குளங்களின் கீழ் இருந்த நீரை இறுதிவரை பாய்ச்சி பயன்படுத்திய போது, போதிய நீர் இன்மை மற்றும் மழை இன்மை காரணமாக அறுவடை செய்யக்கூடிய தறுவாயில் கூட சில பயிர்ச்செய்கைகள் கைவிடப்பட்டிருக்கின்றன.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலக்கடலைச் செய்கை மற்றும் ஏனைய உப உணவுச் செய்கைகளும் இவ்வாறு வரட்சியினால் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

இந்நிலையில் இவ்வாறு பயிரழிவு விபரங்கள் உரிய திணைக்கள அதிகாரிகளால் திரட்டப்பட்டு வருகின்றபோதும், நாளுக்கு நாள் அழிவு விபரங்கள் அதிகரித்து வருவதாக துறைசார் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கடந்த ஆண்டிலும் வரட்சியினால் கடும் பாதிப்புக்கள் ஏற்பட்டதுடன், அதே போன்ற பாதிப்புக்கள் இவ்வருடமும் ஏற்பட்டிருப்பதாக விவசாய அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (2-315)

# பாடசாலை வளாகங்களில் நாய்களின் தொல்லை அதிகம்

## மாணவர்கள் நாய்க்கடிக்கு இலக்கு

(கண்டாவளை)

கிளிநொச்சியிலுள்ள பல பாடசாலை வளாகங்களில் கட்டாக்காலி நாய்கள் அதிகளவில் காணப்படுவதுடன் சில பாடசாலை மாணவர்கள் நாய்க்கடிக்கு இலக்காகி வருவதாக பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

பல பாடசாலைகளில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகளவில் காணப்படுகின்றது. அதாவது கண்டாவளைப் பிரதேசத்தில் உள்ள பல பாடசாலைகளில் அதிகளவான நாய்கள் காணப்படுகின்றன.

பாடசாலைகளில் மதிய உணவு வழங்கப்படுதல் மற்றும் மேலதிகமாக கொட்டப்படும் உணவு என்பவற்றால் வீதியோரங்களில் கட்டாக்காலிகளாகத் திரிகின்ற தெருநாய்கள் பாடசாலை வாளகங்களுக்குள் சென்று அங்கேயே இருக்கின்றமை காணப்படுகின்றன.

இவ்வாறு காணப்படுகின்ற கட்டாக்காலி நாய்கள் பாடசாலைகளில் மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு பல்வேறு அசௌகரியங்களை ஏற்படுத்துவதுடன் மாணவர்கள் பலரும் இவ்வாறு நாய்க்கடிக்கு இலக்காகியுள்ளனர்.

இவ்வாறு பாடசாலைகளிலும் பொது இடங்களிலும் காணப்படுகின்ற கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென மாணவர்களின் பெற்றோர்கள், கல்விச்சமூகத்தினர் சம்பந்தப்பட்டவர்களைக் கோரியுள்ளனர். (2-315)




# தேர்தல் விதிமுறை மீறல் சம்பவங்கள் 103 பதிவாகியது

## முல்லை.மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் விதிமுறை மீறல்கள் சம்பவங்கள் தொடர்பில் நேற்று காலை வரை 103 சம்பவங்கள் முறைப்பாடாக கிடைக்கப்பெற்றுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட தேர்தல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் கா.காந்தீபனிடம் தொடர்பு கொண்டு வினவிய போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் நேற்று வரையான காலத்தில் 103 தேர்தல் விதிமுறை மீறல் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும், அவை தொடர்பில் உடனடியாக கவனம் செலுத்தப்படுவதாகவும் தெரிவித்தார்.

அத்தோடு நேற்று நள்ளிரவுடன் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (2-281)

# விடுதலைப் புலிகள் பயன்படுத்திய கனரக வாகனம் தகர்ப்பு

தமிழீழ விடுதலைப் புலிகள் பயன்படுத்திய கனரக வாகனம் ஒன்றை முள்ளிவாய்க்கால் பகுதியில் அதிரடிப்படையினர் தகர்த்துள்ளனர்.

கடந்த 2009 ஆம் ஆண்டு இறுதியுத்தத்தின் போது விடுதலைப்புலிகள் இரும்பு பெட்டகம் ஒன்றை நிலத்தில் புதைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கைக்காக அப்பொழுது அவர்கள் பயன்படுத்திய கனரகவாகனம் ஒன்றும் அவ்விடத்தில் புதைந்துள்ளதாக கூறப்பட்டிருந்தது.

இந்த நிலையில் குறித்த பகுதியில் விடுதலைப் புலிகளின் தங்கப் புதையலை தேடும் நடவடிக்கையில் நேற்று முன்தினம் அதிரடிப்படையினர் ஈடுபட்டிருந்தனர்.

எனினும் அங்கிருந்து விடுதலைப் புலிகளின் தங்கப் புதையல் அதிரடிப்படையினருக்கு கிடைக்கவில்லை.

இந்த நிலையில் விடுதலைப் புலிகள் பயன்படுத்தியதாக கூறப்பட்ட கனரக வாகனத்தை அதிரடிப்படையினர் அவ்விடத்தில் இருந்து மீட்டு தகர்த்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (2-281)

# முடிவு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும்




(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக காணாமலாக்கப்பட்ட தமது பிள்ளைகளை தேடி கடந்த வருடம் மார்ச் மாதம் 8 ஆம் திகதி கூடாரம் அமைத்து ஆரம்பித்த கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று 337 ஆவது நாளாக தொடர்கிறது. கடந்த காலத்தில் கடத்தப்பட்டு இராணுவத்திடம் கையளித்து காணாமலாக்கப்பட்ட உறவுகளை தம்மிடம் ஒப்படைக்குமாறு கோரி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தமது பிள்ளைகளுக்கு முடிவு கிடைக்கும் வரை போராட்டம் தொடருமென அவர்கள் தெரிவிக்கின்றனர். (2-281)

காணி பிணக்கு தீர்க்கப்படாமையையடுத்து

# நவீன கடைத்தொகுதிகள் அமைப்பதற்கு கிடைக்கப்பெற்ற நிதி திரும்பல்

## மாந்தை கிழக்கு பிரதேச சபை செயலாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பாண்டியன்குளம் பகுதியில் உள்ள அரச காணியொன்றில் அத்துமீறி வர்த்தக நிலையம் மற்றும் வீடு அமைத்து வாழ்ந்து வருகின்றமையால் இக்காணி தொடர்பில் உரிய அதிகாரிகளால் தீர்வு காணப்படாத நிலையில் குறித்த பகுதியில் நவீன கடைத்தொகுதிகள் அமைப்பதற்காக கிடைக்கவிருந்த பத்து மில்லியன் ரூபா நிதி திரும்பிச்சென்றுள்ளதாக பல்வேறு தரப்புக்களும் குற்றம்சாட்டியுள்ளன.

முல்லைத்தீவு மாந்தை கிழக்குப்பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பாண்டியன்குளம் சந்திப்பகுதியில் அரச தேவைக்கென ஒதுக்கப்பட்ட பொதுக்காணியின் ஒரு பகுதியை அப்பகுதியிலுள்ள வர்த்தகர் ஒருவர் அத்து மீறிப்பிடித்து வர்த்தக நிலையத்தினை அமைத்துள்ளதுடன், குறித்த காணியில் வீடு அமைத்தும் வாழ்ந்து வருகின்றார்.

இந்நிலையில் குறித்த அரச காணியில் இப்பிரதேசத்தைச் சேர்ந்த போரினால் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு கடைத்தொகுதிகளை அமைத்து வழங்குமாறு குறித்த வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதேவேளை இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இப்பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் கையொப்பமிட்ட கடிதங்களை வடக்கு மாகாண முதலமைச்சர் மாவட்ட அரசாங்க அதிபர், மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத்தலைவர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைத்திருந்தனர்.

இந்நிலையில் இந்தக்காணிகள் தொடர்பில் எந்தத்தீர்வுகளும் எட்டப்படவில்லை என்றும் கடந்த ஆண்டு நடுப்பகுதியில் பத்து மில்லியன் ரூபா செலவில் நவீன கடைத்தொகுதிகளை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு குறித்த காணிப் பிணக்கு தீர்க்கப்படாததன் காரணமாக கடைத்தொகுதி அமைக்கமுடியாமல் போயுள்ளதாக பல்வேறு தரப்புக்களும் குற்றம் சாட்டியுள்ளன.

அதேவேளை வீதி ஓரத்தில் சீமெந்து மற்றும் கல் போன்ற கட்டடப்பொருட்களை விற்பனைக்காக வைத்திருத்தல் மற்றும் ஏற்றி இறக்குதல் போன்ற செயற்பாடுகளால் எழுகின்ற புழுதி மண்டலத்தினால் பேருந்துக்காக காத்திருக்கின்ற பயணிகள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பல்வேறு தரப்புக்களும் அசௌகரியங்களை எதிர்கொள்வதாகவும் இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு முறையிட்டு எதுவித தீர்வும் கிடைக்கவில்லை என்றும் பாதிக்கப்பட்ட மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் மாந்தை கிழக்கு பிரதேச சபை செயலாளரைத்தொடர்பு கொண்டு வினவிய போது, குறித்த காணி தொடர்பில் பிணக்குக்காணப்படுகின்றது. இதுதொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

காணிப்பிணக்கு தீர்க்கப்படாதமையால் பத்துமில்லியன் ரூபா செலவில் நவீன கடைத்தொகுதி யொன்றை அமைப்பதற்குரிய திட்டங்களைக்கோரியபோது, காணிப்பிணக்குக் காரணமாக அதனைச்செய்யமுடியாது போய்விட்டது. வீதியில் பயணிகளுக்கும் பொதுமக்களுக்கும் அசௌகரியம் ஏற்படும் வகையில் பொருட்களை ஏற்றியிறக்குவது தொடர்பில் கவனம் செலுத்துவதாகவும் சபையினுடைய செயலாளர் தெரிவித்துள்ளார். (2-315)

# குறைந்த நிதியொதுக்கீட்டில் வீட்டுத்திட்டம் பாதுகாப்பற்ற வீடுகளில் வாழ்கின்றோம்



(கண்டாவளை)

கிளிநொச்சி,முல்லைத்தீவு மாவட்டங்களில் மீள்குடியேற்றத்தின் பின்னர் பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதியுதவியுடன் குறைந்த நிதியொதுக்கீடுகளின் கீழ் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டங்கள் பல இது வரை முழுமைப்படுத்தப்படாத நிலையில் பாதுகாப்பற்ற வீடுகளிலிருந்து அநேகமான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

யுத்தத்தின் பின்னரான மீள்குடியமர்வையடுத்து நேப் திட்டத்தின் கீழ் மூன்று இலட்சத்து இருபதாயிரம் ரூபா பெறுமதியான வீடுகளும் அதனைத்தொடர்ந்து இதேபோன்று பல அரச சார்பற்ற நிதிநிறுவனங்கள் நிதியுதவியுடன் மேற்படி தொகையில் வழங்கப்பட்ட வீடுகளை பெற்றுக்கொண்ட பயனாளிகள் பலர் அதனை முழுமைப்படுத்த முடியாது பாதுகாப்பற்ற வீடுகளில் வாழ்ந்து வருகின்றனர்.

குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி, கண்டாவளை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகள் மீள்குடியேற்றத்தின் போது வழங்கப்பட்ட மேற்படி குறைந்த தொகையிலான வீட்டுத்திட்டத்தில் ஒருஇலட்சம் ரூபா பெறுமதியான மலசலகூடத்தினையும் வீட்டினையும் அமைப்பதற்காகவே குறித்த மூன்று இலட்சத்து இருபதாயிரம் ரூபா கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

இதனைப்பெற்றுக்கொண்ட பயனாளிகள் மலசலகூடங்களை அமைக்கமுடியாமலும் வீடுகளை அமைக்கமுடியாமலும் அரை குறையில் விட்டுள்ளனர்.

இவ்வாறு விடப்பட்ட வீடுகளிலேயே பாதுகாப்பற்ற முறையில் பல குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இதேவேளை தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் கடன்திட்டத்தினால் வழங்கப்பட்ட வீடுகளும் இவ்வாறே காணப்படுகின்றன.

எனவே இவ்வாறு காணப்படுகின்ற வீட்டுத்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு ஏற்ற வகையில் நிதியுதவிகளை ஏற்படுத்தித் தருமாறு பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர். (2-315)




# இழப்பீடு அல்லது சம்பள நிலுவையை அரசு வழங்க வேண்டும்

## ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை பணியாளர்கள் கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழில் பணியாளர்களுக்கு உரிய இழப்பீட்டையோ அல்லது சம்பள நிலுவையோ அரசு வழங்க வேண்டுமென அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாட்டில் இடம்பெற்று முடிந்த யுத்த நடவடிக்கையையடுத்து மூடப்பட்ட ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலையில் பணியாற்றிய பணியாளர்களுக்கு எந்தவித கொடுப்பனவுகளும் வழங்கப்படாது கடந்த 28 வருடங்களாக அநாதரவாக விடப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஓட்டுத் தொழிற்சாலை யுத்தம் காரணமாக மூடப்பட்ட வேளை அங்கு சுமார் 74 பேர் பணியாற்றியிருந்தனர். அவர்கள் அனைவரிற்கும் கடந்த 28 வருடங்களாக ஊதியமோ இழப்பீடுகளோ மாறி மாறி ஆட்சியிலிருந்த எந்தவொரு அரசினாலும் வழங்கப்பட்டிருக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் அப்போது கைத்தொழில் அமைச்சராக இருந்த தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முதல் பின்னர் அமைச்சர்களாக இருந்தவர்களின் கவனத்திற்கு இந்த விடயத்தை பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் கொண்டு சென்றிருந்தனர்.

இந்நிலையில் யுத்த காலங்களில் மூடப்பட்ட காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை, ஆனையிறவு உப்பளம், பரந்தன் இரசாயனத்தொழிற்சாலை ஆகியவற்றில் பணியாற்றிய பணியாளர்களிற்கு ஊதியமோ அல்லது இழப்பீடோ வழங்கப்பட்டுள்ளது. பலர் இழப்பீடுகளுடன் ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலை பணியாளர்களுக்கு எந்தவித கொடுப்பனவுகளும் இதுவரை வழங்கப்படவில்லையென தெரிவிக்கப்படுகின்றது. இதனிடையே தற்போது மீண்டும் ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலையினை மீளத் திறப்பது தொடர்பில் அரசினால் பேசப்படுகின்றது.

இந்நிலையில் யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட பணியாளர்களிற்கு உரிய இழப்பீட்டையோ அல்லது சம்பள நிலுவைகளையோ அரசு வழங்கவேண்டுமென அவர்கள் மீண்டும் கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர். (2-9)

# ஒரு தொகுதி வெடிபொருட்கள் முள்ளிவாய்க்காலில் அழிப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதியில் காணப்பட்ட ஒரு தொகுதி வெடி பொருட்கள் நேற்று முன்தினம் விசேட அதிரடிப் படையினரால் செயலிழக்கச் செய்யப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் கிழக்கு பகுதியில் வெடிபொருட்கள் இருப்பதை அவதானித்த மக்கள் வழங்கிய தகவலுக்கமைய குறித்த இடத்துக்கு சென்ற விசேட அதிரடிப்படையினர் குறித்த பொருட்களை மீட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய செயலிழக்கச் செய்து அழித்துள்ளனர்.


இதற்கமைவாக தமிழன் குண்டு-3, TYPE-82 கிறினைற்-01 ஆகியனவையே நீதிமன்ற உத்தரவுக்கமைய இவ்வாறு அழிக்கப்பட்டவையாகும். (2-281-315)



மு/சிவநகர் தமிழ் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு அண்மையில் நடைபெற்ற போது...

# கலைத்தரிசனம்





## கலாபூஷணம் கே.ஆர்.டேவிட் அவர்களுடனான சந்திப்பு

"இலக்கியப் பரப்பில் நீண்டகாலமாக கே.ஆர். டேவிட் என்ற பெயரில் இலக்கியப் பணியாற்றி வரும் இவரது முழுப்பெயர் கிறகரி இராயப்பு டேவிட் என்பதாகும். சாவகச்சேரி மட்டுவில் வடக்குக் கிராமத்தில் திரு.திருமதி இராயப்பு- அருளம்மா தம்பதியினருக்கு மூன்றாவது பிள்ளையாக 1945.07.07 இல் பிறந்தார். மட்டுவில் மகா வித்தியாலயத்திலும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் கல்வி பயின்ற இவர் 1971 இல் ஆசிரிய நியமனம் பெற்றார். படிப்படியான வளர்ச்சி பெற்ற இவர் ஆசிரிய ஆலோசகராகவும் அதிபராகவும் தென்மராட்சி உதவிக்கல்விப் பணிப் பாளராகவும் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ளார். இலக்கியத் துறையில் இவர் பிரபல்யம் பெற்றிருந்தாலும் இவரிடம் ஓவியம், சிற்பம், சார்ந்த கலைத் திறமைகளும் இருந்ததற்கான பதிவுகளைக் காண முடிகின்றது. இலக்கியத் துறையில் மட்டும் இவர் தன்னை வளப்படுத்திக் கொண்டதால் இன்று இவரை ஓர் எழுத்தாளராகவே நம்மால் பார்க்க முடிகின்றது. இவர் கனகசெந்தி கதா விருது, கலாபூஷண விருது தமிழியல் விருது,சின்னப்பாரதி அறக் கட்டளை விருது, சான்றோர் விருது, கொடகே சாகித்திய விருது எனப் பல விருதுகளைப் பெற்றார். சான்றோர் கே.ஆர். டேவிட் அவர்கள் தன் இலக்கியப் பணி பற்றி மனந்திறந்து கூறியவை வலம்புரியில் பிரசுரமாகின்றது."

✦ ஒருவரின் இலக்கியப் பிரவேசத்தில் மரபு, குடும்பம், சமூகம் என்பன செல்வாக்குச் செலுத்துகின்றன. இந்தக் கருத்துத் தளத்தில் நின்று தங்களின் இலக்கியப் பிரவேசம் பற்றிக் கூறுங்கள்?

ஒருவரின் ஆளுமை விருத்தியில் அவரது மரபு, அவரது குடும்பம், பொருளாதாரம், அவர் வாழ்கின்ற சமூகம், சூழல்கள் என்பன ஆதிக்கம் செலுத்துகின்றன. இந்தக் கருத்துத் தளத்தில் நின்று எனது இலக்கியப் பிரவேசம் பற்றிக் கூறுவதானால் எனது குடும்ப இரத்த உறவில் எவருக்குமே இலக்கியத் தொடர்பு இருந்ததில்லை. எனது குடும்பத்தில் இருந்த வறுமைதான் என்னை இலக்கியப் பிரவேசம் செய்ய வைத்தது. வறுமை எனது வாழ்க்கையை வெறுமையாக்கியிருந்தது. அந்த வறுமையின் வெக்கையைத் தாங்க முடியாத என் மனம் குளிர்மையைத் தேடியது. "மாக்ஸிஸ" தத்துவத்தில் எனது மனம் நங்கூரமிட்டது. இன்றும் இலக்கியத் துறையில் பேசப்படுகின்ற கே.டானியல், எஸ்.பொன்னுத்துரை, டொமினிக் ஜீவா, அகஸ்த்தியர் போன்றவர்களின் உறவுகள் எனக்கு இலகுவாகவும் சரளமாகவும் கிடைத்தன. என்னிடம் இயல்பாகவே இருந்த மொழி வளம், எனது இலக்கிய முயற்சிக்கு ஆதார சுருதியாக அமைந்தது. எனது இலக்கியப் பிரவேசம் இப்படித்தான் ஆரம்பமானது.

✦ இதுவரை நீங்கள் வெளியீடு செய்த நூல்கள்?

எனது மனக் கருவறையில் கருத்தரித்து எனது உடலில் ஓடிக்கொண்டிருந்த அற்ப சொற்ப குருதியையும் அந்தக் கருக்களுக்கு வழங்கி-வளர்த்து பெற்று பெயரிட்டு வளர்த்த எனது வாரிசுகள் அவை. அவை என்னால் மறக்க முடியாதவை.

1976-வரலாறு அவளைத் தோற்று விட்டது - நாவல்

1987-ஆறுகள் பின்னோக்கிப்பாய் வதில்லை -குறுநாவல்

1989-பாலைவனப் பயணிகள்-குறு நாவல்

1991-வெள்ளையடிக்கப்பட்ட கல்லறை-குறுநாவல்

1994-ஒரு பிடிமண்-சிறுகதைத் தொகுதி

2012-பாடுகள்-சிறுகதைத் தொகுதி

2012-மண்ணின் முனகல்-சிறுகதைத் தொகுதி

2015-நீரில் கிழித்த கோடுகள்-சிறுகதைத் தொகுதி

✦ தங்களால் வெளியீடு செய்யப்பட்ட நூல் களைப் படிமுறையில் நோக்கும் போது நாவல், குறுநாவல், சிறுகதைத் தொகுதி என்ற படிமுறையில் அமைந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. சிறுகதையில் ஆரம்பித்து நாவலில் முடிப்பதுதான் பொதுவான இயல்பு. ஆனால் தாங்கள் நாவலில் ஆரம் பித்துச் சிறுகதைத் தொகுதிக்கு வந்திருக் கிறீர்கள். அதுவும் உங்களின் முதல் நாவல் மலையக மக்களின் வாழ்க்கையைப் பிரதி பலிக்கும் நாவலாகவே அமைந்துள்ளது. இது பற்றி?

எனது இலக்கிய வளர்ச்சியை மிக உன்னிப்புடன் அவதானிக்கிறீர்கள். 1971ஆம் ஆண்டு நுவரெலியா மாவட்டத்திலுள்ள பூண்டுலோயா தமிழர் மகா வித்தியாலயத்தில் எனக்கு ஆசிரிய நியமனம் கிடைத்தது. இந்தக் காலப்பகுதி மலையகம் வறுமையின் விளைநிலமாகவே இருந்தது. எனது ஊரில் எனது குடும்பத்தினருடன் வாழ்ந்த காலத்தில் எனக்கிருந்த வறுமைச்சுவடுகள் அந்த மலையக மக்களின் வாழ்க்கையைப் புரிந்து கொள்ளத் துணையாக இருந்தன. நான் எனது நாவலில் குறிப்பிட்ட அந்த கற்புச் சூரண்டல் சம்பவம் அப்போது தான் நிகழ்ந்தது. தோட்டத்துறையின் கற்புச் சுரண்டல் நடவ டிக்கைக்குள்ளாகி மரணமான அந்தப் பெண்பிள்ளை எனது மாணவியாக இருந்தாள். அந்தக் கொடுமைக்கெதிராகக் குரல் கொடுக்கும் பலம் அங்கு வாழ்ந்த மக்களுக்கு இருக்கவில்லை. சகல சமூக தேசிய அதிகாரச் சக்திகளும் தோட்டத்துறையின் கைப் பொம்மைகளாகவே இருந்தன. அதைப் பதிவாக்க மட்டும்தான் என்னால் முடிந்தது. அதைத்தான் நாவலாக எழுதினேன். எல்லோரும் சிறுகதைத்தொகுப்பு வெளியீட்டிலிருந்து தான் நாவல் இலக்கியத்திற்கு வருவார் என்று நீங்கள் உங்கள் கேள்வியில் குறிப்பிட்டிருந்தீர்கள். எந்தப் பிழையும் இல்லை. என்னுடைய சூழல் முதல்வெளியீடாக நாவல் அமைந்து விட்டது. ஒரு படைப்பாளன் தான் பெற்றுக் கொண்ட அனுபவங்களை ஒழுங்கு படுத்தி நெறிப்படுத்தப்பட்ட ஒரு தளத்தின் ஊடாக மீண்டும் அதை மக்களுக்கு கொடுப்பது தான் இலக்கியம்.

✦ ஏறத்தாழ அரை நூற்றாண்டு காலமாக நீங்கள் இலக்கியத்தொடர்பில் இருந்து வருகிறீர்கள். இலக்கியத்தோடு தொடர் புபட்ட தங்களால் மறக்க முடியாததொரு சம்பவத்தைக் கூற முடியுமா?

நீங்கள் குறிப்பிட்டது போல் எனது நீண்ட கால இலக்கிய வாழ்க்கையில் பல தடவைகள் பல பத்திரிகைகளுக்கு நேர்காணல்கள் வழங்குகின்ற சந்தர்ப்பங்கள் எனக்குக் கிடைத்திருக்கின்றன. ஆனால் இதுவரை இப்படியொரு கேள்வியை யாரும் கேட்டதாக எனக்கு நினைவில் இல்லை. படைப்பாளனால் ஜீரணித்துக் கொள்ளமுடியாத சம்பவங்கள் தான் இலக்கிய வடிவம் பெறுகின்றன. ஜீரணிக்க முடியாத அந்தச் சம்பவங்களில் ஒன்றைத்தான் நீங்கள் கேட்கிறீர்கள். 1999ஆம் ஆண்டு உதவிக் கல்விப் பணிப்பாளராக நியமனம் பெற்று 2004 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றேன். நான் உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றியது தென்மராட்சிக் கல்வி வலயத்தில் தான். நான் படித்த பாடசாலையில் எனக்கொரு கௌரவிப்பு விழா ஒழுங்கு செய்யப்பட்டது.அப்போது ஆசிரியர்களும் மாணவர்களும் முழுக்க முழுக்க புதியவர்களாக இருந்தாலும் என்னைப் படிப்பித்த சில ஆசிரியர்களும் நான் படித்த காலத்தில் என்னோடு படித்த சில மாணவர்களும் வந்திருந்தனர். இவர்களைத் தவிர ஊரவர்களும் எனது உறவினர்களும் வந்திருந்தனர். என்னைப் பற்றிப் பேசியவர்கள் எல்லோரும் என்னைப் பற்றி மிக உயர்த்திப் பேசினர். எனக்குக் கற்பித்த மூன்று ஆசிரியர்களும் பேசினார்கள். இவர் எனது மாணவனாக இருந்திருக்கின்றார். இவரிடம் காணப்பட்ட அறிவும், ஆற்றலும் இவர் ஒரு காலத்தில் மிக உயர்ந்ததொரு நிலைக்கு வருவாரென்று நான் அப்போதே எதிர்பார்த்திருந்தேன். எதிர்பார்ப்பு வீண் போகவில்லை. இன்று அவர் ஒரு கல்வியாளனாகவும் புகழ் பெற்ற எழுத்தாளனாகவும் இருக்கிறாரா என்ற சாரப்படவே அவர்களின் பேச்சுக்கள் அமைந்திருந்தன. நான் இந்தப் பாடசாலையில் மாணவனாக இருந்த போது ஒருமுறை வகுப்பு மொனிற்றறாகத் தெரிவு செய்யப்பட்டேன். அப்போது மொனிற்றராய் இருப்பதற்கு சில தகுதிகள் , பொறுப்புக்கள், சிறப்புகள் இருக்கவேணும். இவனிட்டை ஒண்டுமே இல்லை என்று கூறி எனது சமூகக் குறைபாடுகளை மறை முகமாகச் சுட்டிக்காட்டி எனக்கு அந்த மொனிற்றர் பதவி கிடைக்காமல் செய்தவர்களும் அதே ஆசிரியர்கள்தான். ஒரு சமூகத்தின் உருவாக்கத்தில் பாடசாலை ச்சமூகத்தின் செயற்பாடே முதற்புள்ளியாக அமைகின்றது. அந்த முதற் புள்ளியே போலித்தனமாக இருந்ததால் எனக்குள் நானாகி அழுதேன்.

✦ நிறைவாக வாசகர்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?

"நீ, உனக்கு விருப்பமில்லையென்று அரசியலிலிருந்து ஒதுங்கிக் கொள்வாயேயானால் நீ விரும்பாததொரு அரசியலின் கீழ்த்தான் வாழ வேண்டி வரும்" அறிஞர் பேர்ணாட்சோவின் கூற்று. இவரின் அரசியல் சார்ந்த இந்தக் கூற்றை அப்படியே இலக்கியப் பரப்போடு நான் ஒப்பிட்டுப் பார்த்தேன்.

"நீ உனக்கு விருப்பமில்லையென்று இலக்கியத்திலிருந்து ஒதுங்கிக் கொள்வாயேயானால் நீ விரும்பாத இலக்கியங்களையே வாசிக்க நேரிடும்"கோளமயமாதல் 1970 ஆம் ஆண்டளவில் இலங்கையில் விதைக்கப்பட்டு இன்று அந்த விசச்செடி விருட்சமாகி இளைய தலைமுறையினரை வெகுவாகப் பாதித்துக் கொண்டிருப்பதை நேரடியாகவே காணக்கூடியதாக இருக்கிறது. பாரம்பரியமாக மூத்த தலைமுறையினரால் இளைய தலைமுறையினருக்கு வழங்கப்பட்டு வந்த வாழ்வியல் விழுமியங்களைக் கையேந்த இன்றைய புதிய தலைமுறையினர் தயக்கம் காட்டுகின்றனர். மூத்த தலைமுறையினரால் இளைய தலைமுறையினருக்குப் பரிமாற்றம் செய்யப்பட்டு வந்த வாழ்வியல் விழுமியங்களில் இலக்கியமும் ஒன்று. இந்த இலக்கியங்களையும் இலக்கியப் படைப்பாளர்களையும் நமது புதிய தலைமுறையினர் கண்டுகொள்ளாமல் இருப்பது மிகுந்த வேதனையைத் தருகின்றது. புதிய தலைமுறையினர் நவீன விஞ்ஞான வளர்ச்சியைப் பின்பற்றுகின்ற அதேவேளை மனிதத்தை விளைவிக்கின்ற வாழ்வியல் சார்ந்த பண்பாடுகளையும் பின்பற்ற வேண்டும்.

✦ தரம் எட்டுக்குரிய தமிழ்மொழியும் இலக்கியமும் என்ற பாடநூலில் எழுதப்படாத வரலாறு என்ற தங்களுடைய சிறுகதை ஒன்று பதிவாகியுள்ளது. இலட்சக்கணக்கான மாணவர்களுக்கு பாடமாக அமைந்துள்ள அந்தச் சிறுகதை பற்றிக் கூறுங்கள்?

எழுதப்படாத வரலாறு என்ற சிறுகதையை எழுதியவன் மூலம் எனது மனச்சுமையின் ஒரு பகுதியை இறக்க முடிந்தது. இப்போது தங்களின் இந்தக்கேள்வி மூலம் எஞ்சியுள்ள சுமையையும் இறக்குவதற்கு ஒரு சந்தர்ப்பம் தந்துள்ளீர்கள். காலத்தை நீ அனுசரித்துப் போனால், பிற்காலத்தில் காலம் உன்னை அனுசரித்துப் போகும் என்ற தத்துவத்தையே இச் சிறுகதை மூலம் நிறுவியுள்ளேன். இந்தக் கதையில் வருகின்ற பிரதான பாத்திரமான சற்குணம் என்பவரின் இயற்பெயர் பற்குணமாகும். பற்குணம் என்னோடு அறிமுகமாகி, நண்பனாகி, சகோதரனாகியவன். அந்தச் சகோதரன் இப்போது உயிருடன் இல்லை என்ற துன்பமான செய்தியையும் இங்கு பதிவு செய்கிறேன். பற்குணம் மிகப்பின்தங்கிய ஒரு கிராமத்தில் மிகப் பின்தங்கிய ஒரு குடும்பத்தில் பிறந்தவன். ஆரம்பக் கல்வியை தனது கிராமத்துப் பாடசாலையில் முடித்துக் கொண்டவன். கல்வியைத் தொடர்வதற்காக எனது கிராமத்திலுள்ள மகா வித்தியாலயத்திற்கு வந்து சேர்ந்தவன். எனது கிராமத்திலிருந்து அவனது கிராமம் ஏறத்தாழ ஆறு மைல் தூரமிருக்கும். தினசரி ஆறுமைல் நடந்து தான் பாடசாலைக்கு வருவான். திரும்பவும் நடந்து தான் தனது வீட்டுக்குப் போவான். இவன் பேராதனைப் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாகி, பட்டப்படிப்பை நிறைவு செய்தான். பட்டத்தேர்வுக்கான பரீட்சையில் பற்குணம் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றதால் பல்கலைக்கழகத்தில் டெமோ ஆனான். இதில் கிடைத்த முதற் சம்பளத்தில் தாய்க்கொரு சேலையும், எனக்கொரு சேட்டும் வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தான். அந்தச் சேட்டு இப்போதும் என்னிடமுண்டு. 1970 காலப் பகுதியிலேயே இந்தச் சம்பவம் நடந்தது. அதே காலப்பகுதியில் நடந்த நிர்வாக சேவைப் பரீட்சையில் பற்குணம் சித்தியடைந்து திருகோணமலை மாவட்டத்திற்குட்பட்ட குச்சவெளிப் பிரிவுக்கு டி.ஆர்.ஓவாக நியமனம் பெற்றான். அப்போது டி.ஆர்.ஓ என்ற பெயரில் இருந்த இந்தப் பதவி, பின்னர் ஏ.ஜி.ஏ. என்ற பெயர் பெற்று இப்போது அதே பதவி டி.எஸ். என்ற பெயரால் வழங்கப்படுகிறது. காலத்தை அனுசரித்து சகல துன்பங்களையும், அவமானங்களையும் சுமந்து கொண்டு அவன் படித்தான். இன்று அதே காலம் அவனது வருகைக்காகக் காத்திருக்கின்றது.

நேர்காணல்:
**ஜெயம் ஜெகன்**

# மகேந்திரனை உடன் அழைத்து வருமாறு பிரதமரை பணிக்க வேண்டும் ஜனாதிபதி

## உதய கம்மன்பில கோரிக்கை



(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் விடயத்தில் தான் பொறுப்பேற்கின்றேன் என பிரதமர் கூறியிருந்தார்.

அப்படியாயின், சிங்கப்பூருக்கு சென்று அர்ஜுன் மகேந்திரனை உடன் அழைத்து வருமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பணிக்கவேண்டுமென கோரிக்கை விடுத்த, ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில, இரண்டாவது ஆணைக்குழுவை நிறுவுமாறும் கேட்டுக்கொண்டார்.

இரண்டாவது ஜனாதிபதி ஆணைக்குழு, பேர்பெச்சுவல் ட்ரெஷரீஸ் லிமிட்டெட் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸுடன் தொலைபேசி உரையாடல் நடத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டோர் தொடர்பில் ஆராயவேண்டும்.

அத்துடன், மத்திய வங்கியின் புதிய ஆளுநரின் நடவடிக்கைகள் தொடர்பிலும் அடுத்த விவாதத்தின் போது சபையில் தெரிவிக்க வேண்டும் எனவும் கோரிநின்றார்.

"நல்லாட்சி அரசாங்கம் உருவாக்கப்பட்டு 49 நாட்களுக்குள் மத்திய வங்கி மோசடி நடந்துள்ளது. இந்த மோசடியின் மூலமாக கின்னஸ் சாதனை படைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அர்ஜுன மகேந்திரனை, தன்னுடைய எதிர்ப்பையும் மீறி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தான் நியமித்தார் என ஜனாதிபதி கூறியுள்ளார்.

"அதேபோன்று, அர்ஜுன் மகேந்திரன் எனது நம்பிக்கைக்குரியவர். அவர் தொடர்பில் நான் பொறுப்பேற்கின்றேன் என பிரதமர் கூறினார். அப்படியாயின், தற்போது அர்ஜுன் மகேந்திரனை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும்.

மேலும், "மத்திய வங்கி பிணைமுறி மோசடி ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் மறைக்கப்பட்ட விவகாரங்கள் அடங்கிய இறுவெட்டு தற்போது எமக்குத் தரப்பட்டுள்ளது.

இதனை ஆராய்வதற்கு எமக்கு நேரம் போதாது. ஆகவே, குறித்த இறுவெட்டு தொடர்பில் ஆராய்வதற்கு மேலும் விவாதம் வேண்டும்" எனவும் தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விவாதத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# பனை தரும் போசாக்கு உணவுகள்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

பனையில் ஆண்மரமும், பெண்மரமும் தனித்தனியாக வளரும். இருவகை மரமும் பலவகைகளில் பயன்படுமாயினும் ஆண்பனை, பெண்பனையைப் போன்று அத்துணை பயன்தரவல்லதன்று.

பெண்பனை மரத்தில் இறக்கும் கள்ளிற்கு (சுண்ணாம்பு பூசிய குடுவையில் பாளையிலிருந்து வடியும் திரவம்) ''பதனீர்'' என்று பெயர். இதனைக் காய்ச்சி பனை வெல்லம், பனங்கற்கண்டு முதலியவற்றைப் பெறலாம்.

பனையில் ஆண்மரமும், பெண்மரமும் காணப்படும். ஆண்பனையின்பாளையில் இருந்து கதிர்கள் நீண்டு திரண்டிருக்கும். அவற்றினின்றும் சிறு ஆண்பூக்கள் விரியும். பூவில் தடித்த புறவிதழ்களும் 3 அகவிதழ்களும் 6 மகரந்தகால்களும் தோன்றும். பெண்பாளையில் இருந்து பட்டையாக 3 புறவிதழ்களும், 3 அகவிதழ்களும் கோளவடிவமான பெண்ணகத்தைக் கொண்டிருக்கும்.

இதுபோல மகரந்தச் சேர்க்கையின் பின்னர் பிஞ்சாகி பணங்காயாகும். இளங்காயிலுள்ள மூன்று நுங்குகளும் முற்றி பழமாகி பின்னர் பனம்பழம் தானே விழும். அதற்குள் 3 விதைகள் இருக்கும்.

சேரமன்னர்களின் குடியிருப்பு பனை என்பர். இவ்வளவு பழைமைவாய்ந்த பனைமரம் இன்னும் பயன்



கொடுத்துக்கொண்டே உள்ளது. அதிலும் உணவு வகைகளில் மட்டுமன்றி இயற்கை மருந்தாகவும் அமைவதை இன்றைய விஞ்ஞானமும் ஏற்றுக் கொண்டுள்ளது.

ஆனால் பனையின் பயன்பாடுகள் மக்களால் மறக்கப்பட்டும் மறைத்தும் வருவது செயற்கை வாழ்க்கை முறையில் இன்றைய மக்கள் ஊறிக் கிடப்பதேயாகும். எனவே பனைமரத்தின் பயன்களை மருத்துவ நோக்கில் ஆராய்வோமாயின்,

பூவைபதப்படுத்தி அதன் முனையச் சீவி வாய்வழியாக வடியும் நீரைக் குடுவையில் தங்கும்படி செய்து எடுப்பது கள் எனப்படும். அக் குடுவையில் கொஞ்சம் சுண்ணாம்பு பூசினால் புளிக்காது. இதற்குப் பதநீர் அல்லது பஞ்சாறு எனப்படும். பதநீரை காலையில் 200 மில்லியளவு 40 நாட்கள் தொடர்ந்து எடுத்து வர மேக நோய்கள் தணியும். நீரிழிவு நோயாளர்களும் எடுக்கலாம்.

பனம் பூவை சுட்ட சாம்பல் புண்களை ஆற்றும்.

இதன் காயை முற்றாததற்கு முன் வெட்டிய உள்ளிருக்கும் நுங்கையும் நீரையும் சாப்பிட உடலிற்கு குளிர்ச்சியைக் கொடுக்கும். வேனிற்கால நீர் வேட்கைக்கு மிகவும் ஏற்றது. நுங்கை முகப்பருக்களுக்கும் பூசலாம்.

ஒடியற்கூழ்:- இதில் ஒடியல்மா, பலாக்காய், பயற்றங்காய், செத்தல் மிளகாய், மஞ்சள், பழப்புளி, உப்பு என்பன சேர்கின்றன. பயற்றங்காயை சிறுசிறு துண்டுகளாக ஒடித்து அதனுடன் பலாக்காயின் சுளையை போட்டு நீர்விட்டு நன்கு அவியவிட்டு வெந்ததும் அதனுடன் சிறிது நீரில் புளியைக் கரைத்து அதில் ஒடியல் மாவையும் மஞ்சள் துண்டையும், மிளகாயையும் அரைத்துக் கரைத்தும் சேர்த்து ஊற்றி ஐந்து நிமிடங்கள் வரை துளாவிக் கொண்டிருந்து கொதிக்கவிட்டு இறக்கவும். பின் கடுகு, சீரகம், வெந்தயம், கறிவேப்பிலை என்பவற்றை தாளித்துப் போடவேண்டும். பலாக்காய் கிடைக்காவிட்டால் மரவள்ளிக்கிழங்கை சிறு சிறு துண்டுகளாக நறுக்கி சேர்த்துக் கொள்ளலாம். பழைய ஒடியல் மாவாக இருந்தால் அதை 4-5 முறை நீரில் ஊற வைத்துப் பிழிந்து தும்பு போக்கி எடுத்துக்கொள்ள வேண்டும். இக்கூழ் பசியைத் தணிப்பதுடன் போசாக்கு மிக்கதாகவும் விளங்குகிறது. மலத்தை இளக்கி நன்கு வெளியேற்றும்.

எனவே இக் குழை இடைக்கிடையே தயாரித்து பருகி வருவதால் மலம் நன்கு வெளியேறி அதிகரித்த வாதம் முதலிய தோஷங்கள் நீங்கி சமனிலை பேணப்பட்டு சரீர ஆரோக்கியமும் பேணப் படும். இன்றைய விஞ்ஞான ஆய்வுகள்கூட நார்த்தன்மையான உணவுகள் உணவுக் கால்வாயில் புற்றுநோய் ஏற்படுவதை தடுக்கின்றது என்பதை வலியுறுத்துகின்றது. ஒடியல் மாவில் தேவையான அளவு நார்ச்சத்து உள்ளதுஎன்பது குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

100 கிராம் ஒடியலில் உள்ள சத்துக்கள்

ஈரலிப்பு-10.8 கிராம்
சக்தி-320 கி.கலோரி
புரதம்-3.1கிராம்
கொழுப்பு-2.2கிராம்
காபோவைதரேற்று-77மி.கி
கல்சியம்-4.4மி.கி
இரும்பு-0.8 மி.கி
நார்ச்சத்து-5.6 கிராம்

குடலைச் சுத்தம் செய்வதில் ஒடியற்கூழுக்கு முக்கிய பங்குண்டு.

சின்னமுத்து, பொக்குளிப்பான போன்ற நிலைமைகளிலும் உணவுக்கால்வாய் சளிச்சவ்வுகளிலும் வாயிலும் ஏற்படும் புண்பாட்டிற்கு அருமருந்தாக அமையும். பதனீரில் உயிர்ச்சத்து B, இரும்புச்சத்து என்பன அதிகமுண்டு. குளிர்ச்சியானபானம் மட்டுமல்ல போசாக்கு மிக்கதுமாகும்.

100கிராம் பதனீரிலுள்ள சத்துக்கள்.

ஈரலிப்பு-86.0கிராம்
புரதம்-0.4கிராம்
காபோவைதரேற்று- 13.5 கிராம்
கல்சியம்-7மி.கிராம்
பொஸ்பரசு-14 மி.கிராம்
இரும்புச்சத்து-3.67மிகிராம்
உயிர்ச்சத்து 'C'-13மி.கிராம்

நுங்கு

வெப்பகாலமாகிய சித்திரை, வைகாசி மாதங்களில் நுங்கு கிடைக்கின்றது. இது உடல் உஷ்ணத்தை தணித்து உடலிற்குகுளிர்ச்சியைக்கொடுக்கக் கூடியது. அதிகரித்த பித்தத்தை தணிக்கக் கூடியது.

நீர்வார் வியர்க்குருவை நீக்குமனலக்குந்தோற்சார்வா
மலஞ்சீதந் தானொழிக்குஞ்-
சேர்வார்விழிக்கரையாற் துஞ்
சளிக்கு மென்சுரத மானே!

கழிக்கரையாந் தானியிளங்காம்.

நெய்தல் (கடலும் கடல் சார்ந்த இடமும்) நிலப்பனையினது இளங்காயிலுள்ள நுங்கின் நீரானது வியர்க்குருவை நீக்கும். பசியைத் தூண்டும் தோலுடனே இருக்கும் நுங்கு சீதக்கழிச்சலை குணமாக்கும்.

100 கிராம் நுங்கிலுள்ள சத்துக்கள்

ஈரலிப்பு-82.3 கிராம்
சக்தி-29 கி.கலோரி
புரதம்-10.8 கிராம்
கொழுப்பு-0.3கிராம்
காபோவைதரேற்று-6.5கிராம்
கல்சியம்-69 மி.கிராம்
பொசுபரசு-110 மி.கிராம்
இரும்பு-0.9 மி.கிராம்
உயிர்ச்சத்து B -10 மைக்ரோ கிராம்
ரைபோபிளேவின்-10 மை.கிராம்
உயிர்ச்சத்துC-8.5 மி.கிராம்
நார்ச்சத்து-0.3 கிராம்

(தொடரும்...)

## பாரதம்

# தேர்தல் நடைபெறாமல் தமிழகத்தில் ஆட்சிமாற்றம்

## டிடிவி.தினகரன் தெரிவிப்பு



(சென்னை)

தமிழகத்தில் தேர்தல் நடைபெறாமலேயே ஆட்சி மாற்றம் ஏற்பட வாய்ப்புண்டு என ஆர்.கே. நகர் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் டிடிவி. தினகரன் தெரிவித்துள்ளார்.

ஓஎன்ஜிசி நிறுவனத்தை வெளியேற்ற வேண்டும் என கடந்த 264 நாட்களாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கதிராமங்கலம் மக்களை டிடிவி. தினகரன் நேற்று முன்தினம் சந்தித்து பேசினார்.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள், கதிராமங்கலத்தில் ஓஎன்ஜிசி நிறுவனம் நிலத்தடியிலிருந்து கச்சா எண்ணெயை உறிஞ்சுவதால் நிலத்தடி நீர் பாதிக்கப்படுகிறது.

குடிநீர் மண் கலந்து அருந்த முடியாத நிலையில் உள்ளதாக கூறி, போத்தல்களில் பிடித்து வைக்கப்பட்ட குடிநீரை காண்பித்து, இங்கிருந்து ஓஎன்ஜிசி நிறுவனம் அகற்றப்படும் வரை எங்களது அறப்போராட்டம் தொடரும் எனவும் அவர்கள் தெரிவித்தனர். இது தொடர்பில் கதிராமங்கலம் மக்களிடையே டிடிவி. தினகரன் கருத்து தெரிவிக்கையில்,

இந்த பகுதியை பாதுகாக்கப்பட்ட வேளாண்மை மண்டலமாக அறிவிக்க வேண்டும்.

வேளாண்மை சார்ந்த தொழிலை தவிர வேறு எந்த தொழிலும் இப்பகுதியில் தடை செய்யப்பட வேண்டும்.

இதை கருத்தில் கொண்டு தான் நான் மக்கள் சந்திப்பு இயக்கத்தையே இந்த பகுதியில் தொடங்கியுள்ளேன்.

நான் இங்கு அரசியல் வாதியாக வரவில்லை. இந்த மண்ணை, சோழ மண்டலத்தை பாதுகாப்பதே நமது இலக்கு. அதற்கு நான் எப்போதும் துணை நிற்பேன் தமிழகத்தில் தேர்தல் நடைபெறாமலேயே ஆட்சி மாற்றம் ஏற்பட வாய்ப்புண்டு. என்னை நம்பி 18 எம். எல் ஏக்கள் வந்துள்ளனர்.

எனக்கு முதலமைச்சர் பதவி மீது ஆசையில்லை. ஒருவேளை நாங்கள் ஆட்சிக்கு வந்தால் இந்த 18 பேரில் ஒருவர்கூட முதல்வராகலாம் என டிடிவி.தினகரன் மேலும் தெரிவித்தார். (8-10)

## அமெ.பங்குச்சந்தை திடீர் வீழ்ச்சி முதலீட்டாளர்கள் பெரும் அதிர்ச்சி

அமெரிக்கப் பங்குச் சந்தையில் எதிர்பாராத வகையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இது ஆசிய பங்குச் சந்தையிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

30 முன்னணி நிறுவனங்களை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்படும் டோஜோன்ஸ் பங்குகளின் விலைச்சுட்டி 1,175 புள்ளிகள் வரை வீழ்ச்சியடைந்ததே இதற்கான காரணம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க மத்திய வங்கி வட்டி விகிதத்தை உயர்த்தும் என்ற செய்தி பரவியதை அடுத்தே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இதற்கமைய கடந்த திங்கட்கிழமை பங்குச் சந்தையின் இறுதி கணிப்பின் பிரகாரம் 4.6 வீத வீழ்ச்சியை காண்பித்திருப்பதாக அந் நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

2008ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தின் பின்னர் அமெரிக்கப் பங்குச் சந்தையில் ஏற்பட்ட மிகப்பெரிய வீழ்ச்சி இதுவென்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்த நிலைமையானது எதிர்காலத்தில் அமெரிக்க முதலீட்டாளர்களுக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் என்று பொருளியல் ஆய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்படுவதற்கான அறிகுறி தென்பட்டதால் சமீபத்திய மாதங்களாக அமெரிக்க பங்குச்சந்தைகளில் சீரான ஏற்றம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த வீழ்ச்சி நிலை தொடர்ந்தும் காணப்பட்டால் அது சர்வதேச ரீதியிலான பொருளாதாரத்திற்கும் தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதனால் ஆசிய பங்குச் சந்தையிலும் நேற்று முன்தினம் வர்த்தகம் சரிவுடனேயே ஆரம்பமானது குறிப்பிடத்தக்கது. (8-10)

## பாக்.இராணுவத்தாக்குதல் காஷ்மீரில் போர்ப்பதற்றம்

(ஸ்ரீநகர்)


காஷ்மீர் எல்லைப்பகுதியில் பாகிஸ்தான் இராணுவத்தின் எல்லை மீறிய தாக்குதல். அங்கிருந்து மக்கள் வெளியேறி வருகின்றனர்.

பாகிஸ்தான் இராணுவம் ஏவுகணைத் தாக்குதல் மேற்கொண்டிருந்த நிலையில் எல்லை மீறிய தாக்குதலுக்கு இந்திய இராணுவத்தினரும் பதில் தாக்குதலை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் இந்திய பாகிஸ்தான் எல்லைப் பகுதியான காஷ்மீர் ராஜோரி பகுதியில் மக்கள் குடியிருப்புகள் மீது பாகிஸ்தான் இராணுவம் தொடர் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றது. இதனால் அங்கு பதற்றம் நிலவி வருகிறது.

இந்தத் தாக்குதல்களிலிருந்து தங்கள் உயிர்களைப் பாதுகாத்துக்கொள்வதற்காக மக்கள் இருப்பிடங்களை விட்டு பாதுகாப்பான இடங்களை நோக்கி நகர்கின்றனர். (8-10)

## இந்தோனேசியாவில் வெள்ளப்பெருக்கு 6 ஆயிரத்து 500 பேர் இடப்பெயர்வு



(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் கடந்த சில நாட்களாகப் பெய்து வரும் அடை மழை காரணமாக, 6 ஆயிரத்து 500 பேர் இடம்பெயர்ந்துள்ளதாக அந் நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


இந்தோனேசியாவில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து அடைமழை பெய்துவரும் நிலையில், போகோர் (Bogor) நகரில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளதுடன், அந்நகரில் கடந்த திங்கட்கிழமை மண் சரிவு ஏற்பட்டது.

மண்சரிவைத் தொடர்ந்து 8 பேர் காணாமல் போயுள்ள தாகவும், அவர்களைத் தேடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போகோர் நகரைச் சேர்ந்த மக்களின் இயல்பு வாழ்க்கை, அடைமழை காரணமாக முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (8-10)

## குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் அமெரிக்கா-வடகொரியா பேச்சு

### ரெக்ஸ் டில்லர்ஸன் நம்பிக்கை



(சியோல்)

தென்கொரியாவில் அடுத்த வாரம் ஆரம்பமாகவிருக்கும் குளிர் கால ஒலிம்பிக் போட்டிகளுக்கு இடையே வடகொரியாவுடன் அமெரிக்கா பேச்சுவார்த்தையில் ஈடுபடும் என்று அந்த நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் ரெக்ஸ் டில்லர்ஸன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் பெரு நாட்டுத் தலைநகர் லீமாவில் நேற்று முன்தினம் கருத்து தெரிவிக்கையில்,

தென்கொரியாவில் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளைப் பார்வையிட, அமெரிக்க துணை ஜனாதிபதி மைக்பென்ஸ் அந்த நாட்டுக்குச் செல்கிறார்.

அப்போது அவரோ, பிற அமெரிக்க அதிகாரிகளோ வட கொரிய அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

அத்தகைய பேச்சுவார்த்தைகள் நடைபெறாது என்று கூற முடியாது என்றார் அவர்.

இதுவரை, வட கொரியா தனது அணு ஆயுத ஆய்வுகளை நிறுத்துவதற்காக அந்த நாட்டுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில், அந்த நாட்டுடனான பேச்சுவார்த்தையில் ஈடுபடப்போவதில்லை என்று அமெரிக்கா கூறி வந்தது.

இந்த நிலையில், தற்போது குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளின்போது வட கொரியாவுடன் பேச்சுவார்த்தை நடந்த வாய்ப்புள்ளதாக டில்லர்ஸன் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாடுகளின் எதிர்ப்பையும் மீறி வடகொரியா ஏவுகணைச் சோதனைகளையும், அணு குண்டு சோதனைகளையும் தொடர்ந்து நடத்தி வருகிறது.

அந்நாட்டைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அதன் மீது ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலும் அமெரிக்கா உள்ளிட்ட வல்லரசு நாடுகளும் பல வேறு பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன.

இதனால் கொரிய தீபகற்பத்தில் கடும் போர்ப் பதற்றம் நிலவி வந்தது.

இந்த நிலையில், தென் கொரியாவில் ஆரம்பமாகவிருக்கும் குளிர்கால ஒலிம்பிக்கில் தங்கள் நாட்டு வீரர்களை அனுப்புவது தொடர்பான பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருப்பதாக வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் இந்த ஆண்டின் தொடக்கத்தில் தெரிவித்தார்.

இதையடுத்து, வட கொரியாவின் எதிர்ப்பையும் மீறி ஆண்டுதோறும் நடைபெறும் அமெரிக்க - தென்கொரிய கூட்டு இராணுவப் பயிற்சி தள்ளி வைக்கப்பட்டது.

மேலும், இரு நாடுகளுக்கும் இடையே உள்ள பான்முன்ஜோம் எல்லை கிராமத்தில், பேச்சுவார்த்தை நடத்த தென்கொரியா முன்வந்தது.

இதையடுத்து, கடந்த டிசெம்பர் 2015ஆம் ஆண்டுக்குப் பிறகு முதல் முறையாக இரு நாடுகளுக்கிடையே அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. (8-10)

## துருக்கி ஜ... பாப்பரசர்...



(அங்காரா)

துருக்கி ஜனாதிபதி ரஜப் தயிப் அர்துகான் ... ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்று மு... இடம்பெற்றது. குறித்த சந்திப்பில் முக்கியத்துவம்... கலந்துரையாடப்பட்டுள்ளதுடன் குர்திஷ் ... முன்னெடுக்கப்படும் போராட்டங்கள் தொடர்பி... தொடர்பிலும் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப்... தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

துருக்கிய ஜனாதிபதி ஒருவர் 60 வருடங்... கள் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விபத்தில் சிக்கிய... மனைவி வைத்திய...



(ஜெய்பூர்)

பிரதமர் நரேந்திர மோடியின் மனைவி ஜசோதா பென் ராஜஸ் தானில் வீதி விபத்தில் படுகாயம் அடைந்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் கோடா - சித்தூர் நெடுஞ்சாலையில் ஜசோதாபென் சென்ற வாகனம் விபத்திற்குள்ளானது. விபத்தில் ஜசோதா பென்னின் உறவினரான வசந்த்பாய் மோடி என்பவர் உயிரிழந்துள்ளார்.

விபத்தில் படுகாயமடைந்த ஜசோதா பென் சித்தூர்கர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் ஜசோதா பென்னுக்கு தலையில் காயம் ஏற்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்...

## பாகிஸ்தானு... அமெரிக்க நா...

(வோஷிங்டன்)

பாதுகாப்பு விவகாரங்களுக்கு தவிர்த்து பாகிஸ்தானுக்கு அளிக்கப்படும் பிறவகை பொருளாதார உதவிகளை நிறுத்துவதற்கான மசோதா, அமெரிக்க நாடாளுமன்றத்தின் செனட்டில் அறிமுகம் செய்யப்பட்டது.

பாகிஸ்தானுக்கு அளிக்கப்படும் அத்தகைய உதவிகள், பயங்கரவாதிகளுக்கு இராணுவ உதவிகளையும், உளவுத் தகவல்களையும் அளிப்பதற்கே பயன்படுத்தப்படுவதாக குறித்த...

# வெளிநாடு

## ஜனாதிபதி தயிப் அர்துகான் ...சர் பிரான்சிஸ் சந்திப்பு







...பி அர்துகான் - பாப்பரசர் பிரான்சிஸ் ...ப்பு நேற்று முன்தினம் வத்திக்கானில் ...முக்கியத்துவம் வாய்ந்த பல விடயங்கள் ... குர்திஷ் போராளிகளுக்கு எதிராக ...கள் தொடர்பிலும், சிரியா நிலவரங்கள் ...திபதி டிரம்ப் இன் நடவடிக்கைகள் ...ட்டது.

... 60 வருடங்களின் பின்னர் வத்திக் ...தக்கது. (8-10)

## தாய்வானில் நிலநடுக்கம்; இடிபாடுகளில் சிக்கி இருவர் பலி!



(தைபே)

தாய்வான் நாட்டில் ஏற்பட்ட 6.4 ரிக்டர் அளவிலான சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் சிக்கி 2 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். 100-க்கு மேற் பட்டோர் படுகாயம் அடைந் துள்ளனர்

தாய்வான் நாட்டின் வட கிழக்கு கடற்கரை பகுதியில் நேற்று 6.4 ரிக்டர் அளவு கோலில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

கடற்கரை நகர மான ஹவாலியனில் இருந்து வடக்கு திசையில் சுமார் 14 கிலோமீற்றர் தொலைவிலும், கடலுக்கடியில் சுமார் ஒரு கிலோ மீற்றர் ஆழத்திலும் இந்த நிலநடுக்கம் மையம் கொண்டிருந்ததாக அமெ ரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கம் ஏற்பட்டதை தொடர்ந்து வீடுகளில் இருந்த மக்கள் அலறியடித்துக் கொண்டு வீதியில் தஞ்சம் புகுந்தனர். வீடுகளின் சுவர்களில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கத்தில் ஹவாலியன் நகரில் உள்ள ஹோட்டல் உட்பட பல்வேறு கட்டடங்கள் இடிந்து விழுந்தன. ஹோட்டல்இடிபாடுகளில் சிக்கி 2 பேர் பலியாகினர். மேலும் 114 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

தகவலறிந்து பேரிடர் மீட்பு பணியினர் மீட்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.


கட்டட இடிபாடுகளில் சிக்கிய வரகளை மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களை மீட்டு அருகிலுள்ள வைத்திய சாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வீதிகளில் ஆங்காங்கே விரிசல்கள் ஏற்பட்டுள்ளதால் போக்குவரத்து பாதிப்பு அடைந்துள்ளது..

கடந்த 1999ஆம் ஆண்டில் தாய்வான் தீவில் 7.6 ரிக்டர் அளவுகோலில் ஏற்பட்ட நில நடுக்கத்தில் சிக்கி 2,400 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (8-10)

## ...சிக்கிய மோடியின் ...வைத்தியசாலையில்



...துள்ளனர்.

அவருக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. ராஜஸ்தான் மாநிலம் பாராமாவட்டத்தில் உள்ள உறவினர் இல்லத்திற்கு சென்று விட்டு குஜராத்திற்கு திரும்பி சென்ற போது இந்த விபத்து ஏற்பட்டதாக முதற்கட்ட விசாரணையில் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த விபத்துக்கான காரணம் பற்றி உடனடியாக எந்த தகவலும் வெளியாகவில்லை. ஆரம்ப கட்ட தகவலின் படி, ஜசோதா பென்னிற்கு இலேசான காயமே ஏற்பட்டதாக தெரிய வருகிறது. (8-10)

## உலகின் சக்திவாய்ந்த ரொக்கெட் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது

(கலிபோர்னியா)


அதிக வேகத்தில் செல்லும் உலகின் மிகச் சக்திவாய்ந்த பெல்கான்ரொக்கெட்டை ஸ்பேஸ்-எக்ஸ்நிறுவனம் வெற்றிகர மாக விண்ணில் செலுத்தியது.

ரொக்கெட்டில் உள்ள மூன்று உயர்த்திகளில் மொத்தம் 27 என்ஜின்கள் உள்ளன.

இந்த என்ஜின்கள் அனைத்தும் மொத்தமாக இணைக்கப்பட்டுள்ளன. அது ஒரு இலட்சத்து 40 ஆயிரம் பவுண்ட் எடையுடன் பூமி வட்டப்பாதையை சுற்றி வரும் வகையில் வடிவமைக் கப்பட்டுள்ளது.

செவ்வாய்க் கிரகத்திற்கு 40 ஆயிரம் பவுண்ட் எடையுடன் சுற்றிவரும் திறன் கொண்டது.

நேற்று முன்தினம் பெல்கான் ரொக்கெட் புளோரிடா கடல் பகுதியில் உள்ள விண்வெளி தளத்தில் இருந்து விண்ணிற்கு வெற்றிகரமாக செலுத்தப்பட்டது (8-10)



## மாலைதீவில் அரசியல் குழப்பம் உச்சநீதிமன்ற நீதிபதிகள் கைது

(மாலி)

கடுமையான அரசியல் குழப்பங்களுக்கு மத்தியில் மாலைதீவில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. அந்த நாட்டின் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாலைதீவு நாட்டின் உச்ச நீதிமன்றம் கடந்த வாரம் பரபரப்பான ஒரு தீர்ப்பை அளித்தது.

அதில், சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி முகமது நஷீத் உள்ளிட்ட 9 அரசியல் தலைவர்களை விடுதலை செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும் ஜனாதிபதி யாமீன் அப்துல் கயூமின் மாலைதீவு முன்னேற்ற கட்சியின் 12 எம்.பி.க்களை தகுதி நீக்கம் செய்தது செல்லாது என்றும் கூறப்பட்டுள்ளது. இந்த தீர்ப்பை ஜனாதிபதி யாமீன் அப்துல் கயூம் ஏற்றுக் கொள்ளாமையால் அங்கு அரசியல் குழப்பங்களுக்கு காரணமாக அமைந்தது.

இந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை இரவு அங்கு திடீரென அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டது. அவசர நிலை பிரகடனம் செய்த சில மணி நேரத்துக்குள் அந்த நாட்டின் உச்ச நீதிமன்ற பாதுகாப்பு படைகள் முற்றுகையிட்டு அங்கு



இருந்த தலைமை நீதிபதி அப்துல்லா சயீத், நீதிபதி அலி ஹமீத் ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டனர்.

மேலும், அந்த நாட்டின் முன்னாள் சர்வாதிகாரியும், எதிர்க்கட்சி அரசியல்வாதியுமான மாமூன் அப்துல் கயூம், பாதுகாப்பு படையினரால் வீட்டில் இருந்து அழைத்துச் செல்லப்படும் காட்சியை அவரது மகள் வெளியிட்டு உள்ளார்.

ஜனாதிபதி முகமது மாலைதீவில் ஏற்பட்டு உள்ள அரசியல் நெருக்கடி குறித்து முகமது நஷீத் கருத்து தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் கூறும்போது, மாலைதீவில் அவசர நிலையை பிரகடனம் செய்து இருப்பது, மக்களின் அடிப்படை சுதந்திரத்தை தடை செய்திருப்பது. உச்ச நீதிமன்ற தீர்ப்பை நிராகரித்து இருப்பது, இராணுவ ஆட்சியை பிரகடனம் செய்வதற்கு ஒப்பாகும். அவசரநிலையை அறிவித்து இருப்பது அரசியல் சாசனத்துக்கு எதிரானது. சட்ட விரோதமானது. இதை யாரும் பின்பற்றத் தேவை இல்லை"

மேலும், இந்த அரசியல் நெருக்கடியை முடிவுக்கு கொண்டுவர இந்தியா உதவ வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுபற்றி அவர் தன் டுவிட்டரில் பக்கத்தில் விடுத்துள்ள செய்தியில், மாலைதீவுக்கு இந்தியா ஒரு தூதரை அனுப்பி, அங்குள்ள அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும்.

மாலைதீவு தலைவர்கள் மீது அமெரிக்கா பொருளாதார தடை விதிக்க வேண்டும் என மேலும் தெரிவித்துள்ளார். (8-10)

## ...னுக்கான உதவிகள் நிறுத்தம் ... நாடாளுமன்றில் புதிய மசோதா

மசோதாவில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

மேலும், பாகிஸ்தானுக்கு தற்போது அளிக்கப்படும் இராணுவமற்ற நிதியுதவிகளை நிறுத்திவிட்டு, அந்தத் தொகையை அமெரிக்காவின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுவதற்காகப் பயன்படுத்தவும் குறித்த மசோதாவில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

தெற்கு கரோலினா எம்.பி. மார்க் சான்ஃபோர்டு மற்றும் கென்டகி எம்.பி. தாமஸ் மாஸீ ஆகியோர் இந்த மசோதாவை அறிமுகப் படுத்தியுள்ளனர்.

பயங்கரவாதிகளுக்கு பாகிஸ்தான் அரசு நன்கு தெரிந்தே உதவிகளை அளித்து வருவதாக எம்.பி.க்கள் குற்றம் சாட்டினர்.

கடந்த 2001 ஆம் ஆண்டு செப்டெம்பர் 11 ஆம் திகதி அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடத்தப்பட்ட இரட்டை கோபுரத் தாக்குதலுக்குப் பிறகு, சுமார் 3,400 கோடி டொலரை (ரூ. 21.8 இலட்சம் கோடி) உதவித் தொகையாக பாகிஸ்தானுக்கு அமெரிக்கா அளித்துள்ளது.

கடந்த 2017 ஆம் ஆண்டு மட்டும், பாகிஸ்தானுக்கு அமெரிக்கா 52.6 கோடி டொலர்(சுமார் ரூ.3,380 கோடி) உதவித் தொகை வழங்கியது குறிப்பிடத்தக்கது. (8-10)

# மகிந்தவின் மருமகன் உதயங்கவைக் காப்பாற்ற உக்ரேன் அதிகாரிகள் முயற்சி

(கொழும்பு)

டுபாய் விமான நிலையத்தில் கைது செய்யப்பட்ட, ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவரை, தம்மிடம் கையளிக்குமாறு உக்ரேனிய அதிகாரிகள், அபுதாபி அதிகாரிகளிடம் கோரியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.



அமெரிக்காவுக்குச் செல்லும் வழியில் டுபாய் விமான நிலையத்தில் கடந்த 4ஆம் திகதி உதயங்க வீரதுங்க கைது செய்யப்பட்டார். அனைத்துலக பொலிஸ் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட அவர், டுபாய் விமான நிலைய குடிவரவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு, அபுதாபி அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளார்.

இவரை இலங்கைக்குக் கொண்டு வருவதற்காக, ஏழு இலங்கை அதிகாரிகளைக் கொண்ட சிறப்புக் குழுவொன்று டுபாய்க்குப் பயணமாகவுள்ளது.

இந்தக் குழுவில் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி ஒருவர், சட்டமா அதிபர் திணைக்கள் அதிகாரிகள் இருவர், குடிவரவுத் திணைக்கள அதிகாரி ஒருவர், குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் இருவர், வெளிவிவகார அமைச்சின் அதிகாரி ஒருவர் ஆகியோர் இடம்பெறவுள்ளனர்.

இவர்கள் உதயங்க வீரதுங்கவை இலங்கைக்கு கொண்டு வரும் நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர்.

உதயங்க வீரதுங்கவை கூடிய விரைவில் இலங்கைக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்குமாறும் அபுதாபி அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக, சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை, தற்போது அபுதாபியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள உதயங்க வீரதுங்கவை தமது நாட்டுக்கு அனுப்பி வைக்குமாறு உக்ரேனிய அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

உதயங்க வீரதுங்க தமது நாட்டுக் குடியுரிமை பெற்றவர் என்ற வகையில் அவரைத் தமது நாட்டுக்கு அனுப்புமாறு உக்ரேனிய அதிகாரிகள் கோரியுள்ளனர் என்றும் தெரியவருகின்றது. உதயங்க வீரதுங்க முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மருமகன் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மீதொட்டமுல்ல விவகாரம் குறித்த இறுதி முடிவு ஜனாதிபதி கையில்

(கொழும்பு)

கொலன்னாவ, மீதொட்டமுல்ல குப்பை மேடு அனர்த்தம் குறித்த விசாரணைகளுக்காக நியமிக்கப்பட்டிருந்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி முடிவு நேற்று முன்தினம் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்தக் குழுவின் தலைவரான ஓய்வுபெற்ற நீதிமன்ற நீதிபதி சந்திரதாச நாணயக்கார இந்த அறிக்கையை ஜனாதிபதிக்கு வழங்கியதுடன் இந்நிகழ்வில் குழு செயலாளர் டீ.எம் கருணாரத்ன மற்றும் சட்ட அலுவலர் பாலிதா அபேவர்த்தன ஆகியோர் கலந்து கொண்டனர்.

2015, 2016ஆம் ஆண்டுகளில் குப்பை சேகரிக்கும் தனியார் நிறுவனங்களுக்கு அசாதாரணமான முறையில் கொடுப்பனவு வழங்கப்பட்டிருப்பதாக, அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



கொழும்பு மாநகர சபையினால் 2014ஆம் ஆண்டு இதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவு 64 மில்லியன் ரூபாவாகவும் 2015ஆம் ஆண்டில் 182 மில்லியன் ரூபாவாகவும், 2016ஆம் ஆண்டில் 232 மில்லியன் ரூபாவாகவும் அந்தக் கொடுப்பனவுகள் அதிகரித்திருப்பதாகவும் தெரியவந்துள்ளது. குப்பைகளை அகற்றுவது தொடர்பாக கொழும்பு மாநகர சபையினால் ஆரம்பம் முதலே முறையான நிகழ்ச்சித் திட்டமொன்று பின்பற்றப்படாமை இந்த அனர்த்தத்திற்கு காரணமாகும் என்று அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-7)

# இளைஞர்-யுவதிகள் காதலிக்க இலவச வை-பை அவசியமாம்!

## ரணில் கூறியதாக மகிந்த கிண்டல்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெளியிட்ட கருத்தினை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கிண்டலடித்து பேசியுள்ளார்.



நாட்டின் அரசியல் தலைவர்கள் மக்களுக்கு நகைச்சுவைகளை வழங்கி வருவதாக மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கந்தளாய் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பிரதமர் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் வெளியிட்ட கருத்தினை தான் செவிமடுத்ததாக மகிந்த குறிப்பிட்டுள்ளார்.

இளைஞர், யுவதிகள் காதலிப்பதற்கு இலவசவை-பை அவசியம் என பிரதமர் குறிப்பிட்டார். அதற்கு முன்னர்பசியை போக்க வேண்டிய அவசியம் அரசாங்கத்திற்கு உள்ளதாக மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## இரண்டிற்கும் தயாராக இருங்கள்!

ஒருவருக்கு ஒரு சிபாரிசுக் கடிதம் கொடுக்கிறோம். அந்தக் கடிதத்துடன் செல்கிறவருக்கு, போகிற இடத்தில் காரியம் ஆகுமா? ஆகாதா என்று தெரியாத நிலை.

குடும்ப உறுப்பினர்களுடன் ஊருக்கோ ஒரு திரையரங்கிற்கோ போகிறோம். டிக்கெட் கிடைக்குமா? கிடைக்காதா? என்பது உறுதி இல்லை.

ஒருவருக்கு ஓர் உதவி செய்வதா, வேண்டாமா, அதை நம்மால் செய்ய முடியுமா? முடியாதா? என்று தெரியாத நிலை.

இப்படிப்பட்ட வெவ்வேறு சூழ்நிலைகளில் மற்றவர்களுக்கு ஏகமாய் நம்பிக்கையூட்டாமல், இரண்டிற்கும் தயாராக இருங்கள் என்று சம்பந்தப்பட்டவர்களிடம் சொல்லி வைப்பது நல்லது. பாதுகாப்பானதும் கூட.

ஒருவர் வாடகைக்கு வீடு வைத்திருக்கிறார். விடுவதா? வேண்டாமா? என்ற தயக்கம். வீடுவேண்டும் என்று கேட்கிறவரிடம், நாளை வாருங்கள் பதில் சொல்கிறேன். ஆனால் இரண்டுவிதமான பதிலுக்கும் தயாராக இருங்கள் என்று சொல்லி வைப்பது நல்லது.

மனைவிக்கு வெளியே புறப்பட ஆசை. கணவன், நான் ஆபீஸிலிருந்து சீக்கிரமே வந்துவிடுகிறேன் என்று சொல்வது நல்லதல்ல. வரப் பார்க்கிறேன். இரண்டிற்கும் தயாராக இரு என்று சொல்வது நல்லது. இப்படிச் சொல்லிவிட்டு நேரத்திற்குப் போய்விட்டால் மனைவிக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. போகாவிட்டால் அது அவ்வளவு ஏமாற்றமாக இராது சண்டையும் வராது.

இரண்டிற்கும் தயாராக இருங்கள் என்று சொல்வதற்குக் கனமான அர்த்தங்கள் உண்டு.

இப்படிச் சொன்னதுமே எதிராளிக்குள் மனத் தயாரிப்பு நடக்கிறது. இதன் மூலம் நாம் எடுக்கும் எதிரான முடிவுகள் அவர்களுக்கு அதிர்ச்சி தருவது இல்லை.

நமக்கும் ஒரு சௌகரியம் பரிசீலிக்கவும் யோசிக்கவும் போதுமான அவகாசம் கிடைக்கிறது. உடனே முடிவெடுக்க இயலாத சந்தர்ப்பங்களில் இந்த வாக்கியம் மிகவும் உறுதுணையாய் இருக்கிறது.

உடனடியாகச் செய்ய முடியும் என்கிற விடயத்திலும் உறுதியாக நடக்கும் என்கிற விடயத்திலும் இந்த வாக்கியம் பயன் படுத்தப்படக் கூடாது. இப்படிச் செய்தால் தயங்கிச் செய்யப்படும் நல்ல செயலுக்குக் கூட மரியாதை இல்லாமல் போய்விடும்.

உறுதிப்பாடற்ற தெளிவற்ற விடயங்களில் மட்டுமே இந்த உத்தியைக் கையாள வேண்டும். வாயிலிருந்து வரும் வார்த்தை செக் கொடுக்கிற மாதிரி. அது பௌன்ஸ் ஆகி, ரிட்டன் ஆகிவிடக்கூடாது.

**லேனா தமிழ்வாணன்**

# இலங்கையில் நிலவும் அரசியல் குழப்பங்களால் வெளியேறும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள்

(கொழும்பு)

இலங்கையில் அரசியல் உறுதித்தன்மையில் குழப்பங்கள் ஏற்பட்டுள்ளதால் அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் மதிப்பு கடுமையான வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது. உள்ளூராட்சித் தேர்தலை ஒட்டிய அரசியல் குழப்பங்கள் இலங்கையின் அரசியலில் உறுதியற்ற நிலையை ஏற்படுத்தியுள்ளது. இது நாட்டின் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது. இதனால் அரசாங்க பங்கு சந்தையில் இருந்து வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வெளியேறத் தொடங்கியுள்ளனர்.

அத்துடன், அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கையின் ரூபாவின் மதிப்பும் சரியத் தொடங்கியுள்ளது.

கடந்த வாரத்தின் இறுதி நாளான, பெப்ரவரி 2ஆம் திகதி அமெரிக்க டொலர் ஒன்றின் மதிப்பு, 155.94 ரூபாவாக இருந்தது.

சுதந்திர தின விடுமுறைகளுக்குப் பின் நேற்று முன்தினம் வங்கிகள் திறக்கப்பட்ட போது, அமெரிக்க டொலர் ஒன்றுக்கான இலங்கை ரூபாவின் மதிப்பு, 156.13 ரூபாவாக வீழ்ச்சியடைந்துள்ளது.

அண்மைய நாட்களாக இலங்கை ரூபாவின் மதிப்பு தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மகிந்தவின் குடியுரிமையில் ரணில் குறி சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி. எதிர்ப்பு



(கொழும்பு)

மோசமான குற்றங்களில் ஈடுபடுபவர்களின் குடியியல் உரிமைகளைப் பறிப்பதற்கு ஏற்ற வகையில், அரசியலமைப்பின் 81 ஆவது பிரிவில் திருத்தம் செய்வதற்கு அனைத்து அரசியல் கட்சிகளும் உதவ வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கி பிணைமுறி மோசடி மற்றும் முன்னைய ஆட்சிக்கால முறைகேடுகள் குறித்து விசாரித்த ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் அறிக்கைகை தொடர்பாக நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் நடந்த சிறப்பு விவாதத்தின் போதே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

"முன்னைய ஆட்சிக்கால ஊழல்கள், மோசடிகள் குறித்து விசாரித்த ஜனாதிபதி ஆணைக்குழு, மோசமான குற்றங்களில் ஈடுபட்டவர்களின் குடியியல் உரிமைகளைப் பறிக்கும் வகையில், அரசியலமைப்பின் 81 ஆவது பிரிவில் திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது. அவ்வாறு திருத்தம் செய்வதற்கு கட்சித் தலைவர்கள் தயாரா?" என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதேவேளை, எந்தவொரு நபரினதும், குடியியல் உரிமைகளைப் பறிப்பதற்கான நகர்வுகளுக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஒத்துழைக்காது என்று அந்தக் கட்சியைச் சேர்ந்த அமைச்சரான மகிந்த அமரவீர நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் குடியியல் உரிமைகள் நியாயமற்ற வகையில் பறிக்கப்பட்டது. எனவே எவருடைய குடியியல் உரிமைகள் பறிக்கப்படுவதற்கும் நாங்கள் விரும்பவில்லை. தவறு செய்தவர்களை சட்டரீதியாக கையாளலாம்" என்று தெரிவித்தார்.

அத்துடன், மகிந்த ராஜபக்ஷவினதோ அல்லது வேறு எவருடையதோ குடியியல் உரிமைகளைப் பறிப்பதற்கு, தமது கட்சி துணைநிற்காது என்று ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவும் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். (இ-7)

# பிரதமர் பாதுகாப்பு பிரிவின் டிபென்டர் மோதியதில் 5 பேர் வைத்தியசாலையில்

(கொழும்பு)

பிரதமர் பாதுகாப்புப் பிரிவிற்கு சொந்தமான டிபென்டர் வாகனம் வீதியில் பயணித்த ஆட்டோ ஒன்றுடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் 5 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மாரவில பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் சிலாபம் கொழும்பு வீதியின் கட்டுனேரிய பிரதேசத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் பிரதமர் பாதுகாப்பு பிரிவு டிபென்டர் வாகன சாரதியாக செயற்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் அமில சம்பத் மற்றும் ஆட்டோவில் பயணித்த கண்டி வீதி, வெலிவேரிய பிரதேசத்தை சேர்ந்த 20 வயது விக்ரமித மதுஷான், 21 வயது எல்.ஆர்.விஷ்வ, 17 வயது எல்.ஆர்.இஷான் மற்றும் 28 வயது எல்.ஆர்.சமீர ஆகியோரே இவ்வாறு காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் மாரவில வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

புத்தளத்தில் இடம்பெற்ற பிரதமரின் மக்கள் சந்திப்பிற்கு சென்று திரும்பி வந்த விசேட அதிரடி படையினர் குறித்த டிபென்டர் வாகனத்தில் பயணித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இவ்விபத்து தொடர்பாக மாரவில பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# அலோசியஸை பார்வையிட அனுமதியில்லை சிறைச்சாலையில் தீவிர கட்டுப்பாடு விதிப்பு



(கொழும்பு)

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பேர்பச்சுவல் ட்ரஸரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அலோசியஸ் மற்றும் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேன ஆகியோரை பார்வையிட அனுமதி வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை மத்திய வங்கி பிணை முறி மோசடியுடன் தொடர்புடையதாக சந்தேகத்தின் பேரில் அலோசியஸ் மற்றும் கசுன் பலிசேன ஆகியோர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இருவரையும் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறை கூடத்திற்கு அருகாமையில் சென்று நட்பாக பேசி உரையாடுவதனை தவிர்த்துக் கொள்ளுமாறு சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு, சிறைச்சாலை அதிகார சபை அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

சந்தேக நபர்களுக்கு சிறைச்சாலையில் விசேட சலுகைகள் வழங்கப்படுவதாக சில தரப்பினர் செய்து வரும் பிரசாரங்களை நிறுத்தும் நோக்கில் இவ்வாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலையில் பெரிய, சிறிய அனைத்து சந்தேக நபர்களும் ஒன்றே எனவும், சிறைச்சாலையில் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் இரண்டு சந்தேக நபர்களுக்கு மட்டும் விசேட சலுகைகளோ கவனமோ செலுத்தப்படாது என சிறைச்சாலைகள் திணைக்களப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இரண்டு சந்தேக நபர்களின் தேவைக்கு அமைய அவர்களுக்கு வீடுகளிலிருந்து உணவு வகைகளை வழங்க முடியாது என அவர் தெரிவித்தார். (இ-7)

# மைத்திரிபால கவனமாக இருங்கள் எதிரியை வெளியில் தேட வேண்டாம்

## மகிந்த எச்சரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதியை கவனமாக இருக்குமாறும், எதிரியை வெளியில் தேட வேண்டாம் எனவும், வீட்டிற்குள்ளேயே எதிரி இருப்பதாகவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எச்சரித்தார்.

கந்தளாய் பிரதேசத்தில் இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மகிந்த இவ்வாறு எச்சரித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தவறான இடத்தில் எதிரி இருப்பதாக விளங்கியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய அமைச்சர்கள் கூறி வரும் உதாரணங்களில் ஜனாதிபதியின் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகவும் மகிந்த ராஜபக்ஷ மேலும் சுட்டிக் காட்டினார். (இ-7)


## கண்ணீர் அஞ்சலி

### அமரர் திருமதி.மகாலட்சுமி திருநாவுக்கரசு



எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி. யோகலட்சுமி திரவியநாதன் அவர்களின் அன்புச் சகோதரி 01.02.2018 அன்று பிரான்சில் காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/கொக்குவில் இந்துக்கல்லூரி.

(2687)

# ஏறாவூரில் பெண்வேட்பாளர் உட்பட 3 பெண்கள் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதி

(ஏறாவூர்)


உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஏறாவூர் நகர சபைக்காக போட்டியிடும் மகிந்த ராஜபக்ஷ அணியின் தாமரை மொட்டு பொதுப் பட்டியல் வேட்பாளரான யுவதி மற்றும் அவரது பிரசார ஆதரவாளர்களான இருவர் உட்பட மொத்தம் 3 பெண்கள் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் தேர்தல் வன்முறையாக முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஏறாவூர் ஜுஃப்ரியா வட்டாரத்தில் போட்டியிடும் தாமரை மொட்டு அணியின் பெண் வேட்பாளருக்கு ஆதரவாக அவரது குழுவினர் வீடு வீடாகச் சென்று கொண்டிருந்தபோது மாற்று அணியைச் சேர்ந்த ஒருவர் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டு இந்தப் பெண்களைத் தாக்கத் தொடங்கியதாகவும் அதில் காயமடைந்த பெண்கள் மூவரும் உடனடியாக ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் தாக்குதலுக்குள்ளான கர்ப்பிணியான பெண்ணொருவர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

பொதுப்பட்டியல் வேட்பாளரான யுவதியும் பிரசார ஆதரவாளரும் தொடர்ந்து ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக ஏறாவூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (இ-7)




# அமைதியாக நடைபெற்ற பிணைமுறி விவாதம்

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி பிணைமுறி மோசடி மற்றும் பாரிய ஊழல் மோசடி தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையை நேற்று முன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் முன்வைத்து விவாதத்தை ஆரம்பித்தார். எனினும் இந்த விவாதத்திற்கு பெரும்பாலான உறுப்பினர்கள் வருகை தரவில்லை. இதனால் மந்தகதியில் விவாதம் நடைபெற்றது.

பிரதமரின் பிரேரணையை சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல முன்மொழிந்தார்.

பாராளுமன்றம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் சபாநாயகர் கருஜெயசூரிய தலைமையில் கூடியது. இதன் பின்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையை முன்வைத்தார்.

பிரதமரின் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையை சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல ஆமோதித்தார்.

மத்திய வங்கி பிணைமுறி மோசடி மற்றும் பாரிய ஊழல் மோசடி தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கைகள் மீதான விவாதம் தொடர்பில் அனைவரினதும் எதிர்பார்ப்பு இருந்தது. எனினும் நாடு எதிர்பார்த்த வகையில் விவாதத்தின் நடவடிக்கைகள் இருக்கவில்லை. பாராளுமன்ற அமர்வுகள் மிகவும் மந்தகதியில் இருந்தன. அத்துடன் எதிர்பார்த்த அளவிற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் விவாதத்தில் பங்குபற்றவில்லை.

பாராளுமன்ற அமர்வு ஆரம்பித்த போது சபையில் 20 உறுப்பினர்கள் மாத்திரமே அமர்ந்திருந்தனர். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உட்பட ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் பலர் இருந்தனர். மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களில் விஜித ஹேரத் தவிர ஏனையோர் வருகை தந்திருந்தனர். சுதந்திரக் கட்சியில் நான்கு பேரளவிலேயே வருகை தந்திருந்தனர். கூட்டு எதிர்க்கட்சியில் பெருந்தொகையானோர் வருகை தந்திருக்கவில்லை. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் எவரும் கலந்து கொள்ளவில்லை.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றியதன் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான ஹர்ஷ டி சில்வா, எரான் விக்கிரமரத்ன, ரவி கருணாநாயக்க, அஜித் பீ பெரேரா ஆகியோரும் சுதந்திரக் கட்சி சார்பில் மகிந்த அமரவீர, லசந்த அலகியவண்ண ஆகியோரும் கூட்டு எதிர்க்கட்சி சார்பில பந்துல குணவர்தன, விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகியோரும் மக்கள் விடுதலை முன்னணி சார்பில் அதன் தலைவரும் எதிர்க்கட்சி பிரதம கொறடாவுமான அநுரகுமார திஸாநாயக்க விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றினர். இதன்படி முற்பகல் 10.30 மணிக்கு பாராளுமன்றம் கூடி மாலை 4 மணிக்கு நிறைவடைந்தது. (இ-7)

# எம்.பிக்களை அவமதிக்கும் கருத்துகள் சபையில் வேண்டாம்

## சபாநாயகர் கரு கட்டுப்பாடு

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் சர்ச்சைக்குரிய பிணைமுறி விவகாரம் பற்றி விசாரித்த ஜனாதிபதி ஆணைக்குழு மற்றும் பாரிய ஊழல் மோசடி குற்றச்சாட்டுகள் பற்றிய ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு ஆகியவற்றின் அறிக்கைகள் மீதான நாடாளுமன்ற விவாதத்தின் போது, எம்.பிக்கள் ஒருவரையொருவர் தனிப்பட்ட ரீதியில் அவமதிக்கும் வகையிலான கருத்துகளை வெளியிட வேண்டாம் என்று சபாநாயகர் கரு ஜெயசூரிய சபையில் நேற்று நேற்று வலியுறுத்தினார்.

மேற்படி ஆணைக்குழு அறிக்கைகளை விவாதிக்கும் நிமித்தம் நாடாளுமன்றம் நேற்று முன்தினம் காலை கூடிய போது, சபாநாயகர் அறிவித்தல் நேரத்திலேயே கருஜெயசூரிய இந்த விடயத்தை வலியுறுத்தினார்.

சபை ஒத்திவைப்பு வேளை விவாதமாகவே இந்த ஆணைக்குழு அறிக்கைகள் மீதான விவாதம் இடம்பெற்ற நிலையில், சபை நடவடிக்கைகளின் ஆரம்பத்திலேயே சபாநாயகர் ஜெயசூரிய மேற்படி அறிவுறுத்தலை எம்.பிக்களுக்கு முன்வைத்துவிட்டார்.

இது தொடர்பில் சபாநாயகர் அறிவித்தல் விடுகையில், "இலங்கை மத்திய வங்கியின் சர்ச்சைக்குரிய பிணைமுறி விவகாரம் பற்றி விசாரித்த ஜனாதிபதி ஆணைக்குழு மற்றும் பாரிய ஊழல் மோசடி குற்றச்சாட்டுகள் பற்றிய ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு ஆகியவற்றின் அறிக்கைகள் மீதான சபை ஒத்திவைப்பு வேளை விவாதமொன்றை நடத்துவது சம்பந்தமான விடயங்கள் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பேசப்பட்டன.

இந்த விவாதத்தின் போது, நாடாளுமன்றத்தின் 78 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளின் பிரகாரம் எம்.பிக்கள் ஒருவரையொருவர் தனிப்பட்ட ரீதியில் அவமதிப்பை ஏற்படுத்தும் வகையில் குற்றச்சாட்டுகளை முன்வைத்துக் கொள்ளாமல் நாடாளுமன்றத்தின் மதிப்பையும் சகல எம்.பிக்களின் கௌரவமும் பாதுகாக்கப்படும் வகையில் விவாதத்தில் பங்கு கொள்ளுமாறு, அனைத்து எம்.பிக்களையும் கேட்டுக் கொள்கின்றேன்" என்று சபாநாயகர் ஜெயசூரிய மேலும் தெரிவித்தார். (இ-7)

# பிரிட்டன் பாதுகாப்பு ஆலோசகர் கடற்படைத்தளபதியுடன் சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக்கான பிரித்தானிய பாதுகாப்பு ஆலோசகர் கப்டன் பிரேஸர் நிகல்ஸன் மற்றும் கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் சிறிமேவன் ரணசிங்க ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் கடற்படை தலைமையகத்தில் இடம்பெற்றது.

குறித்த சந்திப்பில் முகக்கியத்துவம் வாய்ந்த பல விடயங்கள் தொடர்பில் சிநேகபூர்வ கலந்துரையாடல் இடம்பெற்றதுடன் சந்திப்பை நினைவு கூரும் வகையில் நினைவுச் சின்னங்களும் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

குறித்த சந்திப்பில் இலங்கைக்கான பிரித்தானிய துணை தூதுவரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மின்சாரம் தாக்கி யுவதி பலி!

(கொழும்பு)

புலத்சிங்ஹல, ஹேனத்தன்ன பகுதியில் நேற்று முன்தினம் மாலை மின்சாரம் தாக்கி யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தேயிலை தொழிற்சாலையொன்றின் அதிகாரியாக கடமையாற்றிய குறித்த யுவதி தனது வீட்டிலிருக்கும் போது மின்சார தாக்குதலுக்குள்ளாகியுள்ளதுடன் புலத்சிங்ஹல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதை அடுத்து அவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அம்பிலிபிட்டிய, கொடகவெல பிரதேசத்தை சேர்ந்த 20 வயதுடைய யுவதி ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். (இ-7)

# சிறுத்தையின் உடல் மீட்பு



(ஹற்றன்)

ஹற்றன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காசல்ரீ நீர்த்தேக்கத்திற்கு அருகாமையில் லைதன்டி தோட்டப் பகுதியில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் இறந்த நிலையில் சிறுத்தையின் உடல் மீட்கப்பட்டுள்ளதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த லைதன்டி தோட்ட மக்களால் ஹற்றன் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் குறித்த சிறுத்தையின் உடலை மீட்டுள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்ட சிறுத்தைக்கு கழுத்து பகுதியில் காயங்கள் காணப்படுவதாகவும், இது தொடர்பாக வனவிலங்கு காரியாலய அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹற்றன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# காற்றுடன் கூடிய மழையால் மூன்று வீடுகளுக்குச் சேதம்



(கொழும்பு)

நானுஓயா - கிளாரன்டன் மேற்பிரிவு தோட்டத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் வேளையில் கடும் காற்றுடன் கூடிய மழை பெய்ததால் அங்குள்ள 3 தொழிலாளர் குடியிருப்புக்கள் சேதமடைந்துள்ளன.

குறித்த குடியிருப்புக்களின் கூரைகள் காற்றில் அள்ளுண்டு போயுள்ளதாகவும் குடியிருப்புக்களில் இருந்த பொருட்கள் அனைத்தும் சேதமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 16 பேர் தோட்டத்திலுள்ள கிறிஸ்தவ தேவாலயத்தில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர். (இ-7)

## “ இலங்கையில் நீதி அநீதியாகியுள்ள சூழல் ”

# என்னை அச்சுறுத்தலாமென்று வீண் கனவு காண வேண்டாம்

## கோத்தபாய ராஜபக்ஷ தெரிவிப்பு

(வோஷிங்டன்)

டுபாய் விமான நிலையத்தில் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்ட ரஷ்யாவிற்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க என்னைச் சந்திப்பதற்காக அமெரிக்கா வர முற்படவில்லை எனத் தெரிவித்துள்ள முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ விரைவில் நாடு திரும்பியதும் அரசாங்கத்தின் போலிப் பிரசாரங்களுக்கு பதிலடி கொடுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

நாட்டுக்காக நேர்மையாகச் செயற்பட்ட எனக்கு எதிராக போலியான விசாரணைகளை முன்னெடுத்து என்னை அச்சம் கொள்ள வைக்க முடியுமென அரசாங்கம் நினைத்தால் அது வெறும் கனவாகவே அமையும் என்றும் கோத்தபாய எச்சரிக்கை விடுத்துள்ளார் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அமெரிக்காவிலிருந்து வெளியிட்டுள்ள விசேட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை சந்திப்பதற்காகவே ரஷ்யாவிற்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க அமெரிக்காவிற்குச் செல்ல முற்பட்டதாகக் கூறப்படும் தகவல்களில் எவ்விதமான உண்மைகளும் இல்லை. அதேபோன்று உதயங்க வீரதுங்க டுபாய் விமான நிலையத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டமையினால் ராஜபக்ஷ குடும்பத்தினர் குழப்பம் அடைந்துள்ளதாக அமைச்சர் ராஜித சேனாரட்ன மிகவும் மோசமாக பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றார்.

தற்போதைய அரசாங்கத்திலுள்ள சிலர் இவ்வாறான போலியான பிரசாரங்களை கடந்த மூன்று வருடங்களாக மேற்கொண்டு வருகின்றனர். உதயங்க வீரதுங்கவிற்கு என்னைச் சந்திக்க வேண்டிய விசேட தேவைகள் எதுவும் இருக்கும் என நான் நம்பவில்லை. அமெரிக்காவிற்கான அவரது விஜயமானது தனிப்பட்ட ஒன்றாக இருந்திருக்கலாம்.

எவ்வாறாயினும் உதயங்க வீரதுங்கவின் பெயரைப் பயன்படுத்தி தொடர்ந்தும் எமக்கு எதிராகப் போலியான பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. எனவே உதயங்க சுய விருப்பின் பெயரில் இலங்கைக்குச் சென்று விசாரணைகளை மேற்கொள்ளும் பொலிஸாரிடம் சாட்சியம் அளிப்பதினூடாக போலியான பிரசாரங்களுக்கு முடிவு கட்ட முடியும்.



இதனூடாக அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்க முடியும் என நான் உறுதியாக நம்புகின்றேன். நீதி அநீதியாகியுள்ள சூழலில் அரசாங்கத்தின் அடக்கு முறைகளுக்கு அச்சப்பட்டு இந்த சவாலை தவிர்த்து கொள்கின்றமையானது போலியான பிரசாரங்களுக்கு பதிலளிப்பப்பதாகவே அமையும்.

கடந்த மூன்று ஆண்டு காலமாக என்னை அவமானப்படுத்தும் நோக்கில் அரசாங்கம் கடந்த மூன்றாண்டு காலமாக பல்வேறு விசாரணைகளை முன்னெடுத்தது. ரத்னா லங்கா பாதுகாப்பு சேவை , விமானப்படைக்கு "மிக்" விமானங்களை கொள்வனவு செய்தமை மற்றும் அவன் கார்ட் கடன்சார் பாதுகாப்பு சேவை போன்ற விசாரணைகளுக்கு நான் சாட்சியமளித்துள்ளேன். எதிர்காலத்திலும் விசாரணைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பினை வழங்குவேன். இதுவரைகாலமும் எனக்கு எதிராக முன்வைத்த குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க முடியாமல் அரசாங்கம் புதிய காரணிகளைத் தேடி வருகின்றது.

நாட்டுக்காக நேர்மையாக செயற்பட்ட எனக்கு எதிராக போலியான விசாரணைகளை முன்னெடுத்து என்னை அச்சம் கொள்ள வைக்க முடியுமென அரசாங்கம் நினைத்தால் அது வெறும் கனவாகவே அமையும். நாட்டு மக்கள் அரசியல்வாதிகளைவிட முன்னிலையில் உள்ளனர் என்பதை அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும். நாட்டிற்கு எவ்விதமான அபிவிருத்திகளையும் செய்யாது வெறுமனே அடக்கு முறைகளினூடாக ஆட்சியை முன்னெடுக்க அரசாங்கம் முயற்சிக்கின்ற நிலையில் மக்கள் சரியான சந்தர்ப்பத்தில் தகுந்த பாடம் புகட்டுவார்கள். விரைவில் நாடு திரும்பியவுடன் அரசாங்கத்தின் போலியான பிரசாரங்களுக்கு பதில் அளிப்பேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1323

Search for people, places and things | Nagendram Home

### ஜனனி

Fashion TV பார்க்காத பசங்ககூட இருப்பாங்க



ஆனா Fair & Lovely போடாத பொண்ணுங்களே இருக்கமாட்டாங்க

### சுஜீபா


பைக்ல போய்கிட்டு இருந்தோம் பெற்றோல் விலையை ஏத்துனாங்க... சரி பஸ்ல போலாம்னு பார்த்தா டிக்கெட் விலைய ஏத்திட்டானுங்க...



நடந்து போலாம்னு இருக்கோம். ஏதும் குழிய தோண்டிப் போட்டுறாதீங்க

### அனுஜன்

இதயம் எத்தனை முறை காயப்பட்டாலும் மனதுக்குப் பிடித்தவரை மறக்காது



காரணம் இதயத்திற்கு நடிக்கத் தெரியாது... துடிக்க மட்டுமே தெரியும்

### ரவி

சரித்திரத்தை திரும்பிப் பார்த்த அது எனக்கு கத்துக் குடுத்தது ஒன்னே ஒன்னுதான்...



நாம வாழனும்னா நேரா நேரத்துக்குச் சாப்பிடனும்

### உஷாந்தன்

முந்தியெல்லாம் ஒரு பொண்ண காதலிக்க வைக்கிறது கஷ்டம்....



இப்பலாம் அது நம்மள மட்டுமே காதலிக்க வைக்கிறதுதான் பெருங்கஷ்டம்

### லக்சனா

மனைவி: என்னங்க ஏதாவது விலங்குகள் காட்சிசாலைக்கு கூட்டிட்டுப் போங்க...
கணவன்: சரி கிளம்பு...



மனைவி: எங்க போகலாம்
கணவன்: உங்க வீட்டுக்குத்தான்.

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## சோமாலியா கொள்ளையர்களிடம் சிக்கிய கப்பல் போன்று

# 70 வருடங்களாக இலங்கைத் தீவு கொள்ளையர்களிடம் சிக்கியுள்ளது

## ஜே.வி.பி. தலைவர் அநுர கடும் விசனம்

(கொழும்பு)

***ஊழல் தொடர்பான அறிக்கைகளை கையில் வைத்துக் கொண்டு ஊழலில் ஈடுபட்டவர்களை ஆட்சியமைக்க அழைப்பது ஜனாதிபதியின் ஊழலுக்கெதிரான போராட்டமே ஊழல் மிக்கதாக மாறியுள்ளதா? என்ற சந்தேகம் ஏற்படுவதாகவும் சோமாலியா நாட்டு கடற்கொள்ளையர்களிடம் சிக்கிய கப்பல் போன்று எழுபது வருடங்களாக இலங்கைத்தீவு கொள்ளையர்களிடம் சிக்கியுள்ளது என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.***


பிணைமுறி மோசடி மற்றும் பாரிய நிதி மோசடிகள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை மீதான விவாதத்தில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஊழல் தொடர்பான ஆணைக்குழுக்களின் சில அறிக்கைகள் இரண்டு வருடங்களுக்கு முன்னரே ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டிருந்தாலும் அவை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படாமல் இப்போது அரசியல் இலாபம் பெறவே பயன்படுத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

பிணைமுறி மோசடி இந்த நாட்டையும் மக்களையும் எவ்வாறு பாதித்துள்ளது என்பது குறித்து கவனம் செலுத்தப்படுவதில்லை. கடந்த 10 வருடங்களில் ஊழலால் இந்த நாடு 12 ஆயிரத்து 500 கோடி ரூபாய்களுக்கு அதிகமான நிதியை இழந்துள்ளது.

ஊழல்காரர்களை தண்டிக்கவே மக்கள் இந்த அரசாங்கத்தை ஆதரித்தனர். எனினும் இந்த அரசாங்கம் உருவாக்கப்பட்டு சிறிது காலத்திலேயே பெரும் ஊழலில் ஈடுபட்டது. சிலர் இன்று வரை ஊழலில் ஈடுபட்டவர்களை பாதுகாக்க முயற்சிக்கின்றனர்.

பிணைமுறி மோசடி 2015 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி இடம்பெற்றது. நாம் இதுகுறித்து பாராளுமன்றில் மார்ச் மாதம் 17ஆம் திகதி கேள்வியெழுப்பினோம். இன்று மூன்று வருடங்களை நெருங்கியுள்ளது. இவ்விடயத்தில் பிரதமர் அப்போதே கவனம் செலுத்தியிருக்க வேண்டும். அவ்வாறில்லாது நல்லாட்சி தொடர்பாக இன்று கதைக்க தகுதியில்லை. இப்போது கழுத்து இறுகிய பின்னர் தப்பிக்க முற்படுவது சாத்தியமாகாது.



பிணைமுறி மோசடிக்கும் மத்திய வங்கி ஆளுநருக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று பிரதமர் அப்போது கூறினாலும் அது ஜனாதிபதி அறிக்கையில் பொய்யாகியுள்ளது. பிரதமர் மகேந்திரனை பாதுகாத்தார் என்பது தெளிவாகியுள்ளது.

மக்களே ஊழலில் ஈடுபட்டவர்களை தண்டிக்க வேண்டும். முன்னைய ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற 34 பாரிய நிதி மோசடி குறித்த அறிக்கையும் வெளியாகியுள்ளன. குறித்த 34 மோசடிகளைத் தவிர மேலும் எவ்வளவோ பாரிய மோசடிகள் இடம்பெற்றுள்ளன.

முன்னாள் ஜனாதிபதியின் ஊழலொன்று குறித்து பிரபலமாக பேசப்படுகின்றது. அவரது குடியுரிமை நீக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளையும் கண்டோம். குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். எனினும் அரசியல் காரணங்களுக்காக பாராளுமன்றம் தண்டனை வழங்கும் இடமாக மாறுவதை நாம் ஒருபோதும் அங்கீகரிக்க மாட்டோம். சோமாலிய கடற்கொள்ளையர்களிடம் சிக்கிய கப்பலை போன்று 70 வருடங்களாக இலங்கைத் தீவு கொள்ளையர்களிடம் சிக்கியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# "என்னைக் கொல்லுங்கள்"

## நாடாளுமன்றில் பந்துல சவால்

(கொழும்பு)

கடந்த கால செயற்பாடுகளைக் கையில் எடுப்பதாயின், பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையை மீண்டும் ஆராய வேண்டுமென சவால் விடுத்த ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன, அடுத்த நாடாளுமன்ற அமர்வில் பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையை முழுமையாக நான் வாசிக்கின்றேன். முடிந்தால் அதற்கு முன்னர் என்னைக் கொல்லுங்கள் என்றும் சவால் விடுத்தார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் நடந்த விவாதத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த அரசாங்கத்தின் ஊழல்களை முழுமையாக மறைக்க மகிந்த ராஜபக்ஷவின் பெயரை களங்கப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தேசிய வீரர்கள் அனைவரும் ஒருகாலத்தில் அவமானங்களையும், அழுத்தங்களையும் சந்தித்தவர்கள். ஆனால் இன்று அவர்களின் சிலைகள் தான் அனைத்து இடங்களிலும் வைக்கப்பட்டுள்ளன.

மகிந்த ராஜபக்ஷவும் இந்த நாட்டின் மாற்றத்தை ஏற்படுத்திய தேசிய வீரர். அவரை அவமானப்படுத்த வேண்டாம். இது நாட்டுக்கும் மக்களுக்கும் செய்யும் அவமானமாகும்.

இவர்களின் ஊழல் மோடிகளின் விளைவுகள் அடுத்த ஆண்டு தொடக்கம் தெரிய வரும். அத்துடன், மத்திய வங்கியின் செயற்பாடுகளை தவறாக சித்திரிக்கும் இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகள் மூலமாக இலங்கையின் பொருளாதாரம் மிகவும் நெருக்கடிக்கு உள்ளாக்கப்படும்.

சர்வதேசம் எம்மீதான நம்பிக்கையை இழக்கும். சர்வதேச முதலீடுகள் முழுமையாகத் தடுக்கப்படும். ஆகவே, தவறுகளை உடனடியாக சரிசெய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தூய அரசியல் இயக்கத்துடன் நாட்டை முன்கொண்டு செல்லும் பயணம் ஆரம்பிக்கப்படும்

## ஜனாதிபதி மைத்திரி உறுதி



(கொழும்பு)

மக்கள்மீது நம்பிக்கை வைத்து தூய அரசியல் இயக்கத்துடன் நாட்டை முன்கொண்டு செல்லும் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பிற்பகல் மஹரகம பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

ஊழல் அரசியல்வாதிகளைப் பாதுகாப்பதற்காக புதிய கட்சியொன்றினூடாக கட்டியெழுப்பப்பட்டுள்ள பிம்பம் நாட்டை நேசிக்கும் மக்களுடன் இணைந்து வீழ்த்தப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். எதிர்காலத்தில் இந்த நாட்டை சுபீட்சமான தேசமாகக் கட்டியெழுப்புவதற்காக தூய அரசியல்வாதிகளே தலைமைதாங்க வேண்டும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி , அத்தகைய மக்கள் சார்பு இயக்கத்தில் முன்னணி வகிக்கக்கூடியது நாட்டின் மக்கள் சார்பு இயக்கமான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மட்டுமேயாகும் எனவும் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப்பதவியை தான் நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி பெற்றுக்கொண்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி தொலைக்காட்சி அலைவரிசையொன்றுக்குத் தெரிவித்திருப்பதை நினைவுபடுத்திய ஜனாதிபதி முன்னாள் சபாநாயகரின் இல்லத்திற்கு தன்னை வருமாறு அழைத்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் முன்னிலையில் ஒரே மேசையில் அமர்ந்து கலந்துரையாடியதன் பின்னர் தலைவர் பதவியை தனக்கு பொறுப்பளித்தவர் முன்னாள் ஜனாதிபதி என்றும் இத்தகைய கூற்றுக்கள் தொடர்பில் தான் கவலையடைவதாகத் தெரிவித்தார்.

இன்று எதிர்க்கட்சி அரசியல்வாதிகளினால் எழுப்பப்படும் அனைத்து குற்றச்சாட்டுக்களையும் விமர்சனங்களையும் நிராகரிப்பதாக தெரிவித்த ஜனாதிபதி,

சுதந்திர ஜனநாயக சமூகமொன்றில் ஊழல், மோசடியில்லாத தூய அரசியல் இயக்கத்துடன் நாட்டை கட்டியெழுப்பும் நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகத் தெரிவித்தார். (இ-7)

## தமிழ் - முஸ்லிம் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தவே கோத்தா கிறீஸ் பேயை உருவாக்கி திருவிளையாடல் காட்டினார்

### ஐ.தே.க. அமைச்சர் தயா கமகே சுட்டிக்காட்டு

(ஏறாவூர்)

கடந்த ஆட்சியின் போது கிறீஸ் மனிதன் உருவாக்கினார்கள். சிங்கள தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தினார்கள். கிறீஸ் மனிதனை பிடித்து பொலிஸில் கொடுத்தால் இராணுவத்தினர் வந்து அவர்கள் மனநோயாளிகள் என கொண்டு செல்கிறார்கள். இது அனைத்துமே கோத்தபாய ராஜபக்ஷவின் திருவிளையாடல் என சிறு கைத்தொழில் அமைச்சர் தயா கமகே தெரிவித்தார்.

மட்டக்களப்பு ஏறாவூர்ப்பற்று ரமேஸ்புரத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற நிகழ்வின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த கால ஆட்சியாளரான மகிந்த ராஜபக்ஷ எம்மையும் எமது குழந்தைகளையும் பிறக்கவிருக்கும் குழந்தைகளையும் கடனாளியாக்கிவிட்டு சென்றுள்ளார்.

அம்பாந்தோட்டை சூரியவெவ கிரிக்கெட் மைதானம், துறைமுகம், மத்தல விமான நிலையம், கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை அனைத்துமே கடனுடன் தான் உள்ளது. இதிலே அரைவாசியை நாசம் செய்து மிகுதியை கொள்ளையடித்துள்ளார்கள். இவர்கள் கொள்ளையடித்த நிதியை நாங்களும் நீங்களும் இணைந்து வட்டியுடன் கட்ட வேண்டும்.

அரசாங்கத்திற்கு எதிராக போராட்டங்கள் நடைபெற்ற போது துப்பாக்கியால் சுட்டு கொலை செய்தார்கள். குடிநீருக்காக போராடிய மக்களை வெடிவைத்து துரத்துமாறு கோத்தபாய ராஜபக்ஷ உத்தரவிட்டார்.

ஊடகவியலார் லசந்த விக்கிரமதுங்க மற்றும் ரக்பி வீரர் தாஜுடீன் ஆகியோர் கொலை செய்யப்பட்டனர். பிரதீப் எக்னெலிகொட காணாமல் ஆக்கப்பட்டார்.

செங்கலடி பிரதேசம் கால்நடை வளர்ப்புக்கு உகந்ததாக காணப்படுகிறது. எனது அமைச்சின் ஊடாக செங்கலடியிலுள்ள பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு பசு மாடுகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழ் சமுதாயம் பசுக்களை பால் பெறுவதற்காகவே வளர்க்கின்றனர் இறைச்சியை சாப்பிடுவதற்கு அல்ல என்பது எமக்கு தெரியும்.

பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு தலா ஆறு பசுக்களை வழங்க நினைத்திருக்கின்றோம். இதனூடாக ஐந்து இலட்சத்துக்கு மேல் வருமானம் பெறக் கூடிய வாய்ப்புகள் உள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# எந்த நாட்டில் மகேந்திரன் இருந்தாலும் கைது செய்வோம்-சு.க.அமரவீர அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் எந்த நாட்டில் இருந்தாலும் அவரால் தப்பிக்க முடியாது. உதயங்க வீரதுங்க போன்று அவரையும் கைது செய்ய முடியும். அத்துடன் பிணைமுறி மோசடியுடன் சம்பந்தப்பட்ட அனைவரையும் கைது செய்வோம் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான மகிந்த அமரவீர சபையில் தெரிவித்தார்.

அத்துடன் மத்திய வங்கி மோசடி விவகாரத்தில் நாடகம் அரங்கேற்றப்படுவதாக கூறப்படுகின்றது. இவ்வாறு கூறி ஜனாதிபதியை பலவீனப்படுத்த வேண்டாம். இது நாடகமல்ல. அத்துடன் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிரஜாவுரிமையை நீக்க நாம் ஒத்துழைப்பு வழங்க மாட்டோம் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மத்திய வங்கி பிணைமுறி மோசடி மற்றும் பாரிய ஊழல் மோசடி ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கைகள் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

மத்திய வங்கி பிணை முறி மோசடியுடன் சம்பந்தப்பட்டவர்களை தற்போது கைது செய்துள்ளோம். இந்த விடயத்தில் நான் பெருமைப்படுகின்றேன். ஏனெனில் நான் முதலில் இந்த மோசடிக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தேன். அப்போதும் முறைப்பாடு செய்வதற்கு பலர் அஞ்சினர். எனினும் நான் அவ்வாறு இருக்காமல் முறைப்பாடு செய்தேன்.

மத்திய வங்கி மோசடி நடக்கவில்லை என்று எவராலும் கூற முடியாது. அது முற்றிலும் தவறாகும். இலங்கை வரலாற்றில் நடந்த பாரிய ஊழல் மோசடியே பிணைமுறி மோசடியாகும். இதனால் நாட்டின் பொருளாதாரம் மாத்திரமின்றி சர்வதேச உறவுகளுக்கும் பாதிப்பு ஏற்பட்டது. இதனால் மக்கள் பாரதூரமான பாதிப்புகளுக்கு உள்ளாகினர். அதே போன்று 2008 முதல் 2015 ஆம் ஆண்டும் வரைக்கும் இவ்வாறான மோசடி நடந்துள்ளது. எனவே இது தொடர்பிலும் நாம் விசாரிப்போம். இதற்காக தனி விவாதமொன்றையும் நடத்த நாம் தயாராக உள்ளோம் என்றார்.

இதன்போது குறுக்கிட்டு பேசிய உதய கம்மன்பில, 2008 முதல் 2015 ஆம் ஆண்டு வரை பிணைமுறி மோசடி தொடர்பில் ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதா? அவ்வாறாயின் அந்த பக்கத்தை கூறுங்கள் என்றார்.

இதன்போது தனது உரையை தொடர்ந்த அமைச்சர் அமரவீர, உதய கம்மன்பில ஆரம்பத்தில் ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு எதிர்ப்பு வெளியிட்டார். அவர் எதிரணியினரா? அல்லது ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளரா? என்பது தெரியவில்லை. எவ்வாறாயினும் ஏனைய கோப் குழு அறிக்கையைப் போன்று மத்திய வங்கி மோசடி தொடர்பான அறிக்கையை நாம் குப்பைக்குள் போடவில்லை. இது தொடர்பில் உரிய விசாரணையை முன்னெடுத்தோம்.

நாம் ஒருபோதும் தனி நபரை இலக்குவைத்து இதனை முன்னெடுக்கவில்லை. இனிமேலும் இவ்வாறான மோசடிகள் நடக்கவிட முடியாது. மத்திய வங்கி மோசடி விவகாரத்தில் நாடகம் அரங்கேற்றப்படுவதாகக் கூறப்படுகின்றது. இவ்வாறு கூறி ஜனாதிபதியை பலவீனப்படுத்த வேண்டாம். இது நாடகமல்ல.

அத்துடன் மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பில் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் கைது செய்யப்படவில்லை. அவர் தப்பித்து விட்டார் என கூறுகின்றார். அப்படி நடக்க நாம் விடமாட்டோம். மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனால் தப்பிக்க முடியாது. உதயங்க வீரதுங்க போன்று அவரையும் கைதுசெய்ய முடியும். அத்துடன் பிணைமுறி மோசடியுடன் சம்பந்தப்பட்ட அனைவரையும் கைதுசெய்வோம்.

நாம் நீதியை நிலைநாட்டும் போது பதவிகளை ஒருபோதும் பார்ப்பதில்லை. தராதரம் பாராமல் அனைவருக்கும் எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிரஜாவுரிமையை நீக்க நாம் ஒத்துழைப்பு வழங்க மாட்டோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ரணில் ஆட்சியில் செய்யமுற்பட்டதை மகிந்த ஆட்சியில் ஏன் செய்யவில்லை

## அமீர் அலியிடம் ஹக்கீம் கேள்வி

(ஏறாவூர்)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் அவரோடு இருந்த அமீர் அலி அப்போதே கோறளைப்பற்று மத்திக்கு தனி பிரதேசசபையை கொண்டு வந்திருக்க வேண்டும் என அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

வாழைச்சேனையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமது கட்சியினை விட்டு சென்றவர்களுக்கு கதவு மூடப்பட்டுள்ளது. இவர்களுக்காக மீள திறக்கப்பட மாட்டாது. வாழைச்சேனையில் வாக்குகளைப் பெறுவதற்கு வழியில்லாமல் அமீர் அலி பிரதமரை அழைத்து வந்திருந்தார். வந்து கோறளைப்பற்று மத்திக்கு பிரதேச சபை தருவதாக தெரிவித்தார்.

இந்த விடயத்தினை மகிந்த காலத்தில் அவரோடு கட்டிப்பிடித்து இருந்த வேளையில் செய்திருக்க வேண்டும். அப்போது தமிழ் மக்களை பற்றி கவலைப்படாமல் செய்து முடித்திருக்கலாம்.

முதலில் இழந்த கிராம சேகவர் பிரிவுகளை வர்த்தமானியில் பிரசுரிக்க வேண்டும். இது நடக்காமல் கோறளைப்பற்று மத்தி பிரதேச சபையை தரப்போகின்றோம் என்பதில் அர்த்தம் இல்லை.

இந்த மண்ணில் நடைபெற்ற அட்டூழியங்கள், அநியாயங்கள், உருவாக்கப்பட்டுள்ள அரசியல் கலாசாரம் இல்லாமல் செய்யப்பட வேண்டும். இதற்கு முடிவு கட்ட மக்கள் ஒன்று திரண்டுள்ளனர்.

காணியை மீட்டுத் தருவதை விட்டுவிட்டு இருக்கின்ற காணியை பிடிப்பதில் இவர்களின் கவனம் போகின்றது. தங்களுக்கு காணி சேர்ப்பது எப்படி வாகரை தியாவட்டவான் பகுதிக்கு சென்றால் தெரியும். எங்கெல்லாம் வேலி கட்டி காணி பிடித்துள்ளார்கள் என்று தெரியும் என தெரிவித்தார். (இ-7)


### யாரிடம் பேசுவது?

யார், என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?

எம்முடன் பேசுங்கள்.

**கை கொடுக்கும் நண்பர்கள்**

104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்

*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை

**021 222 8117, 077 900 8776**

வவனியாவில்: (024) 324 4444

(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)

(இ-4675)


# என் குரல் ஓங்கி ஒலித்தாலே இந்நாட்டில் காரியம் நடக்கும்

## அமைச்சர் மனோ தம்பட்டம்



(கொழும்பு)

எங்கள் ஒருமித்த முற்போக்கு கூட்டணியின் ஏணிக்கொடி கொழும்பில் மாத்திரமல்ல, கண்டி, மாத்தளை, இரத்தினபுரி மாவட்டங்களிலும் வெற்றிக் கொடி நாட்டும் என்பதில் எந்தவொரு சந்தேகமும் இல்லை என தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சரும், கொழும்பு மாவட்ட எம்.பியுமான மனோ கணேசன் தெரிவித்தார்.

மயிலே. மயிலே இறகு போடு என்றால் போடாது. இறகு கட்டாயம் தேவையென்றால் அதை பிடுங்கித்தான் எடுக்கவேண்டும். இதுதான் இந்நாட்டு யதார்த்தம். மைத்திரிபால சிறிசேன நாம் உருவாக்கிய ஜனாதிபதிதான்.

ரணில் விக்கிரமசிங்க நாம் உருவாக்கிய பிரதமர்தான். இது நாம் உருவாக்கிய அரசாங்கம்தான். ஆனாலும் நமது அரசுக்கு உள்ளே நாம் பலமாக இருக்கவேண்டும். அப்போது தான் நம் குரல் ஓங்கி ஒலிக்கும். சும்மாவே என் குரல் ஓங்கித்தான் ஒலிக்கும். இன்னமும் பலம் கிடைத்தால் அது இன்னமும் ஓங்கி ஒலிக்கும். அப்படி ஓங்கி ஒலித்தால்தான், இந்நாட்டில் காரியம் நடக்கும். இது வரலாறு எனக்கு கற்றுத்தந்த பாடம்.

ஆகவேதான் நாம் சிறுபான்மையாக வாழும் தேர்ந்தெடுத்த பல இடங்களில் நமது கட்சி ஏணிச்சின்னத்தில் தனித்து போட்டியிடுகிறது. புதிய தேர்தல் முறையை உருவாக்க நான் பெரும் பங்களிப்பு வழங்கினேன். இந்த கலப்பு முறையின் கீழ் நமக்கு வட்டாரங்கள் கிடைத்துள்ளன. பட்டியலும் கிடைத்துள்ளன. ஆகவே வட்டாரம் மூலமாகவும், பட்டியல் மூலமாகவும் வெற்றிபெற வாய்ப்புகள் உள்ளன.

எனவே எங்கே எங்களுக்கு உரிய இடங்கள் தரப்பட ஐக்கிய தேசிய முன்னணியில் தயக்கமும், மறுப்பும் தெரிவிக்கப்பட்டதோ அங்கேயெல்லாம், நாம் தனித்து ஏணிச்சின்னத்தில் போட்டியிடுகிறோம். எங்களை சும்மா பகடைக்காய்களாகவும், வாக்கு வங்கிகளாகவும் மட்டும் நினைக்கும், பெரும்பான்மை கட்சிகளுக்கு நாம் யார் என்று காட்ட வேண்டிய வேளை வந்துவிட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



10.01.2018 புதன்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் பேராசிரியர் கலாநிதி**

## விஜயரத்தினம் ஜோன் மனோகரன் கென்னடி

(எதியோப்பியப் பல்கலைக்கழக ஆங்கிலப் பேராசிரியர் மற்றும் கிழக்கு, தென்கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் ஆங்கில விரிவுரையாளர்)

அவர்களின்

அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 08.02.2018 வியாழக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் காரைநகர் ஆலங்கன்று வைரவர் கோவிலடி அந்தியேட்டி மடத்திலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை 09.02.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது நீலிப்பந்தனை, காரைநகர் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

சண்முகனின் வாசம்
நீலிப்பந்தனை,
காரைநகர்.

(2638)

குடும்பத்தினர்.
077 946 9547,
077 611 2664.




# யார் மீது தவறு?



இப்பப் பார்... ஒரு காயாச்சும் விழலேன்னா என் பேரை மாத்திக்கிறேன்!" என்றபடி அந்தப் பெரிய மாமரத்தை நோக்கிக் கல்லை வீசினான் ப்ரதீப்.

"ஹலோ நேரம் ஆச்சு... கொஞ்சம் வேகமா நடக்கிறியா? முதல் நாளே லேட்டா போயி திட்டு வாங்கவா?" என்று சலித்துக் கொண்டான் அவன் நண்பன் தமிழரசன்.

கோடை விடுமுறைக்குப் பிறகு அன்றுதான் பள்ளி திறந்தது. ஏழாம் வகுப்பு கலகலவென்றிருந்தது. நீண்ட இடைவேளைக்குப் பிறகு மாணவர்கள் தங்கள் நண்பர்களைச் சந்தித்துக் கொண்டார்கள். வேறு பள்ளிகளிலிருந்து வந்து புதிதாகச் சேர்ந்த மாணவர்களையும் நண்பர்களாக்கிக் கொண்டார்கள். அப்படி வேறு பள்ளியிலிருந்து வந்தவன்தான் குமார். அவனைத் தனக்கு முன்பே தெரியும் என்றும் நல்ல நண்பன் என்றும் ப்ரதீப்பிடம் சொல்லியிருந்தான் தமிழரசன். குமாரை அவனுக்கு அறிமுகப்படுத்த ஆவலுடன் காத்திருந்தான்.

அந்த அறிமுகப்படலம்தான் விவகாரமாகிவிட்டது. ஒரு சிறுமியின் கையிலுள்ள தின்பண்டத்தைப் பிடுங்கும் ஆவலுடன், அவள் பின்னாலே சென்ற நாயைக் கண்டான் குமார். அந்த நாயை விரட்டுவதற்காக ஒரு கல்லை எடுத்து எறிந்தான். நாய் மீது லேசாக உரசிச் சென்ற அந்தக் கல், அருகிலிருந்த ப்ரதீப் முதுகில் விழுந்துவிட்டது. வலியுடன் திரும்பியவனிடம் ஓடி வந்து மன்னிப்புக் கேட்டான் குமார்.

யாரோ ஒரு புதியவன், தன் மீது கல் எறிந்துவிட்டானே என்ற ஆத்திரத்தில் முறைத்தான் ப்ரதீப்.

"மன்னிச்சிடு நண்பா, நான் நாய் மீதுதான் கல் எறிந்தேன். அது தவறுதலாக உன் மீது பட்டுவிட்டது. தெரியாமல் செய்தாலும் தவறுதான்" என்றான் குமார்.

விருட்டென்று அந்த இடத்தைவிட்டு வேகமாக நகர்ந்தான் ப்ரதீப். சமாதானம் செய்ய முயன்ற தமிழரசன், மற்ற நண்பர்களின் முயற்சி தோல்வியில் முடிந்தது.

அதற்குப் பிறகு குமார் இருக்கும் இடத்தில் தான் இருப்பதைத் தவிர்த்தான் ப்ரதீப். எத்தனையோ முறை குமார் அவனிடம் நட்பாகப் பேச முயன்றும் முடியவில்லை. இவர்களை எப்படி நண்பர்களாக்குவது என்று தமிழரசனும் தவித்தான்.

நாட்கள் ஓடின. வழக்கமாகப் பள்ளிக்குச் செல்லும் வழியில் இருக்கும் மாந்தோப்பின் அருகே குமாருக்காகக் காத்திருந்தான் ப்ரதீப். அவன் மனமோ கோபத்தில் கொந்தளித்துக்கொண்டிருந்தது. இத்தனை நாள் அவன் ஆவலோடு காத்திருந்த பாட்டுப் போட்டியில் அவனால் கலந்து கொள்ள முடியவில்லை. இதற்குக் காரணம் குமார். இதை நினைக்க நினைக்க குமாரின் மீதான கோபம் இன்னும் அதிகமானது. பாட்டுப் போட்டியில் குமார் கலந்து கொள்வதால், தான் சேர முடியாமல் தவித்தான் ப்ரதீப்.

அங்கு வந்த தமிழரசனிடமும் தன்எண்ணத்தை வெளிப்படுத்தினான்.

"போட்டியில் அவன் சேர்ந்தால் உனக்கென்ன? நீயும் பேர் கொடுக்க வேண்டியதுதானே?"

"தமிழரசா, அவனுக்கு முன்னால் நான் உன் நண்பன் என்பதை மறந்துவிடாதே. அவனைப் பழி வாங்காமல் என் கோபம் அடங்காது!" "முதல்ல ரெண்டு மாங்காய்களை அடி. அப்புறம் பழி வாங்குறதைப் பத்தியோசி"

ஒரு கல்லை எடுத்துக் குறி பார்த்து மாங்காய்கள் மீது அடித்தான். மாங்காய்கள் விழுவதற்குள் 'அம்மா' என்ற அலறல் கேட்டது. இருவரும் மாந்தோப்பிலிருந்து வெளியே வந்தனர்.

அங்கே... புத்தகப்பை சிதறிக் கிடக்க, சைக்கிளோடு கீழே விழுந்து கிடந்தான் குமார். அவன் நெற்றியில் கல் பட்டு வீங்கியிருந்தது. ப்ரதீப்பும் தமிழரசனும் அவனைத் தூக்கிவிட்டார்கள்.

"ஒண்ணுமில்ல விடுங்கப்பா" என்றபடி தலையைத் தடவிக் கொண்டே எழுந்தான் குமார்.

"சாரி, சாரி... நான் வேணும்ன்னே உன் மேல எறியல. மாங்காய் அடிக்கத்தான் எறிஞ்சேன்" என்று குனிந்த தலையுடன் அவனிடம் மன்னிப்புக் கேட்டான் ப்ரதீப்.

"தெரிந்தே யாராவது கல் எடுத்து அடிப்பாங்களா? உன் மேல ஒண்ணும் தப்பில்ல. எனக்கு எந்தவிதத்திலும் கோபம் இல்ல. நீங்க போங்க, நான் வீட்டுக்குப் போயி வேற துணி மாத்திட்டு வந்துடறேன்" என்றபடி சைக்கிளை எடுத்துக்கொண்டு கிளம்பினான் குமார்.

"குமார், ஒரு நிமிஷம். நானும் உன் கூட வர்றேன். தமிழரசா, நீ பள்ளிக்கூடம் போ. நான் குமாருடன் போயிட்டு, அவனை அழைச்சிட்டு வந்துடறேன்" என்ற ப்ரதீப்பை ஆச்சரியமாகப் பார்த்தான் தமிழரசன்.

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

08.02.2018

- 1587 - இங்கிலாந்தின் முதலாம் எலிசபெத்தை கொலை செய்ய முயற்சித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு ஸ்கொட்லாந்து அரசி முதலாம் மேரி தூக்கிலிடப்பட்டாள்.
- 1622 - இங்கிலாந்தின் முதலாம் ஜேம்ஸ் மன்னன் இங்கிலாந்தின் நாடாளுமன்றத்தைக் கலைத்தான்.
- 1924 - ஐக்கிய அமெரிக்காவில் மரண தண்டனைகளுக்கு முதற் தடவையாக நச்சு வாயுவை பயன்படுத்தும் முறை நெவாடாவில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1956 - இலங்கையில் சிங்களம் மட்டும் சட்டம் களனி மாநாட்டில் அறிவிக்கப்பட்டது.
- 1971 - நாஸ்டாக் பங்குச்சந்தைக் குறியீடு அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1974 - 84 நாட்கள் விண்ணில் சஞ்சரித்த பின்னர் முதலாவது அமெரிக்க விண்வெளி ஆய்வுகூட ஸ்கைலாப் 4 வீரர்கள் பூமி திரும்பினர்.
- 2005 - இஸ்ரேலும் பாலஸ்தீனமும் போர்நிறுத்தத்திற்கு உடன்பட்டன.

**பிறப்புகள்**

- 1641 - றொபர்ட் நொக்ஸ், பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியின் ஆங்கிலேய கப்பல் மீகாமன் (இ. 1720)
- 1850 - கேட் சோப்பின், அமெரிக்க எழுத்தாளர் (இ. 1904)
- 1897 - சாகீர் உசேன், இந்தியாவின் 3வது குடியரசுத் தலைவர் (இ. 1969)
- 1903 - துங்கு அப்துல் ரகுமான், மலேசியாவின் முதலாவது பிரதமர் (இ. 1990)
- 1921 - மு. மு. இஸ்மாயில், தமிழக நீதியரசர், தமிழறிஞர், எழுத்தாளர் (இ. 2005)
- 1928 - லூசு மோகன், தமிழ்த் திரைப்பட நடிகர் (இ. 2012)
- 1937 - ஏ. எச். எம். அஸ்வர், இலங்கை அரசியல்வாதி (இ. 2017)
- 1963 - முகமது அசாருதீன், இந்தியத் துடுப்பாளர், அரசியல்வாதி

**இறப்புகள்**

- 1587 - ஸ்கொட்லாந்தின் முதலாம் மேரி (பி. 1542)
- 1725 - உருசியாவின் முதலாம் பேதுரு, உருசியப் பேரரசர் (பி. 1672)
- 1957 - வால்தெர் பொதே, நோபல் பரிசு பெற்ற செருமானிய இயற்பியலாளர் (பி. 1891)
- 1957 - ஜான் வான் நியுமேன், அங்கேரிய-அமெரிக்க கணிதவியலாளர், இயற்பியலாளர் (பி. 1903)
- 1971 - கே. எம். முன்ஷி, இந்திய விடுதலைப் போராட்ட வீரர், அரசியல்வாதி, எழுத்தாளர் (பி. 1887)
- 1993 - நா. சண்முகதாசன், ஈழத்தமிழ்த் தொழிற்சங்கவாதி, அரசியல்வாதி (பி. 1920)
- 2005 - அரியநாயகம்சந்திரநேரு, இலங்கைத்தமிழ் அரசியல்வாதி, மனித உரிமை ஆர்வலர்
- 2007 - ஆன்னா நிக்கோல் இசுமித், அமெரிக்க நடிகை (பி. 1967)
- 2007 - இயான் ஸ்டீவன்சன், கனடிய-அமெரிக்க உளவியல் மருத்துவர் (பி. 1918)
- 2014 - பிரேம்ஜி ஞானசுந்தரம், இலங்கை முற்போக்கு எழுத்தாளர், பத்திரிகையாளர், பதிப்பாளர் (பி. 1930)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 60 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 50 | 50 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 80 | 60 | 100 | 100 | 100 |
| தக்காளி | 40 | 40 | 70 | 40 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 50 | 40 | 40 |
| கோவா | 80 | 50 | 50 | 60 | 60 |
| கரட் | 60 | 80 | 100 | 100 | 160 |
| பூசணி | 80 | 30 | 40 | 5 | 60 |
| புடோல் | 60 | 50 | 65 | 80 | 80 |
| வாழைக்காய் | 60 | 50 | 70 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 140 | 180 | 160 | 140 | 200 |
| பெரிய வெங்காயம் | 120 | 100 | 80 | 120 | 100 |
| பாகற்காய் | 100 | 100 | 120 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 120 | 80 | 100 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 50 | 60 | 60 |
| பயற்றங்காய் | 100 | 100 | 140 | 160 | 80 |
| லீக்ஸ் | 150 | 220 | 220 | 200 | 200 |
| பீற்றூட் | 60 | 50 | 60 | 60 | 80 |
| கறிமிளகாய் | 150 | 100 | 150 | 200 | 160 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 800 | 800 | 800 |
| போஞ்சி | 60 | 100 | 90 | 100-200 | 120 |
| கத்தரிதம்புள்ள | 50 | 30 | — | 50 | 60 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 20 | 30 | 40 |
| தேசிக்காய் | 20 | 10 | 50 | 50 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 75 | 100 | 75 |
| இராசவள்ளி | 180 | 100 | 140 | 160 | 200 |
| வெங்காயப்பூ | 80 | 50 | 90 | 100 | 120 |
| முள்ளங்கி | 20 | 50 | 50 | 40 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 50 | 40 | 40 |
| வல்லாரை | 10 | 20 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 50 | — | 80 | 80 |

ஆடம்பரத்தின் மென்மையான மெத்தையின் மீதுதான் பெரும்பாலான ராஜ்யங்கள் அழிந்தன.
- ஆலன் தார்ன்ஹில்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தந்தது உன் தன்னை கொண்டது என் தன்னை...

*தந்தது உன் தன்னை கொண்டது என் தன்னை...* என்பது மணிவாசகரின் வார்த்தை.

இதை நாம் கூறும்போது, ஐயா எல்லாம் மறந்து மணிவாசகர்போல் ஆனந்தமனோ நிலையில் இருக்கிறீர்களோ! என்று நீங்கள் யாரேனும் கேட்டால் அப்படியேதும் இல்லை.

*தந்தது உன் தன்னை கொண்டது என் தன்னை...* என்று மணிவாசகர் கூறிய நிலைமை இப்போது தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் விரும்புவது தமிழ் அரசியல் ஒற்றுமைப்பட வேண்டும் என்பதுதான்.

இந்த விருப்பத்தை தமிழ் மக்களே நிறைவேற்றக்கூடிய சந்தர்ப்பம் இப்போது ஏற்பட்டுள்ளது.

அன்புக்குரிய தமிழ் உறவுகளே! நீங்கள் எதிர்பார்த்த தமிழர் அரசியல் ஒற்றுமை என்பது சாத்தியப்படாமல் போனமைக்குக் காரணம் என்னவென்று ஆராய்ந்தால், ஒரு தரப்பு அரசியலை, நாம் முழுமையாக நம்பியிருந்தது தான்.

அதாவது அவர்கள் செய்வார்கள்; அவர்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று நாம் நினைத்துக் கொண்டிருக்க, அந்த ஒரு தரப்பு தன்னை வளர்த்துக் கொள்ள முற்பட்டது.

இதன் விளைவு தமிழினத்தின் உரிமைகள், அபிலாசைகள் என அனைத்தும் அடிபட்டுப் போய்; அந்த அரசியல் தரப்பிலும் வல்லமை மிக்கவர்களின் கை ஓங்கியது.

இதன் விளைவாக இன்று தமிழ் அரசியல் தலைமை எங்கே நிற்கிறது. யாருடைய பக்கத்தில் நிற்கிறது. இவர்களை நம்ப முடியுமா? என்ற ஏக்கம் தமிழ் மக்களைப் பற்றிக் கொண்டுள்ளது.

இவ்வாறான ஒரு அரசியல் சூழமைவு ஏற்பட்டுள்ள இவ்வேளையில், அதனை நிவர்த்தி செய்து அரசியலை திருத்தி அமைக்கக்கூடிய ஒரு சந்தர்ப்பம் மீண்டும் தமிழ் மக்களுக்குக் கிடைத்திருக்கிறது.

ஆம், பிரிட்டிஷ் பிரதமராக இருந்த மார்க்கிறட் தட்சர் அவர்கள் கூறிய கருத்து இது; எல்லா நாடுகளிடமும் ஆயுத பலம் இருப்பதால் தான் யுத்தம் இல்லாமல் இருக்கிறது.

மார்க்கிறட் தட்சரின் இக்கருத்து மிகவும் ஆழமானது. அவரின் அதே கருத்தின் வழி, தமிழ் மக்களும் ஒரு தரப்பு அரசியலை மட்டும் நம்பியிராமல்; நேர்மையான - ஆளுமையான - ஐ.நா சபை வரை சென்று குரல் கொடுக்கத் தக்கதான இன்னொரு தமிழ்த் தலைமையை பலம்மிக்கதாக ஆக்க வேண்டும்.

இவ்வாறு ஆக்கும்போது இயல்பாக ஒற்றுமை ஏற்படும் என்பது சர்வநிச்சயம்.

இதை விடுத்துபலமானவரை திரும்பவும் பலமாக்கும்போது தமிழரின் அரசியல் என்பது சர்வாதிகாரமாகி அகத்திலும் புறத்திலும் ஒரு சிலரின் ஆதிக்கம் மேலோங்கும்.

இந்த நிலைமையை மாற்றி அங்கே நீங்கள்; இங்கே இவர்கள் என்று ஒரு சமச்சீரான பலத்தை வழங்கும்போது, நீங்கள் எதிர்பார்த்த தமிழ் அரசியல் ஒற்றுமை தானாக வந்து சேரும்.

இதைச் செய்வது தமிழ் மக்களாகிய உங்களிடம் இருப்பதால் நீங்களே அதைச் செய்து முடியுங்கள்.

### வடக்கு- கிழக்கிலுள்ள பிள்ளைகளின் கழுத்தில்
# சயனைட் குப்பிகளை தொங்கவிட எமக்கு விருப்பம் இல்லை!

## கெஹலிய ரம்புக்வெல தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவை வெற்றி பெறச் செய்ய தமக்கு வழங்கப்பட்டதாக கூறப்படும் சமஷ்டி தீர்வுக்கும் அப்பால் சென்ற அரசியலமைப்பு சட்டத்தை பெற்றுக்கொடுக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோருவதாக ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் உள்ள தமிழர்களுடன் எமக்கு எந்த பிரச்சினையும் இல்லை.

நாட்டிற்கு வெளியில் இருக்கும் இலங்கைக்கு வர விரும்பாத பிரிவினைவாதத்தை ஊக்குவிக்கும் அணிகளுடன் எமக்கு பிரச்சினைகள் உள்ளன.

போர் முடிவுக்கு வந்த தன் மூலம் முக்கியமாக சுதந்திரம் பெற்றவர்களாக வடக்கு - கிழக்கில் உள்ள தமிழர்களே உள்ளனர்.

அங்குள்ள பிள்ளைகளின் கழுத்தில் சயனைட் குப்பிகளை தொங்கவிட எவரும் இல்லை. அங்குள்ள பிள்ளைகள் பாடசாலைகளுக்கு செல்கின்றனர்.

உயர்தரத்தில் கணிதப் பிரிவில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த மாணவனே முதலிடம் பெற்றார். அந்தளவுக்கு நிலைமைகள் மாறியுள்ளன.

எனினும் இலங்கையில் இருந்து சென்று வெளிநாடுகளில் குடியேறியுள்ள சில அணியினர் பிரிவினை வாதத்தை தூண்டி வருகின்றனர் எனவும் கெஹலிய ரம்புக்வெல மேலும் தெரிவித்தார். (இ-7)

## இடம்பெயர்ந்த வாக்காளர்களுக்கு
### வாக்களிப்பதற்கான போக்குவரத்து வசதிகள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு பிரதேசத்திலிருந்து இடம் பெயர்ந்து பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் வாக்காளர்களுக்கான வாக்கெடுப்பு நிலை யங்களுக்கு 2018.02.10 அன்று தேர்தலில் வாக்களிக்க செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் பின்வரும் பாதையூடாக நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த போக்குவரத்து வசதிகளை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

பேருந்து செல்லும் பாதை, கற்கோவளம் மெதடிஸ்த மிசன் பாடசாலை - முனை-பருத்தித்துறை-வியாபாரிமூலை - பொலிகண்டி - வல்வெட்டித்துறை - தொண்டமானாறு (கடற்கரை வீதி) ஊடாக வாக்களிப்பு நிலையங்களுக்கு சென்றடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## வதிரியில் கோஷ்டி மோதல்; 5 இளைஞர்கள் படுகாயம்

(கரணவாய்)

நெல்லியடி வதிரிப் பகுதியில் இளைஞர் குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற கோஷ்டி மோதல் சம்பவத்தில் படுகாயங்களுக்குள்ளான ஐவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 10 மணியளவில் இளைஞர் குழுக்களுக்கிடையில் மோதல் ஏற்பட்டதாகவும் இதில் அவர்கள் கையில் அகப்பட்ட பொருட்களைக் கொண்டு ஒருவரை யொருவர் தாக்கியதாகவும் கூறப்படுகிறது.

இதில் வதிரிப் பகுதியைச் சேர்ந்த மூன்று இளைஞர்களும் அல்வாய்ப் பகுதியைச் சேர்ந்த இரண்டு இளைஞர்களும் படுகாயங்களுக்கு உள்ளாகினர்.

வதிரிச் சந்திப் பகுதியில் கூடும் இளைஞர்களினால் பொதுமக்களுக்கு பெரும் அசௌகரியம் ஏற்படுவதாக பொதுமக்களினால் நெல்லியடிப் பொலிஸாருக்கு பல முறை தெரியப்படுத்தியும் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை எனப் பொது மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். (இ-60)

## யாழ்.போதனாவில் பொன்னிற மோதிரம்
### ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளவும்

05.02.2018ஆம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் பொன்னிறமான மோதிரமொன்று கண்டெடுக்கப்பட்டு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் ஆதாரம் காட்டி யாழ்.போதனா வைத்தியசாலையின் அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ள முடியும் என யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ம)

## மக்கள் வங்கி பணியாளர்களின் பணிப்புறக்கணிப்பு இடைநிறுத்தம்

மக்கள் வங்கி பணியாளர்கள் நேற்று நடத்துவதற்கு திட்டமிட்டிருந்த பணிப்புறக்கணிப்பானது தற்காலிகமாக இடைநிறுத் தப்பட்டுள்ளதாக வங்கிபணியாளர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

4 அம்சக் கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு இவர்கள் பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்க திட்டமிட்டிருந்தனர்.

எனினும் மக்கள் வங்கியின் தலைவரால் நியமிக்கப்பட்ட உபகுழு குறித்த பணியாளர்களின் பிரச்சினைக்குத் தீர்வினைப் பெறுத்தருவதாக நேற்று முன்தினம் இரவு வாக்குறுதியளித்ததாக வங்கி பணியாளர்கள் சங்கத்தின் செயலாளர் ரஞ்சன் சேனநாயக்க தெரிவித்துள்ளார். (இ-7)

## வீரம் மிக்க சிவராத்திரி

பரம்பொருளாகிய இராமர் ஆத்மாவாகிய சீதையை தீய குணங்கள் என்ற இராவணனிடம் இருந்து மீட்டெடுத்தது போல் சிவராத்திரியின் கதாநாயகன் ஞானத்தை அருளி, அவரது குழந்தைகளாகிய நம்மையும் சிறந்த வீரர்கள் ஆக்குகிறார். வீரம் என்பது என்ன, வீர தம் பொருந்திய பராக்கிரமசாலிகள் யார், வீரம் ஒருவருக்குள் செறிவது எப்படி? இதை இனங்காண்பதற்குத்தான் விவேகம் அவசியமாகிறது.

ஒருவருடைய தேவ குணங்களுக்கும் அசுர குணங்களுக்கும் இடையில் இடம்பெறும் போரில் தெய்வீக குணங்கள் வெற்றியடைகின்றன. எந்தச் சூழ்நிலையிலும் எங்கள் உண்மையான பகைவனை, எமது சீரழிவுக்குக் காரணமாகியவனை மிகச் சரியாக இனங்கண்டு அழிப்பதே ஆன்மீகமாகும்.

13 ஆம் திகதி செவ்வாய் மாலை 6 மணி முதல அடுத்த நாள் காலை 6 மணிவரை சுகதமம் மண்டபத்தில் இடம்பெறவிருக்கும் 12 மணித்தியால நிகழ்வுகளில் நாம் ஒவ்வொருவரும் வீரமும் விவேகமும் பொருந்தியவர்கள் ஆகலாம்.

தொடர்புகளுக்கு: 077 923 4562

**பிரம்மகுமாரிகள்**

## சத்திய தரிசனம்



### எதை மறக்க வேண்டும்

❖ அனைத்து உயிர்களிடமும் அன்பு காட்டப்பழகுங்கள். ஆண்டவன் உங்களிடம் எதிர்பார்க்கும் பக்தியின் அடிப்படை இதுதான்.


❖ தன்னடக்கம், தன்னம்பிக்கை, தொண்டு செய்யும் பணிவு இவற்றை முதலில் வீட்டிலும், தொடர்ந்து தெரு, ஊர், நாட்டிற்கும் செய்யுங்கள். படிப்படியாக உங்கள் உள்ளம் உயர்ந்துவிடும்.

❖ வாழ்க்கையில் பிறருக்கு நீங்கள் செய்த உதவியையும், பிறர் உங்களுக்குச் செய்த தீங்கையும் மறந்துவிடுங்கள்.

❖ செடி, மரம், புழு, பூச்சி, மீன்கள் தர்மத்தை மீறுவதில்லை. விதிக்கப்பட்ட கடமையை செய்யத் தவறுவதில்லை. மனிதன் தனக்குரிய தர்மத்தை மீறுவதுடன், தீங்கு செய்யாத உயிரினங்களையும் துன்புறுத்துகிறான். அத்தகையவர்கள் இறைவனைச் சிந்தித்து பண்பட வேண்டும்.

❖ வாய்க்கு உணவை எடுத்துச் செல்ல கைகள் வழங்கப்படவில்லை, மாறாக மலர்களால் இறைவனைப் பூஜிப்பதற்காகவே வழங்கப்பட்டுள்ளன. உணவு தேடி வாழ்வை நடத்துவதற்காக வாழ்வு வழங்கப்படவில்லை, கடவுளைத் தேடுவதற்காகவும், பிறருக்கு உதவி செய்யவுமே வழங்கப்பட்டுள்ளது.

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**விக்கல் ஏன் உண்டாகிறது?**

அவசரமாக உணவு உண்ணும் போதும் உணவருந்தும் போது சிரித்தாலும் விக்கல் ஏற்படும். மனித உடலில் தொண்டைப் பகுதியில் உள்ள சவ்வு மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் ஏதாவது சிக்கல் ஏற்படும்போது விக்கல் ஏற்படுகிறது. இதுபோன்ற நேரங்களில் தொண்டைக்குழாய் சுருங்கி, அதைத் தடுப்பதற்காக நாக்கின் உட்பகுதி அடைக்கப்படும் போது விக்கல் ஏற்படுகிறது. இது ஒரு நோயோ அல்லது நோயிற்கான அறிகுறியோ இல்லையென்றாலும் சில நோய்கள் உள்ளவர்களுக்கு தொடர்ச்சியான விக்கல் ஏற்படுவதுண்டு. (தொடரும்)

# விக்ரம்-ராஜன்-கங்கு வெற்றிக்கிண்ணம் இறுதிக்குள் நுழைந்தது பல்கலை. அணி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியின் பந்துவீச்சுக்கு முகங்கொடுக்க முடியாமல் கொக்குவில், மத்திய சனசமூக அணியினர் திணறினர். இமாலய வெற்றியைப் பெற்று, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி இறுதிக்குள் நுழைந்தது.

கொக்குவில் வளர்மதி விளையாட்டுக்கழகம், விக்ரம் - ராஜன் - கங்கு வெற்றிக் கிண்ணத்துக்காக, யாழ்ப்பாணத்தில் அழைக்கப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையில், அணிக்கு 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்றை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தி வருகின்றது.

கொக்குவில் மத்திய சனசமூக நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், ஜொலி ஸ்ரார்ஸ் மற்றும் வட்டுக் கோட்டை ஓல்ட் கோல்ட்ஸ் அணிகள் இதில் பங்குபற்று கின்றன. இந்தச் சுற்றுப் போட்டியின் ஆட்டங்கள் 3 ஆம் திகதி சனிக்கிழமை முதல் ஆரம்பமாகின.

கடந்த 4 ஆம் திகதி நடைபெற்ற முதல் ஆட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியை எதிர்த்து கொக்குவில் மத்திய சனசமூகநிலைய அணிமோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி, 28.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 228 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் செந்தூரன் 57, கல்கோவன் 43, நிதர்சன் ஆட்டமிழக்காமல் 32, தனுசன் 26 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி சார்பாக, சத்தியன் 42 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களையும், பிரதீஸ், நிருசிகன், சாம்பவன், ஜெயரூபன், விமலதாஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

229 ஓட்டங்கள் என்ற மிகப்பெரிய வெற்றியிலக்கை நோக்கி பதிலளித்தாடிய கொக் குவில் அணி, 17.2 ஓவர்களில் 75 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்களையும் இழ ந்து, 153 ஓட்டங்களால் படு தோல்வியடைந்தது.

துடுப்பாட் டத்தில் ஜெயரூபன் 21, சாம்ப வன் 17 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி சார்பாக, லோகதீஸ்வரன் 4, ஜனந்தன் 3, தனுஸ்க 3 விக்கெட்களையும் கைப்பற்றினர். (7-26)

# நாவாந்துறை கலைவாணி அணியின் உதைபந்தாட்ட முடிவுகள்

நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழகம், யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அணிக்கு 7 பேர் கொண்ட கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை கடந்த 2 ஆம் திகதி முதல் தமது விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்தி வருகின்றது.

மொத்தம் 32 அணிகள் இந்தச் சுற்றுப்போட்டிக்கு உள்வாங்கப்பட்டுள்ளதுடன், அணிகள் ஏ, பி என இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, முதற்சுற்று ஆட்டங்கள், விலகல் முறையில் நடைபெற்று வருகின்றன.

முதற்சுற்று ஆட்டங்களில் கடந்த 4 ஆம்திகதி நடைபெற்ற முதல் ஆட்டத்தில் வேலணை ஐயனார் அணியை எதிர்த்து சென்.றொக்ஸ் அணி மோதியது. இதில் வேலணை ஐயனார் அணி, 7:0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது.

அன்றைய தினம் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து கரணவாய் கொலின்ஸ் அணி மோதியது. இதில் ஊரெழு றோயல் 4:2 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது.

5 ஆம் திகதி நடைபெற்ற முதல் ஆட்டத்தில், குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து ஒலிம்பியா விளையாட்டுக் கழகம் மோதியது. இதில் பாடும்மீன் அணி, 5:1 என்ற கோல்கள் கணக்கில் வென்றது.

அன்றையதினம் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணியை எதிர்த்து உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக்கழகம் மோதியது. இதில் திருக்குமரன் அணி, 4:2 என்ற கோல்கள் கணக்கில் வென்றது.

6 ஆம் திகதி நடைபெற்ற ஆட்டத்தில், நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை அணி மோதியது.

இதில் இரண்டு அணிகளும் தலா 2 கோல்களைப் பெற்றிருந்தன. தொடர்ந்து, இடம்பெற்ற சமநிலை தவிர்ப்பு உதையில் கலைமதி அணி, 4:3 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது. (க-26)

# பங்களாதேஷ் தொடரிலிருந்து காயத்தால் மத்தியூஸ் விலகல்

காயம் காரணமாக பங்களாதேசத்திற்கு எதிரான கடைசி டெஸ்ட் மற்றும் இரு பது-20 தொடரில் இருந்து மத்தியூஸ் விலகியுள்ளார்.

பங்களாதேசத்தில் இலங்கை, பங்களாதேசம் மற்றும் சிம்பாவே அணிகளுக்கு இடையிலான முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடர் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து பங்களாதேசம் - இலங்கை இடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது. அதன்பின் இர ண்டு போட்டிகள் கொண்ட இரு பது-20 கிரிக்கெட் தொடர் நடக்கிறது.

முத்தரப்பு ஒருநாள் போட்டியின்போது மத்தியூஸ் காயமடைந்தார். இதனால் சிட்டகாங்கில் நடைபெற்ற முதல் டெஸ்டில் பங்கேற்க வில்லை. 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட்



நாளை டாக்காவில் தொடங்குகிறது.

மத்தியூஸின் காயம் குணமடையாததால் 2 ஆவது டெஸ்ட் மற்றும் இரு பது-20 தொடரில் விளையாடமாட்டார் என்று கூறப்பட்டுள்ளது.

பங்களாதேசத்திற்கு எதிரான தொடர் முடிவடைந்ததுடன் இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடர் இலங்கையில் மார்ச் 8 ஆம் திகதி தொடங்குகிறது. இந்த தொடரில் பங்கேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

மத்தியூஸ் காயம் குறித்து இலங்கை தலைமை தேர்வாளர் கூறுகையில் பங்களாதேசத்திற்கு எதிரான இரண்டு ஆட்டங்களுக்காக மத்தியூஸ் விவகாரத்தில் ரிஸ்க் எடுக்க நாங்கள் விரும்பவில்லை.

எங்களுடைய திட் டம் மத்தியூஸ் இலங்கையில் அடுத்த மாதம் நடைபெறும் முத்தரப்பு தொடரில் பங்கேற்க வேண்டும் என்பது தான் என்றார். (7)

# ரோஹித் சிறப்பாக விளையாட நல்ல இன்னிங்ஸ் தேவை ஆரம்ப துடுப்பாட்டவீரர் தவான் தெரிவிப்பு

தென்னாபிரிக்கா தொடரில் ரோகித் சர்மா மோசமாக விளையாடுவது குறித்து கவலைப்பட தேவையில்லை என ஆரம்ப துடுப்பாட்ட வீரர் தவான் கூறியுள்ளார்.

இந்தியா - தென்னா பிரிக்கா இடையிலான 6 போட்டிகள் கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது.

டர்பன், செஞ்சூரியனில் நடைபெற்ற முதல் இரண்டு போட்டிகளிலும் இந்தியா வெற்றி பெற்று 2:0 என முன்னிலையில் உள்ளது. இந்திய அணியின் தொடக்க



வீரர் ரோகித் சர்மா முதல் இரண்டு டெஸ்டிலும் மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அதேபோல் ஒருநாள் போட்டியிலும் சிறப்பாக விளையாடவில்லை.

தென்னாபிரிக்கா மண்ணில் பார்ம் இன்றி தவிக்கும் ரோகித் சர்மா குறித்து கவலைப்பட தேவையில்லை என்று தவான் கூறியுள்ளார்.

இதுகுறித்து தவான் கூறுகையில், சாஹல் மற்றும் குல்தீப் யாதவ் ஆகியோர் பிளாட் பிட்சியில் கூட பந்தை டர்ன் செய்வதால் அவர்களை எதிர்கொள்வது கடினம்.

அவர்களை வெளிநாட்டு வீரர்கள் எதிர்கொள்வது கடினம். ஏனென்றால், இது போன்ற டர்ன் பந்தை அவர்கள் விளையாடியது கிடையாது.

இரண்டு பந்து வீச்சாளர்களின் பந்தை கணிப்பது மிகவும் கடினம். சாஹலின் கூக்லி பந்தை கணிக்க தவறி விடுகிறார்கள்.

ரோகித் சர்மா சிறப்பாக விளையாடுகிறார் என்று நான் உணர்கிறேன். கடந்த போட்டியில் கூட ரோகித் சர்மா சிறப்பாக விளையாடினார்.

துரதிர்ஷ்டவசமாக அவர் ஆட்டமிழந்து விட்டார். அவருடைய துடுப்பாட்டங்களில் குறித்து கணக்கில் கொள்ள வேண்டும் என்று நான் நினைக்கவில்லை.

சம்பியன்ஸ் டிராபியில் இருந்து தற்போது வரை சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார். சில சமயம் ஓட்டங்கள் குவிக்க இயலாமல் போய்விடும். இதனால் அவரது பார்ம் குறித்து பெரியளவில் கவலைப்பட தேவையில்லை. ஒரு இன்னிங்சில் சிறப்பாக விளையாடினால், அனைத்து பிரச்சினையும் தீர்ந்து விடும் என்றார். (7)

# ஆசிய பட்மின்டன் தொடரில் இந்திய அணிகள் வெற்றி

ஆசிய பட்மின்டன் அணிகள் சம்பியன்ஷிப் போட்டி மலேசியாவில் நேற்று தொடங்கியது. இந்த போட்டியில் இந்திய அணிகள் வெற்றி பெற்றுள்ளனர்.

ஆசிய பட்மின்டன் அணிகள் சம்பியன்ஷிப் போட்டி மலேசியாவில் நேற்று தொடங்கியது. இதன் பெண்கள் பிரிவில் இந்திய அணி 3-2 என்ற கணக்கில் ஹொங்கொங்கை வீழ்த்தியது. ஒற்றையர் ஆட்டத்தில் இந்திய வீராங்கனை பி.வி.சிந்து 21-12, 21-18 என்ற நேர் செட்டில் யிப்புய் யின்னை (ஹொங்கொங்) தோற்கடித்தார். இரட்டையர் ஆட்டத்தில் சிந்து, சிக்கி ரெட்டியுடன் இணைந்து 21-15, 15-21, 21-14 என்ற செட் கணக்கில் டிஸ் யாவ்-யுன் சின் யிங் ஜோடியை வீழ்த்தினார். ஒற்றையர் ஆட்டத்தில் இந்திய வீராங்கனை கிருஷ்ணபிரியாவும், இரட்டையர் ஆட்டத்தில் இந்தியாவின் அஸ்வினி-பிரஜக்தா சவாந்த் ஜோடியும் தோல்வியை சந்தித்தது. மற்றொரு ஒற்றையர் ஆட்டத்தில் இந்திய வீராங்கனை ருத்விகா ஷிவானி காதே 16-21, 21-16, 21-13 என்ற செட் கணக்கில் ஹொங்கொங்கின் யுங்சும்யீயை வீழ்த்தி அணிக்கு வெற்றியை தேடிக்கொடுத்தார். காயம் காரணமாக சாய்னா நேவால் இந்த போட்டியில் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆண்கள் பிரிவில் எல்லா ஆட்டங்களிலும் ஆதிக்கம் செலுத்திய இந்திய அணி 5-0 என்ற கணக்கில் பிலிப்பைன்ஸை எளிதில் ஊதி தள்ளியது. இந்திய வீரர்கள் ஸ்ரீகாந்த், சாய் பிரனீத், சமீர் வர்மா ஆகியோர் ஒற்றையர் ஆட்டங்களிலும், அர்ஜுன்-ராமச்சந்திரன் ஷோக், மனு அட்ரி-ராங்கி ரெட்டி ஜோடி இரட்டையர் ஆட்டங்களிலும் வெற்றியை பெற்றது. (7)

# இந்திய இளம் வீரர்களுக்கு ரூ.30 இலட்சம் போதாது

## ராகுல் டிராவிட் கவலை

ஜுனியர் உலகக் கிண்ணத்தை வென்ற இந்திய இளம் வீரர்களுக்கு ரூ.30 லட்சம் போதாது என பயிற்சியாளர் ராகுல் டிராவிட் கூறியுள்ளார்.

நியூசிலாந்தில் நடைபெற்ற 19 வயதுக்குட்பட்டவருக் கான ஐ.சி.சி. உலகக் கிண் ணக் கிரிக்கெட் போட்டியில் இந்தியா கிண்ணம் வென்றது.

இதன்மூலம் இந்திய அணி 4 முறை ஜுனியர் உல கக் கிண்ணத்தை வென்று முத்திரை பதித்தது.

உலகக் கிண்ணத்தை வென்ற பிரித்விஷா தலைமையிலான இந்திய அணி நேற்று முன்தினம் மும்பை திரும்பியது.

விமான நிலையத்தில் வீரர்களுக்கு மும்பை கிரிக்கெட் சங்கம் சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதற்கிடையே ஜுனியர் உலககோப்பையை வென்ற இந்திய வீரர்களுக்கு வழங்கப்பட்ட பரிசு தொகை தொடர்பாக பயிற்சியாளர் ராகுல் டிராவிட் அதிருப்தி அடைந்ததாக தகவல் வெளியாகி உள்ளது.

உலகக் கோப்பையை வென்ற இந்திய வீரர்களுக்கு தலா ரூ.30 இலட்சம் அறிவிக்கப்பட்டது. பயிற்சியாளர் டிராவிட்டுக்கு ரூ.50 லட்சமும், அவருக்கு உதவியாக இருந்த வர்களுக்கு ரூ.20 இலட்சமும் அறிவிக்கப்பட்டது.

இளம் வீரர்களுக்கு ரூ. 30 இலட்சம் போதாது என்றும், அனைவரும் ஒரே மாதிரியான பரிசு தொகையை அறிவித்து இருக்க வேண்டும் என் றும் டிராவிட் அதிருப்தி தெரி வித்ததாக கூறப்படுகிறது.

மேலும் தனக்கு உதவியாக இருந்த பந்து வீச்சு பயிற்சியாளர், பீல்டிங் பயிற்சியாளர், பிசியோரெபி உடல் இயக்க நிபுணர் மற்றும் மேலும் 2 பேருக்கு ரூ.20 இலட்சம் அறிவித்துவிட்டு தனக்கு மட்டும் ரூ.50 இலட்சம் வழங்குவது சரிதானா? என்றும் டிராவிட் கேள்வி எழுப்பி உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (7)

## காணாமல் ஆக்க...

விட்டீர்களா் என்று வட மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் கேள்வியெழுப்பியுள்ளதுடன் அவ்வாறு கொலைக் குற்றத்தில் ஈடுபட்டவர்கள் யார் என்பதையும் பகிரங்கமாக கூறவேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரத்தில் கலந்துகொண்டு பேசும் போது காணாமல் ஆக்கப்பட்டோரை தேடிப் பார்த்தோம் காணவில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ள்மை மாபெரும் இனப்படுகொலை குற்றத்தை சர்வ சாதாரணமான பதிலுரைப்பின் மூலம் மூடி மறைக்கும் எத்தனிப்பாகவே அமைந்துள்ளது.

போர் முடிவின் இறுதி காலகட்டத்தில் எமது உறவுகளை எங்களது கைகளால் இலங்கை இராணுவத்திடம் ஒப்படைத்திருந்தோம். இது உலகறிந்த உண்மையாகும். அவ்வாறு ஒப்படைக்கப்பட்டவர்கள் ஓரிருவர் அல்ல ஆயிரக்கண்க்கிலான உறவுகளை கையளித்திருந்தோம். சுய நினைவாற்றலுடன் நல்ல தேக ஆரோக்கியமான நிலையில் முழு மனிதர்களாக எங்களால் உங்கள் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட எங்கள் உறவுகள் எங்கே? அவர்களுக்கு என்ன நடந்தது?

எமது உறவுகளை கையேற்ற இலங்கை இராணுவத்தினர், அவர்களை இரகசிய தடுப்பு முகாம்களில் அடைத்து வைத்திருந்தவர்கள். அவ்வாறு அடைத்து வைக்க உத்தரவிட்டவர்கள், அடைத்து வைக்கப்பட்டிருந்தவர்களை படுகொலை செய்தவர்கள், படுகொலை செய்யுமாறு உத்தரவிட்டவர்கள் என அனைவர், குறித்தும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பகிரங்கமாக அறிவிப்பு செய்ய வேண்டும்.

தத்தமது பிராந்திய நலன்களுக்கு இசைவாகச் செயற்பட்டுவரும் இந்த நல்லாட்சி அரசாங்கத்துடன் தமிழர் தரப்பாகிய எம்மை இணங்கிப் போகுமாறு போதிக்கும் அனைத்துலக நாடுகள் இதற்கு பொறுப்பேற்றேயாக வேண்டும். நாங்கள் எழுப்பும் தார்மீக கேள்விகளை அனைத்துலக நாடுகளும் மனித உரிமை அமைப்புகளும் ஐக்கிய நாடுகள் சபையும் இலங்கை அரசாங்கத்தை நோக்கி எழுப்பியே ஆகவேண்டும்.

இலங்கையில் இரகசிய சித்திரவதை முகாம்கள் இருப்பதையும் அதில் தமிழர்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பது குறித்தும் சர்வதேச மனித உரிமை பிரதிநிதிகள் ஆதாரங்களுடன் வெளியிட்டிருந்தார்கள். இதனை முன்னாள் ஜனாதிபதியும் இச்சம்பவங்களுடன் நேரடியாக தொடர்புடைய ஆட்சிக்காலததில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகவும் முப்படைகளின் தலைவராகவும் விளங்கிய மகிந்த ராஜபக்ஷ ஏற்றுக் கொண்டிருந்தார்.

அவ்வாறு இரகசிய சித்திரவதை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழர்கள் குறித்த பட்டியலை வெளியிடுவதாகவும் மகிந்த ராஜபக்ஷ சர்வதேச மன்றத்தில் வாக்குறுதியளித்திருந்தார். 2015 ஜனவரி 08 இற்கு முன்னர் இருந்த இரகசிய சித்திரவதை முகாம்கள் வேண்டுமானால் இன்று இல்லாது போயிருக்கலாம். ஆனால் அவற்றில் சட்டவிரோதமாக தடுத்துவைக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்ட தமிழர்கள் எவ்வாறு இல்லாமல் போனார்கள்? இதற்கு இந்த நல்லாட்சி அரசாங்கமே முழுப்பொறுப்பேற்க வேண்டும்.

இத்தருணத்தில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கேட்டு போராடிவரும் எமது உறவுகளிடம் மிகத்தாழ்மையாக கேட்டுக்கொள்வது ஒன்றே ஒன்றுதான். காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது? என்ற உண்மை வெளிக்கொண்டுவரப்பட வேண்டும். இன்றும் உயிரோடுதான் இருப்பார்களேயானால் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு சர்வதேச சட்டதிட்டங்களுக்கு அமைவாக விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். அவ்வாறு இல்லாவே இல்லை என்றால் அதற்கு காரணமானவர்கள் சட்டத்திற்கு முன் நிறுத்தப்பட்டு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதில் நாம் மிகவும் உறுதியாக இருக்க வேண்டும்.

இவ்விடயத்தில் உங்களுக்கும் மாற்றுக் கருத்து இருக்காது என்று திடமாக நம்புகின்றேன். நாம் அங்கொன்றும் இங்கொன்றுமாக பிரிந்து நின்று தனித்தனியே இனியும் போராட்டங்களைத் தொடர்வோமாயின் தேடினோம் கிடைக்கவில்லை என்று கூறியதைப் போன்ற அலட்சியமான பதிலுரைப்புகள் மூலம் காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் கைகழுவிவிடப்படும். அனைத்துலகமும் தனக்கென்ன என்ற போக்கில் வாழாதிருக்கும் என தெரிவித்தார். (ம-4)

## விசாரணை அறிக்கை...

யானது இன்னும் அவர்களுக்கு சென்றடையவில்லை என ஊர்காவற்றுறை நீதிமன்று தெரிவித்துள்ளது.

குறித்த வழக்கானது நேற்றைய தினம் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.எம்.எம்.றியால் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே மேற்படி விடயமானது மன்றால் குறிப்பிடப்பட்டிருந்தது.

நேற்றைய வழக்கு விசாரணையின் போது சந்தேகநபர் சார்பாக சட்டத்தரணி திருக்குமார் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பில் சட்டத்தரணி சுகாஸ் சார்பாக சட்டத்தரணி ஷாலினி முன்னிலையாகியிருந்தனர்.

இதன்போதே நீதவான் மேற்படி விடயத்தை குறிப்பிட்டு இவ் வழக்கின் விசாரணையை எதிர்வரும் 21ஆம் திகதி வரை ஒத்தி வைத்ததுடன் அதுவரை சந்தேக நபர்கள் இருவரையும் விளக்கமறியலில் வைக்கவும் உத்தரவிட்டார்.

இதேவேளை கடந்த ஒரு வருடங்களுககு முன்பு குறித்த கர்ப்பிணி பெண் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டிருந்த போதும் அது தொடர்பான விசாரணையானது ஒரு வருடங்களின் பின்னரே குற்றப் புலனாய்வு பிரிவினருக்கு மாற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (ம-4)

## த.தே.கூட்டமை...

கொழும்பில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

தொடர்ந்தும் அவர் அங்கு கருத்து தெரிவிக்கையில்,

அண்மையில் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பான விவாதத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கலந்து கொள்ளவில்லை.

மத்திய வங்கி ஊழலின் பிரதான குற்றவாளியான அர்ஜுன் மகேந்திரன் மூலம் ராஜ் ராஜரத்தினம் விடுதலைப்புலிகளுக்கு உதவிகள் புரிந்து வந்ததாக பலவித குற்றச்சாட்டுகள் உண்டு என்பதை உலகமே அறியும்.

இவ்வாறாக தமது பிரிவினைவாத கொள்கைக்கு உதவி புரிந்த அர்ஜுன் மகேந்திரனுக்கு எதிராக செயற்பட விரும்பாத காரணத்தினாலேயே எதிர்க்கட்சி மத்திய வங்கி ஊழல் விவாதத்தை புறக்கணித்துள்ளார்கள் என நாம் கருதுகின்றோம் என தெரிவித்தார். (ம)

## 22 மில்லியன் பெறுமதி...

ரால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அது தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுமுள்ளனர்.

காங்கேசன்துறை கடற்பரப்பில் 11 கடல மைல் தொலைவில் வைத்தே மேற்படி தங்கக் கட்டிகளானது கைப்பற்றப்பட்டிருந்ததுடன் அவற்றின் மொத்த நிறையானது 3.7 கிலோ கிராமாகும் எனவும் கடற்படை அலுவலகம் அறிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு காங்கேசன் துறை கடற்பரப்பில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த கடற்படையானது சந்தேகத்திற்கு இடமான முறையில் பயணித்த படகொன்றை சோதனையிட்டிருந்தது. இதன் போதே படகில் இவ் தங்கக்கட்டிகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

குறித்த தங்கக்கட்டிகளானது பிஸ்கட்டுகளாக காணப்பட்டதாகவும் அவை ஒவ்வொன்றும் 100கிராம் நிறையுடையனவாக காணப்பட்டதாகவும் கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். அத்துடன் இதன்போது தங்கக்கட்டிகளை கடத்தி சென்ற இரண்டு சந்தேகநபர்களையும் கடற்படையினர் கைது செய்திருந்தனர்.

மேலும் கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களையும் கைப்பற்றப்பட்ட தங்கக் கட்டிகளையும் யாழ்ப்பாணம் சுங்கப்பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளதாகவும் இது தொடர்பான மேலதிக சட்ட நடவடிக்கைகளை சுங்கப்பிரிவானது மேற்கொள்ளும் எனவும் கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ம-4)

## இலங்கைக்கு வருகிறார்...

வர்த்தகப் பிரதிநிதியாக இவர் வருகை தரவுள்ளார்.

இரு நாடுகளுக்குமிடையிலான இரு தரப்பு வர்த்தக உறவுகளை விருத்தி செய்வது தொடர்பில் இலங்கையில் உள்ள உயர் மட்ட அதிகாரிகளுடன் இவர் கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது. (ம)

## வாக்கு சாவடியின்...

வாக்காளரிடம் வாக்களிக்குமாறு இரந்து கேட்டல் ஒருவருக்கு வாக்களிக்குமாறு பரிந்து கேட்டல். ஒரு கட்சிக்கு வாக்களிக்குமாறு அல்லது வாக்களிக்க வேண்டாம் என கட்டாயப் படுத்தல் என்பன தடை செய்யப்பட்டுள்ளன. (ம)

## தமிழ் மாணவர்...

களம் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என புத்திஜீவிகள் தெரிவித்துள்ளனர்.

நாளை மறுதினம் (எதிர்வரும் 10ஆம் திகதி) நாடளாவிய ரீதியில் உள்ளூராட்சி மன்ற தேர்தல் இடம்பெறவுள்ளது. இந்த நிலையில் பல்கலைக்கழகங்கள், கல்வியியற் கல்லூரிகள் தொழில்நுட்ப கல்லூரிகளில் கல்விகற்கும் மாணவர்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக தென்பகுதியில் உள்ள பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் புது முக தமிழ் மாணவர்களை விடுமுறையில் செல்வதற்கு மூத்த மாணவர்கள் அனுமதி வழங்காமல் உள்ளார்கள் என்றும் தற்போது பகிடிவதை காலம் இருப்பதால் புதுமுக மாணவர்கள் மூத்த மாணவர்களின் இந்த செயற்பாடு தொடர்பில் அதிருப்தி அடைந்துள்ளதுடன் இதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறும் குறித்த விடயத்தை பெற்றோர் நண்பர்கள் ஊடாக தெரியப்படுத்தியுள்ளனர்.

புதுமுக மணவர்களில் பெரும்பான்மையினத்தை சேர்ந்த மாணவர்களை விடுமுறையில் செல்ல அனுமதித்துள்ளதுடன் தமிழ மாணவர்களுக்கு மட்டுமே இந்த அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இது தமது வாக்குரிமையை மீறும் செயல் எனவும் மாணவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இது தொடர்பில் உரியவர்கள் தென்பகுதியில் உள்ள பல்கலைக்கழக நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு இவ்விடயத்தை கவனத்திலெடுத்து செயற்படுத்த வேண்டும் என புத்திஜீவிகள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ம-9)

## ஒரு கோடியே 54...

மன்னார் மாவட்டம் முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சிலாபத்துறை பகுதியில் வைத்து நேற்று புதன்கிழமை காலை சுமார் ஒரு கோடியே 54 இலட்சம் ரூபாய் பெறுமதியான கேரளக் கஞ்சா பொதிகளை மன்னார் பொலிஸ் நிலையத்தின் போதைப் பொருள் தடுப்பு பிரிவினர் கைப்பற்றியுள்ளதோடு, சந்தேகத்தின் பேரில் 3 சந்தேக நபர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மன்னார் பொலிஸ் அத்தியட்சகர் எச்.என்.சியந்த பீரிஸ் அவர்களின் வழிகாட்டலின் கீழ் செயற்பட்ட மன்னார் பொலிஸ் நிலையத்தின் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் மேற்கொண்ட துரித நடவடிக்கைகளின் மூலம் முசலி பிரதேச செயலாளர் பிரிவுக் குட்பட்ட சிலாபத்துறை பகுதியில் வைத்து நேற்று புதன்கிழமை காலை சுமார் ஒரு கோடியே 54 இலட்சம் ரூபாய் பெறுமதியான 154 கிலோ கிராம் எடை கொண்ட கேரளக் கஞ்சா பொதிகளை மீட்டுள்ளதோடு, சிலாபத்துறை பகுதியை சேர்ந்த 3 சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட குறித்த 3 சந்தேக நபர்களும் மன்னார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருவதோடு, விசாரணைகளின் பின் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த உள்ளதாகவும் மன்னார் பொலிஸ் நிலையத்தின் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ம-4)

## ஊழல் அரசியல்...

களுடன் இனியொருபோதும் ஆட்சியமைக்கப் போவதில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் இறுதிதேர்தல் பிரசார கூட்டம் நேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் பொலநறுவையில் இடம்பெற்றது. இதில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

மக்களின் ஆணைக்கு அமைய சகல குற்றவாளிகளையும் தண்டிப்பேன். தூய்மையான அரசியல் நகர்வுகளை மேற்கொள்ள, தேர்தலில் மிகப்பெரிய வெற்றியைப்பெற்றுக் கொள்ளும் நோக்கில் நாம் இணைந்துள்ளோம். இந்த நாட்டினை அபிவிருத்தி அடையச் செய்ய, ஒன்றிணைக்க, நாட்டையும் நகரையும கிராமங்களையும் அபிவிருத்தியடையச் செய்யும் தேர்தலாக மக்கள் இந்த தேர்தலை பயன்படுத்தவேண்டும்.

ஊழல் மோசடிகள் எந்தப் பக்கம் இருந்தாலும் யாராக இருந்தாலும் கட்சி, நட்பு, உறவு என்று எதையும் பார்க்காது குற்றவாளிகளுக்கு உரிய தண்டனையினை வழங்குவேன். யாரையும் பழிவாங்க நான் நினைக்கவில்லை. யாரையும் விமர்சிக்கவில்லை. அதேபோல, தவறு செய்யும் யாரையும் நான் பாதுகாக்கவோ, காப்பாற்றவோ தயாராக இல்லை. மக்கள் என்னை நம்புகின்றனர். மக்களின் நம்பிக்கையினை நான் பொய்யாக்கமாட்டேன்.

எமது மக்களின் பாதுகாப்பே முக்கியமானது. அதற்காக சகல நாடுகளுடனும் நட்புறவை பேணிஅவர்களுடனான உறவுகளை வளர்த்துக்கொள்ள முயற்சிப்பேன் என்றார். (ம)

## ஒரே நாளில்...

நேற்றையதினம் அங்கு மக்களை இராணுவம் அனுமதிக்கவில்லை என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பேருந்தினை மட்டும் பிரயாணம் செய்வதற்கு இராணுவம் அனுமதித்த நிலையில் பொது மக்கள் அவ் வழியூடாக வேறு வாகனங்களில் செல்ல அனுமதி அளிக்கப்பட வில்லை. பொது மக்களின் பாதுகாப்பு கருதியே அவ் வழியாக மக்களை விடவில்லை என இராணுவத்தரப்பில் இருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## தமிழ்த் தேசியக்...

தமிழ் மக்கள் கடந்த 70 வருடங்களாக நிராகரித்த ஒற்றையாட்சிக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஆதரவு கோருகின்றது. உள்ளூராட்சி தேர்தலின் முடிவுகளை இடைக்கால அறிக்கைக்கான ஆதரவாக அவர்கள் காட்ட போகின்றார்கள்.

எனவே தமிழ் மக்கள் இம்முறை தமிழ்த் தேசியத்தை, தமிழர் தாயகத்தை காப்பாற்ற முன்வர வேண்டும் என அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கேட்டுள்ளார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபை தேர்தலில் சைக்கிள் சின்னத்தில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களை ஆதரித்து நேற்று இரவு 7 மணியளவில் நல்லூர் கிட்டு பூங்கா வளாகத்தில் நடைபெற்ற இறுதிப் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

இடைக்கால அறிக்கையில் மிகத் தெளிவாக ஒற்றையாட்சி என்பது குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஒற்றையாட்சி என்பதற்கான அடிப்படை, இறைமை பகிரப்பட முடியாது. அதேவேளை சமஷ்டிக்கான அடிப்படை இறைமை பகிரப்படக் கூடியது.

ஆகவே இடைக்கால அறிக்கையின் முதலாம் பக்கத்தில் இறைமை பகிரப்பட முடியாததும் பராதீனப்படுத்தப்பட முடியாததும் என்று கூறப்பட்டுள்ளது. அப்படியானால் சமஷ்டி என்ற விடயம் இடைக்கால அறிக்கையில் உள்ளது என்பது மிகப்பெரிய பொய்யாகும்.

போர் உச்சக்கட்டத்தில் இருந்தபோது தேசிய தலைவர் வே.பிரபாகரனிடம் சர்வதேச நாடுகள் கேட்கின்றன. ஒற்றையாட்சிக்கு இணங்குங்கள். நாங்கள் போரை நிறைவுக்கு கொண்டுவருகிறோம். பின்னர் உங்களை ஒரு பெரிய தலைவராகவும் நாங்கள் அங்கீகரிக்கிறோம் என்று.

அப்போதும் தலைவர் அதனை நிராகரித்தார். ஒற்றையாட்சியினால் வெறுப்படைந்தே நாம் ஆயுதப்போராட்டத்தை ஆரம்பித்தோம்.

இப்போது நான் ஒற்றையாட்சிக்கு இணங்குவது தமிழர்களை அழிப்பதற்கு நானே ஒப்புதல் வழங்குவதற்கு நிகரானது என தேசிய தலைவர் பிரபாகரன் கூறினார்.

அப்படிப்பட்ட தலைவன் வாழ்ந்த மண்ணில், அப்படிப்பட்ட தலைவன் நடத்திய போரில், தங்கள் உயிர்களை தியாகம் செய்தவர்கள் வாழ்ந்த மண்ணில், அவர்கள் மடிந்த மண்ணில், இன்றைக்கு தமிழ்தேசிய கூட்டமைப்பு, ஐக்கிய தேசிய கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி போன்றவர்கள் ஒற்றையாட்சிக்கு மக்களிடம் ஆணை கேட்கிறார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒற்றையாட்சிக்கு இணங்கிவிட்டது, போரின் இறுதியில் நடைபெற்ற இன அழிப்புக்கு நீதி கோராமல், வெறும் ஆட்சி மாற்றத்தையே கோருகிறது என்பதை நாங்கள் தொடர்ந்து சுட்டிக் காட்டினோம். அவை இன்று நிதர்சனமாக நடந்து கொண்டிருக்கின்றது.

இன அழிப்புக்கான சர்வதேச விசாரணையை தமிழர்கள் கோரி நின்றபோதும் அது உள்ளக விசாரணையுடன் நின்றுவிட்டது. மகிந்த ராஜபக்ஷவும் இலங்கை இராணுவமும் காப்பாற்றப்பட்டுவிட்டனர். இதனைச் செய்ததன் மூலம் 2010ஆம் ஆண்டு தொடக்கம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தமிழர்களுக்கு துரோகமிழைத்து வருகிறது.

இதனை தமிழ் மக்கள் புரிந்து கொண்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கொள்கைக்கு ஆதரவு தர வேண்டும் என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அங்கு திரண்டிருந்த மக்களிடம் கேட்டுக்கொண்டார். (ம-4)

**Techno World** **A/L தொழில்நுட்ப பிரிவு**
(வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை - யாழ்.)
**A/L 2020 - திங்கள் - வெள்ளி 8.00 - 12.00**
**A/L Day Class - திங்கள் - வெள்ளி 8.00 - 1.00**
வார நாட்களில் பகலில் நடைபெறும்
ஒரேஒரு தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் **0770175346**
(C-1523)



## தவறிவிட்டது

யாழ் பஸ்தரிப்பிடத்திற்கும் காகிள்ஸ் வூட் சிற்றிக்கும் இடையே குறிக்கப்பட்ட தொகை பணம், வங்கி அடகுதுண்டு, வங்கி புத்தக உறையினுள் வைத்தபடி தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்து ஒப்படைப்பவர்களுக்கு 5000 ரூபாய் சன்மானமாக வழங்கப்படும்.

தொடர்பு : **071 833 4304** (2694)



**PSP Rent a Car Thirunelvely**
(யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீடம் முன்பாக)
கார்கள் நாள், கிழமை, மாதம் அடிப்படையில் வாடகைக்கு



- Prius hybrid - CAT
- Premio - CAB
- Premio - KF
- Axio - KM
- Axio - KL
- Axio - KI
- Axio - KJ
- Nissan 16 - KD
- Nissan 15 - KD
- Alto - KI
- Indica - KI

தொடர்பு: **0773777502, 0777852456**


## ஐஸ்கிறீம்...

தெரியவருவதாவது.

குறித்த ஐஸ்கிறீம் விற்பனையில் ஈடுபடும வாகனமானது நேற்றுமுன்தினம் பகல் பொழுதில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டதன் பின்னர் இரவு 7 மணியளவில் தினமும் வாகனம் தரித்து நிற்கும் இடமான அரசகேசரி பிள்ளையார் ஆலய வீதியில் நிறுத்தப்பட்டுள்ளது.

இதன் பின்னரே நள்ளிரவு நேரம் இனந்தெரியாத விசமிகளால் 16 இலட்சம் பெறுமதியான குறித்த வாகனம் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இரவுதீகொழுந்து விட்டு எரிந்த வாகனத்தினை கண்ட அயலில் இருந்த சிலர் தீயை அணைக்க முற்பட்ட போதும் அது பலனளிக்காமல் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து சம்பவ இடத்துக்கு வந்த கோபாய் பொலிஸார் அப்பகுதி இளைஞர்களுடன்இணைந்து தீயை அணைத்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து அருகிலுள்ள வியாபார நிலையங்களுக்கும் தீ பரவாமல் தடுத்ததுடன் விசாரணைகளையும் மேற் கொண்டதுடன் மேலதிக விசாரணையும் ஆரம்பித்துள்ளனர். (ம-87,9)


## வேலையாட்கள் தேவை

விற்பனை உதவியாளர்
(ஆண் 18-45 வயது)
வேலை நேரம் (7.30 am - 7.00 pm)
சம்பளம் 18000/=
பட்டா வாகனம் ஒட்டுநர் - 25000/=
**Dish** அன்ரனா பொருத்துவதற்கு ஆள்தேவை
T.P : 070 304 3634, 021 222 6807 (2679)



## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- [illegible]
- [illegible]
- [illegible]

(C-1509)



**UK-550/=Kg**
DELIVERY IN 3 - 5 DAYS
**V2 TRAVELS-0768226240**
யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



# VACANCIES

## CUSTOMER CARE ASSISTANTS

Seeking suitable candidates for employment on a full time long term basis for a data and call center office in Jaffna operating on a 24/7 basis for international clients.

Work entails direct worldwide customers' contact through various modes of communication. No previous experience required. Training will be initially provided in Colombo/Jaffna. Good communication skills, computer and basic accounts knowledge and command in English is essential. Additional ability in European, Arabic, Indian languages is a bonus. Starting monthly salary will be Rs24,000/- with increments based on performance, rising to above Rs60,000/= plus bonuses. Should be willing to work on shifts including nights based on roster.

Ladies : only day shifts. Please email your detailed CV to Audrey@bbkca.com ; not later than 20 February 2018. Shortlisted candidates only will be interviewed in Colombo or Vavuniya or Jaffna office. Previous applicants need not reapply. (C-2677)



## எவரெஸ்ட் குமாரிக்கா சந்தனாதி தைலம்



- நீண்ட கூந்தல் வளர்ச்சிக்கும்
- இளநரையை போக்கவும்
- பொடுகிலிருந்து நிவாரணம் பெறவும்
- கண் எரிச்சல், தலை வலியை நீக்கவும்
- ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்யவும்
- ஏழு வகையான மூலிகைகள் உள் அடங்கிய சிறப்பு தைலம்

100 வீதம் இயற்கையானது

(கற்றாழை, வல்லாரை, நெல்லிக்காய், கரிசலாங் கண்ணி, கறிவேப்பிலை, பொன்னாங்காணி, அவுரி மற்றும் விற்றமின் E) (1394)

எல்லா மருந்தகங்களிலும் சாதாரண கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்

தயாரிப்பு:
எவரெஸ்ட் மருந்தகம்,
உசன், மிருசுவில்,
யாழ்ப்பாணம்.

ஏக விநியோகஸ்தர்
பிரமநாதன் & Co
எண்.28, 26, பேரின்பநாயகம் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

கைபேசி எண்: 0776389356, 0777153571



## அமரர் வைத்திய கலாநிதி சோமசேகரம் சண்முகலிங்கம் அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலி

### காதலால் எங்களின் வாழ்விடம் தந்தவர்



கற்றவர் போற்றிடும் நற்றமிழ் வைத்தியர்
மற்றவர் வாழ்ந்திட தனி சேவை தந்தவர்
பிஞ்சுக் குழந்தைகள் நெஞ்சில் நிறைந்தவர்
மாற்றுவலுவுள்ளோர் மனங்களை வென்றவர்

பார்வையில் நிறைந்திடும் பக்குவம் மிக்கவர்
நேர்மையின் மகனாய் நிமிர்ந்து நின்றவர்
காண்பவர் மனதில் நிறைவைக் கொடுத்தவர்
இயலாமை எனும் சொல் இல்லாமல் செய்தவர்

தாரமாய் இருந்தும் எங்கள் துயரம் துடைத்தவர்
காதலால் எங்களின் வாழ்விடம் தந்தவர்
போதும் இவ் வாழ்வென புறப்பட்டுப் போனவர்
பார மனதுடன் பணிகின்றோம் பாதங்கள்

வென்றிடும் விதியினை வென்றவர் யாருளர்
விதியினை மாற்றிட வழி ஏதும் இல்லை
சென்றுவா, எங்கள் தந்தையே நாங்கள்
நன்றியை மறவோம் நாளும் நினைப்போம்

**அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.**

09.02.2018 நண்பகல் 11.30 மணிக்கு வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தில் நினைவுதின நிகழ்வு நடைபெறும். அந்நிகழ்வில் அன்னாரின் உறவினர்கள் ,நண்பர்கள், நலன்விரும்பிகள் அறோட் பிள்ளைகள் மற்றும் அறோட் பயனாளிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நிகழ்வின் பின் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.



வைத்திய கலாநிதி ந.சிவராஜா
தலைவர் வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம்
இல.47/2 , ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம். (2695)



## TECHNO WORLD
### A/L தொழில்நுட்பப் பிரிவு

**A/L 2018** இல் செயல்முறைப் பரீட்சைக்கு (Practical Exam) தோற்றும் தொழில்நுட்ப பிரிவு மாணவர்களுக்கான விசேட தொடர்ச்சியான செயலமர்வு.

**பொறியியல் தொழில்நுட்பம் (E-TEC)**

**ஆரம்பம் 09,11/02/2018 காலை 9.00 மணி**
(வெலிங்டன் சந்தி, புதிய லிங்கம் கூல்பார் அருகாமை)

| | |
|---|---|
| பிரபல ஆசிரியர் ஜெகநாதன் | இயந்திரவியல் (Auto mobile) |
| சேரலாதன் (தொழில்நுட்ப பீடம்) | உற்பத்தி தொழில்நுட்பம் |
| அருண்குமார் (J/MHC) | நில அளவை |
| சிவயன் (தொழில்நுட்ப பீடம்) | குடிசார் தொழில்நுட்பம் |
| நிரோஜன் (பொறியியல் பீடம்) | நில அளவை |
| நிருபன் (தொழில்நுட்ப பீடம்) | நில அளவை |
| பிரசாந்தன் (தொழில்நுட்ப பீடம்) | Electrical & Electronics |
| புவிராஜ் (தொழில்நுட்ப பீடம்) | Electrical & Electronics |

**உயிர்முறைமைகள் தொழில்நுட்பம் (BIO-TEC)**

திருக்குமரன் (J/NCC)
கலைதீபன் (J/NCC)
சாரங்கன் (K/KCC)
விஷ்ணு (யா/ சிதம்பராக் கல்லூரி)
பொன் சிவகுமார்

**குறிப்பு**

- யாழ். பல்கலைக்கழக தொழில்நுட்ப பீட மாணவர்களின் விசேட கருத்தரங்கு இடம்பெறும்.
- அகில இலங்கை ரீதியாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட முதலிடம் பெற்ற மாணவர்களின் கருத்தரங்கு இடம்பெறும்.
- 2018 பரீட்சையில் எதிர்பார்க்கப்படும் வினாக்கள் (விடைகளுடன்)
- கடந்த 2015, 2016, 2017 செயல்முறை வினாக்கள் விடைகளுடன் தரப்படும்

இன்றிலிருந்து முற்பதிவுகளை மேற்கொள்ளவும்.

**077 017 5346** (C-1523)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.02.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.